சுதந்திரத் திருநாள்
பொன்விழாச் சிறப்பிதழ்







# தமிழரசு

ஆகஸ்ட் 16-31, 1997 ரூ.3






## இந்த இதழில்...


நல்லோர் வழியில் நடைபோடுவோம் ... 2

தியாகத்தைப் போற்றிடுவோம் ... 9
- முதல்வர் கலைஞர்

மகாத்மா காந்தி - முதல் டாக்குமெண்டரி ... 14
- சா. கந்தசாமி

எங்கும் விடுதலை - எதிலும் விடுதலை ... 17
- சிலம்பொலி செல்லப்பன்

சுதந்திர இந்தியா ... 20
- முனைவர் நாகநாதன்

ராஜா ராம்மோகன் ராய் ... 23

விடுதலை இயக்கப் பாடல்கள் .... 25
- சிலம்புச்செல்வர் ம.பொ.சி.

ஜீவா சொன்ன தேசபக்திக் கதை ... 30
- முக்தா சீனிவாசன்

வாழ்க்கை முகவரி-கவிதை .... 32
- ஈரோடு தமிழன்பன்

தமிழகத்தில் நேரு ... 34

விடுதலைப் போரில் வீராங்கனைகள் ... 36

செக்கிழுத்த செம்மலின் செந்தமிழ்த்தொண்டு ... 41

காங்கிரஸ் தலைவர் பெரியார் ... 44
-சாமி. சிதம்பரனார்

தியாக தீபம் ... 49

நல்லிரவாகிய நள்ளிரவு .. 51

மகாகவிகளின் மறதிகள் ... 54
- பிரபஞ்சன்



**தமிழரசு**

திருவள்ளுவராண்டு - 2028

ஆகஸ்ட் 16-31, 1997

மலர் : 28 இதழ் : 4

விலை: ரூ.3

# நல்லோர் வழியில் நடைபோடுவோம்

## முதல்வர் கலைஞர்

சுதந்திரத் திருநாளில், ஆகஸ்டு 15-ஆம் நாள் - தேசியக் கொடியேற்றும் உரிமை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதலமைச்சர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென மத்திய அரசுடன் வாதாடி, இந்தக் கோட்டைக் கொத்தளத்தில் 23 ஆண்டுகளுக்கு முன்பு, 1974ல் மகிழ்ச்சியுடன் இந்த மணிக் கொடியை ஏற்றிவைத்திடும் வாய்ப்புப் பெற்றிருந்த எனக்கு, இப்போது சுதந்திர நாள் பொன்விழா ஆண்டிலும் இந்தக் கொடியை ஏற்றிவைக்கும் பெரும் பேற்றினை வழங்கியுள்ள தமிழ்த் திருநாட்டு மக்கள் அனைவருக்கும் என் இதய மார்ந்த நன்றியையும் - பணிவு மிகுந்த வணக்கத்தையும் - பாசம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் அன்னைத் திருநாடு, அடிமை விலங்கை உடைத்தெறிந்து விடுதலை பெற்று ஆயிற்று ஐம்பது ஆண்டுகள் - எனினும்; இன்னமும் நாம் முழுமையான சுதந்திர விடியலை எதிர்பார்த்து வைகறைப் பொழுதிலேதான் இருக்கிறோம் என்பதை மறந்து விடுவதற்கில்லை.

விடுதலை வேட்கை கொண்ட வீரன் ஒருவனைப் பார்த்து வெள்ளைக்கார துரையொருவன்,

**"தொண்டு செய்யும்**
**அடிமை - உனக்குச்**
**சுதந்திர நினைவோடா?**
**பண்டு கண்டதுண்டோ**
**- அதற்குப்**
**பாத்திர மாவாயோ?**
**ஜாதிச் சண்டை**
**போச்சோ? - உங்கள்**
**சமயச் சண்டை**
**போச்சோ?**
**நீதி சொல்ல வந்தாய்**
**- கண்முன்**
**நிற்கொணாது போடா!"**

-என்று கூறியதாகப் பாரதியார் பாடினாரே; அந்தப் பாட்டு இந்தச் சுதந்திரப் பொன்விழா ஆண்டிலும் பாடப்பட வேண்டிய நிலை இருப்பதை எண்ணிடும்போது புண்ணில் வேல்பட்டது போன்ற துடிதுடிப்பும் துன்பமுமன்றோ நம்மைத் துளைத்தெடுக்கிறது!

நினைத்துப் பார்க்க வேண்டாமா; நம் நெஞ்சில் நிழலாட வேண்டாமா; தமதுடலைக் குருதியில் நனைத்து உயிர் மூச்சை சுதந்திரக் கொடி பறந்திட காற்றாக வழங்கிய தியாகத் திருவிளக்குகள் எத்தனைப் பேர், இந்த நாட்டு விடுதலைக்கு அடித்தளமாக அமைந்துள்ளனர்!

தென்னாப்பிரிக்காவில் இனவெறி எதிர்ப்புப் போராட்டத்தில் தன்னுடன் சிறையேகி மாண்டுவிட்ட மகளிர்குல இளம் மணிச் சுடர் தில்லையாடி வள்ளியம்மாளின் தியாகம்தான்; இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திற்கான உணர்வைத் தனக்கு எழுப்பியது என்றுரைத்த உத்தமர் காந்தியடிகளின் தலைமையில் பெற்ற சுதந்திரத்திற்குப் பொன்விழா - சுதந்திரம் வாங்கித் தந்தவருக்கே என்ன பரிசளித்தது இந்த நாடு!

''என்னைப் பற்றிக் கவலையில்லை - நான் வாங்கித் தந்த சுதந்திரத்தையாவது காப்பாற்றுங்கள்" என்ற வேண்டுகோளுடன் தானே காந்தியடிகள் கடைசியாகக் கண் மூடியிருப்பார்!



அதை நினைத்தாவது நாம் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்திட இந்நாளில் உறுதி பூணுவோம்.

சுதந்திரமுடன் இயங்கிடும் எத்தனையோ நாடுகளின் நிலையோடு ஒப்பிடுகையில் நமது இந்திய நாட்டு நிலைமை, முற்றிலும் வேறுபட்டது. ஊட்டச்சத்து வாய்ந்த உணவுதான் குழந்தைகளுக்கு வழங்கப்பட வேண்டுமென வேறு நாடுகளில் அறிவுரைகள் செயல் வடிவம் பெறுகின்றபோது, எந்தச் சத்து பற்றியும் கவலை இல்லை, எதையாவது போட்டு, கத்துகிற வயிறை அடைப்பதற்கு உணவு என்ற பெயரால் ஒரு பொருள் கிடைக்குமா என ஏங்குகின்ற ஏழைகள் இங்கே அங்கிங்கெனாதபடி அலைந்து கொண்டிருக்கின்றனர்.

காயும் கதிரவனை மறைக்கக் கையையே குடையாகக் கொண்டும், மழையில் ஒதுங்க மரத்தடியையே மாளிகையாகப் பாவித்தும் நமது மக்கட் தொகையில் பெரும் பகுதியினர் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆண்டவனின் புத்திரர்கள் என்று அன்பொழுக அழைக்கப்படுகிற அரிஜனங்கள் எனப்படும் ஆதிதிராவிடர் லட்சோப லட்சம் பேர் வாழுகின்ற வீடுகள் குக்கிராமத்துக் குப்பைத் தொட்டிகளாக இருக்கின்றன.

உணவு வழங்கும் உழவன்- மானங்காக்க உடை தரும் நெசவாளி - வியர்வைத் துளிகளை தன்னைப் பெற்றெடுத்த இந்திய மண்ணுக்குப் பன்னீர்த் துளிகளாகத் தெளித்துக் கொண்டிருக்கும் தொழிலாளி - சுரங்கம் தோண்டுவோன் - முத்துக் குளிப்போன் - மீனவன் - உலைக் கூடத்தில் வதைபடுவோன் - மண் சுமப்போன் - மரம் ஏறுவோன் - உடை வெளுப்போன் - முடி திருத்துவோன் - ஏதோ இரண்டெழுத்துப் படித்து எழுத்தர் பணி புரிவோன் - இன்னோரன்ன மக்கள் தொகுதியினர் வாழ்விலே இன்பத் தென்றல் வீசிடவில்லை. அதற்காக முயற்சிகள் எடுக்கப்படாமல் இல்லை. ஆனால் அந்த முயற்சிகள், முழுப் பயனையும் அளித்திடத் தக்க வண்ணம் அமைந்திடவில்லை. ஐந்து பேருக்காகத் தயாரிக்கப்படும் விருந்து, பரிமாறப்படுகிற நேரத்தில் பத்துப் பதினைந்து பேருக்கு என்ற நிலைபெற்று விடுமேயானால், அதனை அருந்தி மகிழ்வதில் முழுமை எப்படி இருந்திட இயலும்?

**"எல்லையுடைய புவியின் மீது எல்லையற்ற வளர்ச்சி, சாத்தியமன்று"**

- என்பதை ஒவ்வொரு தனி மனிதனும் உணர்ந்து, அதற்கேற்ப நடந்தால்தான், வளர்ச்சித் திட்டங்களின் முழுப் பயனைச் சமுதாயம் பெற்றிட முடியும். எத்தகைய பொருளாதார முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டினாலும், கட்டுங்கடங்காத வகையில் மக்கட் பெருக்கம் செல்லுமேயானால், தீட்டப்பட்ட பொருளாதாரத் திட்டங்கள், காட்டில் காய்ந்த நிலவாகத்தான் ஆகிவிடும்.

இத்துணை சிரமங்களுக்கிடையே மக்கட்பணி நடைபெறும்போது அரசின் முயற்சிகளைத் தகர்த்தெறியும் பொருளாதாரக் குற்றவாளிகள் - சமூக விரோதிகள், சாதி சமய வெறி பிடித்தோர்; எரியும் வீட்டில் பிடுங்கிய வரை ஆதாயம் என்பது போலத் தங்கள் கைவரிசையைக் காட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த மக்கள் நல

விரோதிகளைத் தடுத்து நிறுத்த - அரசு எடுத்திடும் நடவடிக்கைகளில் பொது மக்கள் முழு ஒத்துழைப்பைத் தந்திட வேண்டும்.

கடத்தல்காரர் - கறுப்புப் பண முதலைகள் - வரி ஏய்ப்போர் - கலப்பட வணிகர் - பதுக்கல் மனிதர் - ஊழல் பெருச்சாளிகள் - வன்முறை விரும்பிகள் - இவர்களைச் சமுதாயத்தின் ஓர் அங்கம் என்று கூறக் கூட நா கூசுகிறது. சமுதாயத்தை அழிக்கும் புற்று நோயாக அவர்கள் வளர்ந்து வருகிறார்கள். அந்தக் கொடிய நோய் தடுக்கப்பட - அதன் கோரப்பிடியிலிருந்து நமது மக்கள் விடுவிக்கப்பட சபதம் ஏற்கும் ஆண்டாக இந்தப் பொன் விழா ஆண்டு அமைந்திடல் வேண்டும்.

இருள் - மழை - புயல் இவற்றுக்கிடையே மின்னல் வெளிச்சத்தில் வழிதெரிந்து நடப்பதைப் போல இந்த ஐம்பதாண்டு காலமாக இடையில் வந்த நெருக்கடி நெருப்பாற்றையும் கடந்து நிற்பதுதான், நமது இந்திய நாட்டின் ஜனநாயகமாகும்.

ஒரு துணைக் கண்டம் எனக் கூறப்படும் இந்தப் பெரிய நாடு, பெரிய ஜனநாயக நாடாகவும் திகழ்ந்து, மற்ற பல நாடுகளுக்கு மத்தியில் தனது மதிப்பை உயர்த்திக் கொண்டிருப்பதை இந்தப் பொன் விழா ஆண்டில் நினைத்துப் பூரிப்புக் கொள்கிறோம்.

மக்களாட்சியின் மாண்புக்குத் தமிழகத்தில் சங்க காலத்திலேயே அடையாளம் உண்டு என்பதை நமது இலக்கியங்கள் அறிவிக்கின்றன. ஊராட்சித் தலைவர்கள் மக்களால் தேர்வு செய்யப்பட்டதை உத்திரமேரூர் கல்வெட்டு தெரிவிக்கிறது.

உள்ளாட்சி மன்றங்களில் ஊனமுற்றிருந்த ஜனநாயகத்தைக் குணப்படுத்தி, கடந்த ஆண்டு நடமாட வைத்த பெருமை உங்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசுக்கு உண்டு. அந்த உள்ளாட்சிகளுக்குத் தேவையான நிதியும் - போதுமான அதிகாரப் பொறுப்புகளும் படிப்படியாக வழங்கப்பட்டு வருகின்றன.

கிராமங்கள்தான் நாட்டின் முதுகெலும்பு என்று காந்தியடிகள் சொன்ன வாசகத்தை மறவாமல் - நாடு, நகரம், கிராமம், குக்கிராமம், பட்டி தொட்டி அனைத்திலும் இந்த அரசின் பணிகள் பரவலாக நடைபெறுவதற்கு கட்சிச் சார்பற்ற முறையில் அனைத்து மக்களின் அன்பான ஆதரவும் வேண்டப்படுகிறது.

அடிப்படை வசதிகளான பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர், சாலை வசதி, மின்சாரம், மருத்துவ வசதி, உணவு, உடை, உறையுள் போன்ற மக்களின் குறைந்த பட்சத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும் என்ற குறிக்கோளை நோக்கித்தான் இந்த அரசின் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

தியாகங்கள் பல செய்து இந்தத் திருநாட்டை மீட்டவர்கள் - நாட்டின் நலிவு போக்க நாளும் உழைத்திடும் நல்லவர்கள் - அனைவரும் காணும் கனவுகளை நிறைவேற்றிடத் தொடர்பயணம் மேற்கொண்டிருக்கும் நாம், அந்தத் தியாக சீலர்களைப் போற்றிப் புகழ்வதுடன் நில்லாமல், அவர் தம் வாழ்வில் வறுமைத் தேள் கொட்டாமலும் பாதுகாத்திடும் பொறுப்பையும் ஏற்றுள்ளோம்.

அந்தத் தியாகிகளின் ஓய்வூதியமாக மாதம் ஆயிரத்து ஐநூறு ரூபாய் வழங்கிவருகிறது தமிழக அரசு!

சுதந்திரம் அடைந்த ஐம்பதாம் ஆண்டு பொன் விழா நினைவாக - இனிமேல் விடுதலைப் போர் தியாகிகளுக்கு மத்திய அரசு இந்தப் பொன் விழா ஆண்டில் அறிவிக்கும் ஓய்வூதியப் பயன் எவ்வளவோ - அந்த அளவுக்குச் சமமான பயனை மாநில அரசு ஓய்வூதியம் பெறும் தியாகிகளும் பெற்றிட வழிவகை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியோடு இங்கே அறிவிக்கின்றேன்.



சிதம்பரனார் சிறையில் இழுத்த செக்கைத் தேடிக்



கண்டுபிடித்து அதனைச் சென்னையில் காட்சிப் பொருளாக வைத்தது முதல்..... தியாகத் தலைவர்களின் நினைவாக எத்தனையோ செயல்களை ஆற்றியுள்ள இந்த அரசு;

ஆகஸ்டு 31 - மதுரையில் நடத்த இருக்கும் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டையொட்டி, அதே நாளில் தியாகச் செம்மல் முன்னாள் அமைச்சர் கக்கன் அவர்களின் சிலை யமைப்பு விழாவை நடத்த இருக்கிறது.

நீண்ட காலக் கோரிக்கையாக இருந்துவரும் விசுவநாததாஸ் அவர்கள் வாழ்ந்த மதுரை திருமங்கலம் இல்லத்தை அரசு நினைவகமாக இந்தப் பொன்விழா ஆண்டில் மாற்றிட இருக்கிறது என்பது மட்டுமல்ல; கட்டபொம்மன் வாரிசுகளுக்கும், மருதுபாண்டியர் வாரிசுகளுக்கும், சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கும் உதவிடுவது போல விசுவநாததாஸ் வாரிசுகளுக்கும் உதவிடும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதந்திர தின வெள்ளி விழா 1972ஆம் ஆண்டு நான் அறிவித்தது போலவே; இந்தப் பொன்விழா ஆண்டிலும் சிறைவாழ் கைதிகளுக்குச் சலுகைகள் சிலவற்றை அறிவிக்கின்றேன்.

பத்தாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றோருக்கு ஒன்றரை ஆண்டுக் காலத் தண்டனைக் குறைப்பு. இந்தச் சலுகை மூலம் 139 சிறைக் கைதிகள் விடுதலை பெறுவார்கள்.

ஐந்தாண்டுகளுக்கு மேல் பத்தாண்டுகளுக்குள் தண்டனை பெற்றோருக்கு ஓராண்டு காலம் தண்டனைக் குறைப்பு. இதன் மூலம் 24 கைதிகள் விடுதலை பெறுவார்கள்.

ஓராண்டுக்கு மேல் ஐந்தாண்டுகள் வரை தண்டனை பெற்றோருக்கு நான்கரை மாதம் தண்டனைக் குறைப்பு. இதன்வாயிலாக 64 சிறைக் கைதிகள் விடுதலை பெறுவார்கள்.

மூன்று மாதங்களுக்கு மேல் ஓராண்டு வரை தண்டனை பெற்றோர் பாதிக் காலத் தண்டனை அனுபவித்திருந்தால் மீதிக் காலத் தண்டனை குறைக்கப்பட்டு விடுதலையாவர். இதன்மூலம் 166 கைதிகள் விடுதலை அடைவார்கள்.

இதே கைதிகள் பாதிக் காலத் தண்டனை அனுபவிக்காமல் இருந்தால், அவர்களுக்கு மூன்று மாதம் தண்டனைக் குறைப்பு. இந்தச் சலுகை காரணமாக 72 கைதிகள் விடுதலை அடைவார்கள்.

மூன்று மாதமும் அதற்குக் குறைவாகவும் தண்டனை பெற்றோர் அனைவருமே விடுதலையாவர். இந்த வகையில் 89 சிறைக் கைதிகள் விடுதலை ஆவார்கள்.

எனவே தற்போது அறிவிக்கப்படும் இந்தச் சலுகைகளின் பலனாக 554 சிறைக் கைதிகள் உடனடியாக விடுவிக்கப்படுவதோடு, சுமார் 3,300 சிறைக் கைதிகள் தண்டனை குறைப்புப் பயனையும் அடைவார்கள் என்பதை இந்தப் பொன் விழா நாளில் அறிவிப்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த அறிவிப்புகள் தேன் குடங்கள் அல்ல; வெறும் தேன்துளிகள்தான் என்பதை நானறிவேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள் - பிற்படுத்தப்பட்ட மக்கள் - மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் - நடுத்தர மக்கள் - அலுவலர்கள் - அனைத்துத் தொழிலாளர்கள் - எல்லோரது பிரச்சினைகளையும் மையமாக வைத்து, அரசின் சக்கரம் சுழல வேண்டுமென்ற அண்ணா அவர்களின் வழி நின்று, நாளும் செயல்படும் இந்த அரசு என உறுதி அளிக்கிறேன்.

நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை காத்து, தமிழர் கொற்றம் சிறக்கப் பணியாற்றுவோம்!

நாட்டுக்குழைத்த நல்லோர் வழியில் நடைபோடுவோம்!

உத்தமர் காந்தியடிகள் - உண்மையே கடவுள் என்றார்!

அறிஞர் அண்ணா - ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார்!

கைமாறு கருதாமல் கடமையைச் செய் என்றார் தந்தை பெரியார்!

உழைப்பே உயர்வு தரும் என்றார் பெருந்தலைவர் காமராசர்!

இவர்தம் எண்ணமெல்லாம் தமிழர் வாழ்வில் வண்ணமாகப் பொலிவுற, இந்தச் சுதந்திர பொன்விழா நாளில் தொண்டாற்ற தூய சபதம் ஏற்றிடுவோம்!

வணக்கம்.

***-சுதந்திரத் திருநாள் பொன் விழா (15.8.1997) அன்று, சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மாண்புமிகு முதல் அமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை.***

# நேரு சகாப்தம்!

தி. சு. அவினாசிலிங்கம்

நான் 1934ஆம் ஆண்டு மத்திய சட்டமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1946ஆம் ஆண்டு வரை அதன் உறுப்பினராகப் பணியாற்றி வந்தேன். 1946ஆம் ஆண்டில் நான் சென்னை மாநில சட்டமன்றப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கல்வி அமைச்சராகவும் பணியாற்றினேன். 1951ஆம் ஆண்டில் நான் புதுடெல்லியில் நாடாளுமன்ற உறுப்பி னரானேன். பின்னர் 1964ஆம் ஆண்டு வரை மாநிலங்களவை உறுப்பினராக இருந்தேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் பாரத நாட்டின் முதல் பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேருவைப்பற்றித் தெரிந்து கொள்ளவும், அவருடன் பழகவும் வாய்ப்பைப் பெற்றேன்.

நேருவும், சர்தார் வல்லபாய் பட்டேலும் சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் ஆற்றல் மிக்க இருமனிதர்கள் ஆவர். சர்தார் உயிருடன் இருக்கும்வரை, நேரு அவருடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டியதாயிற்று. இருவரும் நிறைந்த மன உறுதியையும், பேரூக்கத்தையும் பெற்றிருந்தனர்.

அதே நேரத்தில், எதிர்கால நிலவரத்தைக் கணிப்பதிலும், மனப்பாங்கிலும் வேறுபட்டிருந்தனர். நேருவின் நிபந்தனையற்ற மதச்சார்பின்மையைக்கண்டு மகிழ்ச்சி அடையவோ, சமூகச் சீர்திருத்தங்களுக்காக அவர் கைக்கொண்ட தீவிரப் போக்கை ஆதரிக்கவோ சர்தாரால் இயலவில்லை. சர்தார் இரும்பு மனிதர்; விரைந்து செயலாற்றுபவர்; நேருவோ மென்மை யானவர்; விட்டுக்கொடுக்கும் தன்மை உடையவர்.

## சுதந்திரத்தின் பலன்

இந்தியாவை ஒருங்கிணைக்க சர்தார் இறுதி நடவடிக்கை எடுத்தபோது-அதாவது ஹைதராபாத்துக்கு எதிராக போலீஸ் நடவடிக்கை மேற்கொண்டபோது, அமைச்சரவையிலிருந்து பலருக்கு நடவடிக்கை முடியும்வரை அதுபற்றித் தெரியாது. நடவடிக்கை தொடங்கிய பிறகுதான், நேருவுக்கே தெரிவிக்கப் பட்டது. பல விஷயங்களில் நேருவுக்கும் சர்தாருக்கும் ஒருமித்த கருத்து நிலவவில்லை. அரசு நிர்வாகம் சுமுகமாக நடைபெறப் பலமுறை மகாத்மா காந்தியின் உதவியை நாடவேண்டியதாயிற்று.



ஆனால், மவுண்ட்பேட்டன் பிரபு கூறியதுபோல், இந்திய சுதந்திரத்தின் பலன்களை ஒன்றுசேர்க்க இருவருமே தேவைப்பட்டனர் என்றே குறிப்பிடலாம்.

1950ஆம் ஆண்டில் சர்தார் மறைந்தபிறகு, காங்கிரஸ் இயக்கத்திலும் சரி, நாடாளுமன்றத்திலும் சரி; அவருக்கு நிகரான பெருமையும், வல்லமையும் பெற்றவர்களோ, வழிநடப்பவர்களைக் கொண்டவர்களோ இல்லை. அதனால் நேரு ஒப்பற்ற தலைமை நிலையை எய்தினார். நேருவிற்கு மற்றொரு அனுகூலமும் இருந்தது. அதாவது, அப்போது, மாநிலங்களை ஆண்டுவந்த அனைத்து அரசுகளும் காங்கிரஸ் அரசுகளாக இருந்தன. ஆகவே, அவர் மத்திய அரசை நிர்வகித்ததோடல்லாமல், அனைத்து மாநிலங்களிலும் அவரது வாக்கு, சட்டமாக இருந்தது. ஆனால், அவர் மிகுந்த அதிகாரத்தைப் பெற்றிருந்த போதிலும், அவர் சமநிலையுடனும், மக்கள் போற்றும் வகையில் அடக்கத்துடனும் செயல்பட்டதால் தான் மங்காப் புகழைப் பெற்றார் என்றே சொல்லவேண்டும்.

## திட்டக் குழுவை அமைத்தல்

ஜவஹர்லால் நேரு திட்டமிட்ட வளர்ச்சியில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர். அதற்கான தூண்டுதலை அவர் ரஷ்யாவிடமிருந்து பெற்றார். எனவே, முதல் பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் முதல் நடவடிக்கை இந்தியாவிற்குத் தேசியத் திட்டக்குழு அமைத்ததே ஆகும்.

அத் திட்டக் குழுவிற்குப் பிரதமர் தலைவர் ஆனார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அரசுக் கொள்கையின் நெறிக்கோட்பாடுகளின் அடிப்படை நோக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் "மாநில அரசு, நீதி, சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவை அடங்கிய சமூக ஒழுங்கைப் பயனுள்ள வகையில் பாதுகாப்பதன் மூலம், மக்கள் நலனை மேம்படுத்த முயலுவதுடன், மக்களுக்கு அறிவுறுத்தவும் வேண்டும்" என்பது அடங்கும். மேலும் அரசு குறிப்பாக -

தமிழில் முதல் சுயசரிதையை எழுதியவர் பாரதியார். இதை 1910ல் கவிதையாக எழுதினார்.

அ. நாட்டு மக்களுக்கு-ஆடவர், பெண்டிர் அனைவருக்கும் சமநிலையில் வாழ்க்கை வசதிகளைப் பெறும் உரிமை கிடைக்கவும்.

ஆ. சமுதாயத்தின் வளவாயில்களின் உரிமையும், பொறுப்பும், பொதுமக்களின் நலனுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் பகிர்ந்தளிக்கப் படவும்.

இ. செயலிலுள்ள பொருளாதார முறை சொத்து ஓரிடத்திலேயே குவிந்து கிடக்கக் காரணமாகாத வகையிலும், உற்பத்தி வழிகள் பொதுமக்களைப் பாதிக்காத வகையிலும் இருக்கவும்...

நெறிமுறைக் கோட்பாடுகளை விதிக்கலாம்.

“திட்டமிடல்' என்பதில் மேம்பட்ட வேளாண்மை, புதிய தொழில்கள் தொடங்குதல், கல்வி வசதிகள் விரிவாக்கம், வளர்ச்சிக்குத் தேவைப்படும் பொறுப்புகளை ஏற்று நடத்தத் தகுதி வாய்ந்த நிருவாக அமைப்பை மேம்படுத்துதல், சமூக நீதியை உறுதிப்படுத்தும் வரிவிதிப்பு அமைப்பை வகுத்தல், நிலச் சீர்திருத்தம், சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல், மகளிர்; பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்; பழங்குடிகள் ஆகியோரின் முன்னேற்றத்திற்கான தனி நடவடிக்கைகள், நாடெங்கிலும் கிராமங்களில் பெருமளவில் காணப்படும் வறுமையை ஒழித்தல் போன்ற பொருளாதார அம்சங்கள், தேசிய வாழ்க்கையின் பல்வேறு அம்சங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி அடங்குகிறது.

## சமுதாய வளர்ச்சித் திட்டங்கள்

எனவே, திட்டமிட்ட வளர்ச்சியின் தொடர் பயனாக, கிராம மக்களின் பொருளாதார, சமூக, கல்வி நிலையை உயர்த்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்ட சமுதாய வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்பட வேண்டிய அவசியத் தேவை ஏற்பட்டது.

ஆகவே, பெரிய அளவிலான ஊரக வளர்ச்சித் திட்டத்தை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. சுமார் ஏழு இலட்சத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் முப்பது கோடிக்கும் மேலான மக்களை முன்னேற்றுவதற்கான வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவது என்பது, அரிய பெரும்பணியாக இருந்தது. பெருமளவில் பணமும், உழைப்பும் தேவைப்பட்டன. அதிர்ஷ்டவசமாக டாக்டர் டக்ளஸ் என்ஸ்மிங்கர் தலைமையிலான போர்டு பவுண்டேஷன் பெரிய அளவில் உதவ முன்வந்ததன் விளைவாக, சமுதாய வளர்ச்சித்திட்டம் உருவாக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது.

திட்டக் குழுவின் துணைத் தலைவர் திரு.வி.டி.கிருஷ்ணமாச்சாரியார் அவர்களும், சமுதாய வளர்ச்சி இணை அமைச்சர் திரு.எஸ்.கே.டே அவர்களும் புதிதாகத் துவக்கப்பட்ட சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் உயிர்நாடிகளாக விளங்கினர். திட்டத்தை நிறைவேற்றுவதில் பெரும்பங்கு வகித்தனர். முதலாமவர், பரோடாவில் ஊரக வளர்ச்சிக்காகப் போற்றத்தக்க பணியாற்றியவர்; 1952ஆம் ஆண்டில் உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக்குழுத் தலைவராக இருந்தபோது, ஊரக வளர்ச்சிக்கான பயனுள்ள கருத்துரைகளை வழங்கியவர்.

ஊரக வாழ்க்கையின் எல்லா அம்சங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதை உணவுப் பொருள் உற்பத்திப் பெருக்க விசாரணைக்குழு அறிந்துகொண்டதோடு, குறிப்பிட்ட பிரச்சினைகள் குறித்து தனிக்கவனம் செலுத்தும்படி கோரப்பட்ட போது, “அவற்றிற்கான திட்டங்கள் பெரிய அளவிலான நோக்கங்களை எய்துவதன் ஒரு பகுதியாகவும், அவற்றை ஒருங்கிணைக்கக் கூடியவையாகவும் இருக்கவேண்டும் என்றும் தெரிவித்தது.

இக்குழுவின் பரிந்துரைகள் இந்தியாவில் ஊரக வளர்ச்சிக்கான ஊரக விரிவாக்க அணுகுமுறையை உருவாக்குவதில் பெரிதும் உதவின. இந்தியாவில் சமுதாய முன்னேற்றத்திட்டத்திற்கு முக்கிய அம்சமாக விளங்குவது ஊரக ஒருங்கிணைப்பு விரிவாக்கப்பணியே என்பதும், விரிவாக்கக் கல்வி அமைப்புகள் மூலம் விஞ்ஞான அறிவும், தொழில் நுணுக்க முறைகளும் மக்களைச் சென்றடையவேண்டும் என்பதும் உணரப்பட்டன.

இப்புதிய அணுகுமுறையை முதலாவது ஐந்தாண்டுத்திட்டம் ஏற்றுக்கொண்டது. கிராம மக்களின் சமூக, பொருளாதார வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுவத்துவதையே முதலாம் ஐந்தாண்டுத்திட்டத்தின் குறிக்கோளாகக்கருதப்பட்டது. சமுதாய வளர்ச்சி



அம்பேத்கர் அவர்கள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களிடம் இந்திய அரசியல் சாசனத்தை அளிக்கிறார். ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் படேல், மூதறிஞர் ராஜாஜி, மௌலானா அபுல் கலாம் ஆசாத் உடனிருக்கின்றனர்.

மூலமும், ஊரக விரிவாக்கக்கல்வி அமைப்புகள் மூலமும் அத்தகு நிலை அடையப்படவேண்டும் என்பதே முதலாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் அணுகு முறையாகும்.

## அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி

நேருவின் காலத்தில் இந்தியாவில் அறிவியல், தொழில்நுட்ப நிறுவனங்கள் பெருமளவில் வளர்ச்சி பெற்றன. நாடு முன்னேற, வேளாண்மை உற்பத்தியும், தொழில் உற்பத்தியும் பெருகிட, தகவல் தொடர்பு, போக்குவரத்து வசதிகள் மேம்பட, மக்களுக்குப் பெருமளவில் வேலை வாய்ப்பு வசதிகளை அளிக்க, நோய்த் தடுப்பு, நோய்ச் சிகிச்சை ஆகிய இருவகையிலும் மக்கள் நலம்காக்க, தொழில் நுட்ப ரீதியிலான புரட்சி தேவை என்பதைப் பண்டித நேரு உணர்ந்தார்.

ஆராய்ச்சியின் பயனாக விஞ்ஞான அறிவு பெருகுகிறது. அதன் விளைவாக வயல்களிலும், தொழிற்கூடங்களிலும் உற்பத்தி பெருகப் புதிய தொழில்நுட்ப உத்திகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. வேறுவேறு துறைகளில் பெரும் அளவில் ஆய்வுக்கூடங்களையும், நிறுவனங்களையும் அரசு நிறுவுகிறது.

இத்தகைய நோக்கங்களை நிறைவேற்ற, விஞ்ஞானிகளுக்குச் சிறந்த பணி நிலைமைகளை அளிக்கவும், கொள்கைகளை வகுப்பதில் அவர்களுடன் ஒத்துழைக்கவும், தேசிய வாழ்க்கையில் அவர்களுக்கு மதிப்புமிக்க இடத்தை அளிக்கவும், அரசு முடிவு செய்தது.

முதலாவது, ஐந்தாண்டுத்திட்டத்தில், தேசிய ஆய்வுக்கூடங்களையும், ஆராய்ச்சி நிலையங்களையும் ஏற்படுத்த முதற்கவனம் செலுத்தப்பட்டது.

இரண்டாம் ஐந்தாண்டுத்திட்டத்தில், இருக்கின்ற வசதிகள் மேம்படுத்தப்பட்டன. விரிவான அடிப்படையில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்களிலும், ஏனைய ஆராய்ச்சி மையங்களிலும், ஆராய்ச்சி வசதிகள் விரிவுபடுத்தப்பட்டன.

மூன்றாம் ஐந்தாண்டுத்திட்டத்தில் ஆய்வுப்பணி பின்வருவன தொடர்பாக மேற்கொள்ளப்பட்டது:

1. தற்போதுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களை வலுப்படுத்துவது; ஆராய்ச்சி வசதிகளைப் பரந்த அளவில் விரிவுபடுத்துவது;

2. பல்கலைக்கழகங்களில் அடிப்படை ஆராய்ச்சியை ஊக்குவிப்பது;

3. பொறியியல், தொழில்நுட்ப இயல் துறைகளில் ஆராய்ச்சியை ஊக்குவிப்பது;

4. ஆராய்ச்சிப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பது; ஆராய்ச்சிக்கல்வி ஏற்பாடு, ஆராய்ச்சிப் படிப்பு உதவித் தொகைத் திட்டத்தை விரிவுபடுத்துவது;

5. அறிவியல், தொழில் சாதனங்களை உருவாக்குவது, மேம்படுத்துவது தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொள்வது;

6. தேசிய ஆய்வுக்கூடங்கள், பல்கலைக் கழகங்கள், தொழில் நுட்ப இயல் நிறுவனங்கள், ஆராய்ச்சிச் சங்கங்களின் ஆய்வுக்கூடங்கள், அரசுத்துறைகளின் ஆராய்ச்சிப் பிரிவுகள் ஆகியவை மேற்கொள்ளும் ஆராய்ச்சிப் பணிகளை ஒருங்கிணைப்பது;

7. ஆராய்ச்சியின் முடிவுகளை முன்னோடிப் பயிர்பாதுகாப்புத் திட்டம், முழு அளவிலான களப்பரிசோதனைகள் முதலானவை மூலம் மெய்ப்பித்து, அவற்றைப் பயன்படுத்தவது.

முதலிரண்டு ஐந்தாண்டுத்திட்டங்களில் மேற்கொண்ட முயற்சியின் பயனாக அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட விரிவான தொடர்பமைப்பு ஏற்பாடு உருப்பெற்று, பல்வேறு மையங்களில் தனி ஆராய்ச்சி, செயல்முறை ஆராய்ச்சி, குறிப்பிட்ட துறைகளில் ஆராய்ச்சி ஆகிய ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. ★

# தியாகத்தைப் போற்றிடுவோம்!

(1972-ல் சுதந்திரதின வெள்ளி விழாவில் முதல்வர் கலைஞர்)

இந்திய சுதந்திரத்திற்கு இன்று வயது இருபத்தைந்து. முழுமையான பருவம். வெற்றித் திருமகள் மணந்து வெள்ளித் திருப்புகழ் கொண்டாடுகின்ற காலப்பருவம். இந்த வீரச் செல்வத்தைப் பெற்றிட விழுப்புண் பெற்றோர் — விழிகளை இழந்தோர் — உயிரிழந்தோர் — உடைமைகளை பறிகொடுத்தோர் — சிறைவாழ்ந்தோர் — செக்கிழுத்தோர் — கசையடிகளையும் ஏற்றோர் — கொள்ளையராக மாண்டோர் — துப்பாக்கிக் குண்டுக்கு இரையானோர் — தூக்குக் கயிற்றை முத்தமிட்டோர் — இவ்வாறு காயங்கள் பட்ட இன்னுயிர்த் தியாகிகளை நாம் வணங்குகின்றோம். அவர்களில் சிலர் சிலையாகி விட்டனர். சிலர் படமாகி விட்டனர். சிலர் நம் நெஞ்சில் நிலையாகி விட்டனர்.

தொடர்பாக போராடத் தீர்த்த அந்நாள் அதிகாரம் அன்று நீங்கி அமைத்திட்ட பெருமான் காந்தியண்ணல் — அவர் வழி நின்று தியாகவிளக்கேந்தித் தன்னலம் துறந்து களம்புகுந்த தமிழ்நாட்டுத் தன்னிகர்த் தலைவர் பெருமக்கள் — இனி இளைஞர்த் திரண்டெழுந்து இந்திய சுதந்திரத்தின் வீர பேச்சால் உணர்ச்சி கலந்த செந்தமிழ் மறவர் தேசப் பெருமக்கள்!

அவர்களெல்லாம் சிந்திய வியர்வை வெள்ளம் — பெய்திட்ட செந்நீர் மழை — பொழிந்த கண்ணீர் சுதந்திரப் பயிருக்கு உரமாகும்! பயிர் நலமே களையின்றிப் பாதுகாப்பதும் — களைகளின் பதர்களை பார்த்துத் தடுப்பதும் — நேரம் பார்த்து நீர் பாய்ச்சுவதும் — நோய்நொடிகள் புகுந்து விடாமல் விரட்டுவதும். இந்த இருபத்தைந்து ஆண்டுகள் இடைவிடாது பணியாற்றியுள்ளோம். இயற்கையின் சோதனைகள் எண்ணிலடங்கா எதிர்களின் கொந்தளிப்போ இரும்பு போன்ற தடைகள்!



இத்தனைக்கும் ஈடு கொடுத்தோம் –
இமயத்து வெற்றிக் கொடி தந்த இமயத்
தின் நெஞ்சிலே வைத்துக் காட்டி
இன்னலென்னும் கடலேனும்;
என்னென்னும் இடர்களும் வெகு அருமை
காட்டி கொண்டு பணி தொடர்ந்தோம்.

வெள்ளம் போல் வெற்றி நாட்டம்
உள்ளத்தின் ஆவலே – மக்கள்
உயிரின் பாதுகாப்பு
உள்ளத்தின் நெஞ்சத்துடனே – என
வையம் போற்ற நாடு –
உலகம் சிறந்த நாம்
இருந்தால் கொண்டு மகிழ்கின்றோம் –

காத்திருக்கும் தலைமை நாடு –
தலைமை அற்றுக் கரைந்தப்பட்டுப்
படுகின்றோம்!
இடர் நிறைந்த இடைவெளிக்குக் காடு
கட்டு நெறி இன்றி வைக்கப்பட்ட
அரசியலுக்கு!
அறிவுப் புலவரும் பெருமையுடையோரும்
அயராது நாட்டின் உயர்வுக்காக
மக்களின் நாங்கள்!
அறிஞர் நாங்கள், அன்பு பெரியாரும்
உழைக்கும் நாங்கள்!
சொல்லிப் பிறந்து நெஞ்சு கொண்ட
நாங்கள்!
ஏர் பிடிக்கும் கைப்போல நாங்கள்!
கல்வியின் தக்கதோர் அறிஞர்கள் நாங்கள்!
நாட்டு நலம் கொண்ட நாங்கள்! நம்
நாட்டுக் கருணை நாங்கள்!
பாட்டாளிகள் வாழ்வு நாடு – புது சக
சேவை செய்யும் நாடு – பாதை –
பிறந்த – பச்சை பசுமை – பொருள்
நாடு – மக்கள் நலமே!

என்னவொரு நாங்கள் இருக்க
மண்ணில் தோழர் நாங்களே!
இவர்களின் நாட்டினரும் பல
மாநிலத்தவரும் இருப்பர் காண்!
வெற்றித் தூது இன்றும் இவ்விடத்தில

இந்தச் சுதந்திரப் பெருமூச்சு [illegible]!
இன்ப-இன்ப-இன்பமே இன்ப!
தேன் நீட்ட பெண்மையிலே [illegible]
தேன் பருகினேன்? [illegible]
சொன்னபடி நடந்தேனேன்?

இந்தச் சேர்க்கை வேலை
[illegible] இன்று ஒருங்கிணைந்தோம்
அழகு!

இன்ப நம் நாடு இன்பம் இன்ப-
இன்பம் இன்ப-
நம்ம [illegible] இன்பம் இன்ப-

என்ன புதுமை!
எதிர் புதுமை!
அதற்கும் பெரு உவமை!

அந்த கோலப் புதுப்புதுமை
உருண்டை நாடு போட்டு நம் [illegible]
எண்ணத்து நடந்தும்-

[illegible]
[illegible]
புன்னோடு!

இன்று விடா எட்டுக் கொடு
விட்டா, விடா கோலம் [illegible]
தின்-

அதனை, இந்த மகிழ்ச்சி [illegible]
சொல்லுகின்றேன்.

[illegible]

[illegible] பெருந்
துறையில் [illegible] இன்று
[illegible] [illegible] எடுக்கப்பட்டும்-
[illegible] வெளியிடப்படும்.
ஒருதலைவே அறிவித்தது
பெருந்துறையில் [illegible]
[illegible] இப்பத்து நாட்கு [illegible]
[illegible] பெரு [illegible]
புடம் [illegible] தெரிவித்திருக்கிறேன்.

[illegible] விருதுப் போர்
[illegible]
[illegible]
[illegible]
[illegible] உயர்ந்து
[illegible] [illegible]
[illegible] இப்பத்து [illegible]
[illegible] இன்பம் இப்பத்து
[illegible] உயர்த்த [illegible]
[illegible] அறிவிக்
கின்றேன்.

இந்த [illegible] பெரும்-
[illegible] கட்டுத் திட்டத்
[illegible] தெரிவிக்கின்றேன்.

⊛ [illegible] திட்டம்
பெருந்தொகை 1/2 [illegible]
திட்டத் [illegible]-

[illegible]




(இந்திய சுதந்திரத் திருநாள் வெள்ளிவிழா நாளன்று, 15.8.1972ல் கோட்டை கொத்தளத்தில் கொடியேற்றி வைத்து ஆற்றிய உரை)



சுதந்திரத் திருநாள் பொன்விழா 15.8.1997 அன்று தலைமைச் செயலகம் முன்பு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அணிவகுப்பு மரியாதை ஏற்றறல்.

# மகாத்மா காந்தி

## முதல் டாக்குமெண்டரி

மகாத்மா காந்தி பற்றி முதன்முதலாக ஒரு டாக்குமெண்டரி படம் எடுத்தவர் ஏ.கே.செட்டியார். 'உலகம் சுற்றும் தமிழர்' என்று தமிழ் மக்களால் அன்போடு அழைக்கப்பட்டவர். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகக் 'குமரி மலர்' என்ற தமிழ் மாதப் பத்திரிகை ஒன்றையும் நடத்திவந்தார். அது கடைகளில் விற்பனை செய்யப்பட்ட பத்திரிகை இல்லை. சந்தாதாரர்களுக்கு மட்டும் அனுப்பப்பட்டு வந்தது. குமரிமலர் பலவிதமான அம்சங்களைக் கொண்டு இருந்தாலும், அதன் பிரதம தொனி காந்தி தான். மகாத்மா காந்தி பற்றியும்-அவர் தத்துவங்கள் பற்றியும் எழுதுவதை ஏ.கே.செட்டியார் வாழ்க்கையின் இலட்சியம் மாதிரியே கொண்டிருந்தார்.



மகாத்மா காந்தியின் இலட்சியங்கள் மீது அபாரமான பற்றுகொண்ட ஏ.கே.செட்டியார் இளம் பருவத்தில் ஜப்பான் சென்று போட்டோ எடுப்பதில் பயிற்சி பெற்றவர். பர்மாவில் இருந்து வெளிவந்த 'தனவணிகன்' பத்திரிகையில் ஆசிரியராக இருந்தார். இந்த அனுபவமே அவரைப் பின்னால் 'குமரி மலரை' ஒரு இலட்சிய மாத இதழாக நடத்த வைத்து-உலகம் முழுவதும் சுற்றி, அந்த அனுபவத்தை எழுதி நூலாக வெளியிட்டவர். சுற்றுலா நூல்களுக்கு எல்லாம் வழிகாட்டி என்றுகூட சொல்லலாம்.

1940-ஆம் ஆண்டில் ஏ.கே.செட்டியார் மகாத்மா காந்தி டாக்குமெண்டரியை எடுக்க ஆரம்பித்தார். இரண்டு மொழிப்படம்-இங்கிலீஷ், தமிழ்.

டெக்னிக்கல் டைரக்டர் பிரபல கேமிராமேன் டாக்டர் பி.வி.பதி. தமிழ்விளக்க உரை த.நா.குமாரசுவாமி. பாடல்கள் பாடி இருப்பது டி.கே.பட்டம்மாள்.

மகாத்மா காந்தியின் வாழ்க்கைப் போதனைகளைச் சொல்வதுதான் படத்தின் பிரதானமான நோக்கம். அதற்காக இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா எல்லாம் சென்று படப்பிடிப்பு நடத்தினார்கள். இந்தியாவில் மகாத்மா காந்தி வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட பல ஊர்களில் படப்பிடிப்பு நடந்தது.

ஏ.கே.செட்டியார் ஒரு எழுத்தாளர். ஆகையால் தனது படப்பிடிப்பு அனுபவங்கள் பற்றி எழுதி இருக்கிறார். ஆனாலும் அவர் அனுபவம் பற்றி சொல்வதைக் கேட்பது இன்னொரு அனுபவம். தன்னை முன்நிறுத்திக்கொள்ளாத ஒரு தொனியில் செட்டியார் எப்பொழுதும் பேசுவார். அதைக் கேட்பதே ஒரு அனுபவம்.

மகாத்மா காந்தி டாக்குமெண்டரி படம் எடுத்த விதத்தைப் பற்றி ஏ.கே.செட்டியாருடன் என்னால் ஐந்தாறு முறைகளுக்கு மேல் பேச முடிந்தது. அவர் மனத்தில், படம் எடுத்தவிதம் அப்படியே பதிந்து இருந்தது. எத்தனை முறை பேசினாலும் கூடுதல் குறைச்சல் இன்றி, படம் எடுத்த விதத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டே இருந்தார். அவர் சொன்னதில் மகாத்மா-காந்தி பக்தியை நிறையவே காணமுடிந்தது என்பது இன்னொரு அம்சம்.

ஒருமுறை ஏ.கே.செட்டியார் சொன்னார்:

"மகாத்மா காந்தி டாக்குமெண்டரி எடுத்துக்கொண்டு இருந்தபோது சபர்மதி ஆசிரமத்திற்குச் சென்று சில காட்சிகளை எடுப்பது என்று முடிவு செய்தோம். திடீரென்று மகாத்மா காலைப்பொழுதில் "வாக்' வரும் காட்சியையும் சேர்க்கலாம் என்று நினைத்தோம். அதற்காக மகாத்மா வழக்கமாக 'வாக்' வரும் காலை நேரத்தில், விடியற்காலையிலேயே கேமராவை எல்லாம் எடுத்துக்கொண்டு போய், வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டோம். பிறகு என்ன காட்சியை எப்படி எடுப்பது என்று கேமராமேன் பதியிடம் விளக்கிச் சொன்னேன். அதாவது மகாத்மா 'வாக்' வரும் போது நான் வணக்கம் சொல்லுவேன்; அவர் பதில் வணக்கம் சொல்லி, கையெடுத்துக் கும்பிடுவார். அப்பொழுது அவரை மட்டும் படம் பிடித்துக்கொள்ள வேண்டும் என்று.

தொலைவில் மகாத்மா காந்தி வருவது தெரிந்தது. நாங்கள் பரபரப்போடு படப்பிடிப்புக்குத் தயாராகி விட்டோம்.

மகாத்மா காந்தி சாலையில் வருகின்ற பால்காரர்கள், ஆட்டுக்காரர்கள் என்றுதான் இல்லை-யாரைப் பார்த்தாலும் நமஸ்தே சொல்லி, கையெடுத்துக் கும்பிட்டுக்கொண்டே வந்தார். எனக்குக் கும்பிட வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. ஆனால் கேமிராமேனுக்கு மகாத்மா கையெடுத்து கும்பிடும் காட்சிகள் கிடைத்தன.

— சா. கந்தசாமி

மகாத்மா காந்தி பற்றி பம்பாயில் படம் எடுத்துக்கொண்டு இருந்தபோது-பகல் முழுவதும் நிறைய வேலை. இரவு ஒன்பது பத்துமணிக்குத்தான் திரும்பிவருவோம். படப்பிடிப்புக் குழு ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு தங்கி இருந்தது. சாப்பாடு எல்லாம் ஆனபிறகு கொஞ்சநேரம் பொழுது போக்கிற்காகச் சீட்டு ஆடுவோம்-காசு வைக்காமல் தான். அப்பொழுது ஒரே கத்தலும் கூச்சலுமாக இருக்கும். தினமும் இதுவே நடந்துகொண்டு இருந்தது. பக்கத்து வீட்டில் "திடீர்திடீர்' என்று விளக்கு எரியும். ஜன்னலைத் திறந்து பார்ப்பார்கள். நாங்கள் ஒன்றையும் பெரிதாக நினைக்கவில்லை. எங்கள் சீட்டு ஆட்டத்திலேயே மூழ்கி இருந்தோம். ஐந்தாறு நாட்கள் அது தொடர்ந்தது.அப்புறம் ஒருநாள் பக்கத்து வீட்டில் இருந்து ஒரு ஆள் வந்தார்.பார்க்கப் பெரிய மனிதர் மாதிரி இருந்தார். மிகவும் சாந்தமான குரலில், "கொஞ்சம் சப்தம் இல்லாமல் இருந்தால் நாங்கள் தூங்க முடியும்" என்றார்.

எங்களுக்கு வெட்கமாகப் போய்விட்டது. சரியென்று தலையசைத்தோம். இவ்வளவு தன்மையாக நடுஇரவில் சொல்லிவிட்டுப்போகும் இவர் யார் என்று தெரிந்துகொள்ளும் ஆவலில் பெயரைக் கேட்டோம். பிரதிவிராஜ் என்றார். எங்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது. இந்தி சினிமாவின் முடிசூடா மன்னர் மாதிரியானவர். எங்களுக்கு வெட்கமாகப் போய்விட்டது. அன்றில் இருந்து சீட்டு ஆடுவதையும்-இரவில் விடியவிடிய 'லைட்' போட்டுக்கொண்டு பேசுவதையும் விட்டுவிட்டோம்.

மகாத்மா காந்தி டாக்குமெண்டரி படத்தை எடுத்துக்கொண்டு இருந்தபோது, ஒருவர், தண்டி யாத்திரை பற்றி ரகசியமாக எடுத்துவைத்து இருந்த படத்தை விற்க வந்தார். அவருக்குப் பணமுடை - ஏதாவது பணம் கொடுத்துவிட்டு முழுப்படத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். ஏங்கள் தேவை தண்டி யாத்திரைபற்றிச் சில அடிகள். அதை வாங்கிக் கொண்டு பணம் கொடுத்துவிட்டு-உங்கள் படத்திற்கு நல்ல விலை கிடைக்கும் வைத்திருங்கள் என்று சொல்லி அனுப்பிவைத்தேன். பின்னர் தண்டி யாத்திரை படம் நல்ல விலைக்குப் போனதாகச் சொன்னார்கள்.

மகாத்மா காந்தி படம் முடிந்ததும் சென்சாருக்குச் சென்றது. சென்சார் போர்டில் அப்பொழுது இருந்தது பிரபல டாக்டர் டி. கிருஷ்ணாராவ், இந்து ஆசிரியர். ஒரு வெட்டுக்கூட இல்லாமல் படத்திற்கு சர்டிபிக்கெட் கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் இருவரும் சென்சார் போர்டில் இருந்து நீக்கப்பட்டுவிட்டார்கள்.

இந்த அறிவிப்பு வந்ததும் தேசத்திற்கு ஒரு சிறிய அளவில் சேவை செய்து இருக்கிறோம் என்றார்கள்.

உற்சாகத்தோடு படம் எடுத்து முடித்து சென்சார் எல்லாம் ஆகிவிட்டது. ஆனால் படத்தை வெளியிடத் தியேட்டர் மட்டும் கிடைக்கவில்லை. அங்கும் இங்கும் முயற்சி செய்து பார்த்தோம். ஒன்றும் கிடைக்கவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் ஆபீஸைத் திறந்து வைத்துக்கொண்டு உட்கார்ந்து இருந்தோம்.

ஒருநாள் ஒரு குஜராத்தி ஆபிஸுக்கு வந்தார். மகாத்மா காந்தி படத்தைத் தங்களுக்கு சொந்தமான சயானி தியேட்டரில் வெளியிடக் கொடுக்கவேண்டும் என்றார். என்ன முறையில் என்று கேட்டேன். நீங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ அப்படி. ஆனால் சென்னையில் எங்கள் தியேட்டரில்தான் படம் முதலில் வெளிவரவேண்டும் என்றார். வெளியிடும் முறை பேசி முடித்தேன். நான் என்ன சொன்னாலும் அவர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தார். பின்னர் அவரிடம் மகாத்மா காந்தி படத்தை வெளியிட இவ்வளவு உற்சாகம் காட்டுவது ஏன் என்று கேட்டேன்.

"எங்களுக்கு ஊர் போர்பந்தர் பக்கம். வியாபார நிமித்தம் இந்தப் பக்கம் வந்து விட்டோம். எனது சகோதரி போர்பந்தரில் இருக்கிறாள். அவள் மகாத்மா காந்தி சத்தியாகிரகத்தைப் பார்த்துவிட்டு - அதில் மக்கள்



2-வது வட்டமேஜை மாநாட்டில் காந்தியார்



நீங்கள் வாழும் நாட்டை முன்னேறச் செய்யுங்கள்; எல்லோருடனும் சமாதானமாக வாழுங்கள்; அதுவே நாட்டுக்கும் நல்லது, நமக்கும் நல்லது.

-காயிதே மில்லத்

போலீஸ் அடிதடிக்கு ஆளாவதைப் பார்த்து மனம் நொந்துபோய் இருக்கிறாள்-இந்தச் சமயத்தில் நீங்கள் மகாத்மா பற்றி ஒரு படம் எடுத்து இருப்பதைப் பற்றி பத்திரிகையில் படித்துவிட்டு-எப்படியாவது மகாத்மா பற்றிய படத்தை நமது தியேட்டரியில் வெளியிடவேண்டும் என்று எழுதினாள். அதனால்தான் வந்தேன்'' என்றார்.

இன்னொரு சந்திப்பில் ஏ.கே.செட்டியார் முதல் சுதந்திர தினத்தன்று - ஆகஸ்டு 15ஆம் தேதி புதுதில்லியில் மகாத்மா காந்தி படத்தைத் திரையிட்ட விதத்தையும் - அதில் கலந்து கொண்டவர் களையும் பற்றிச்சொன்னார்.

எனக்கு ஆகஸ்டு 15ஆம் தேதி அன்று மகாத்மா காந்தியைப் புதுதில்லியில் தேசத்தலைவர்களுக்குப் போட்டுக்காட்ட வேண்டும் என்ற எண்ணம் வந்தது. பெட்டியை எடுத்துக்கொண்டு புதுதில்லிக்குச் சென்றேன். ரீகல் தியேட்டர் வசதியாக இருக்கும் என்றார்கள். அதன் முதலாளியைப் பார்த்துப் பேசினேன். உடனே அவர் ஒத்துக்கொண்டு, தனக்கு ஒரு பாஸ் மட்டுமாவது கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தியேட்டர் முடிவு ஆனதும், பிரதமர் ஜவகர்லால் நேருவைச் சென்று பார்த்தேன்.

இன்றைக்கு முடியாதே என்று வருத்தப்பட்டார். கூடஇருந்த இந்திரா காந்தியை அனுப்பி வைப்பதாகவும் இன்னொரு நாள் போட்டால்-கண்டிப்பாகத் தான் வருவதாகவும் சொன்னார்.

பிறகு ராஜேந்திர பிரசாத்தைப் பார்க்கப் போனேன். அவரைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம் இருந்தது. அவரிடம் விஷயத்தைச் சொன்னேன். சந்தோஷமாகச் 'சரி' என்றார். ஆனால் அவர் செயலாளர், ''உங்களுக்கு அந்த நேரத்தில் வேறு முக்கியமான வேலை இருக்கிறது...'' என்று டைரியைக் கொண்டுவந்து காட்டினார்.

அதை அவரே வாங்கி, பழைய அப்பாயின்மெண்டை அடித்துவிட்டு அதன்மீது 'ரீகல்-மகாத்மா காந்தி படம்' என்று எழுதினார்.

புதுதில்லியில் ஆகஸ்டு 15ஆம் தேதி மகத்தான காரியங்கள் நடந்துகொண்டு இருந்தபோது-மகாத்மாகாந்தி படத்தையும் அதில் சேர்த்துச் சொல்லவேண்டும்.

ஏ.கே.செட்டியார், தன் மகாத்மா காந்தி படத்தை இந்திய அரசுக்குக் கொடுத்துவிட்டார்.

ஆட்டன்பரோவின் காந்தி சினிமா வந்தபிறகு ஒருநாள் ஏ.கே.செட்டியாரைப் பார்த்துப் படம் பார்த்தீர்களா? என்று கேட்டேன்.

"இல்லை. பார்ப்பதாகவும் இல்லை. நான் மகாத்மா காந்தி பற்றி ஒரு படம் எடுத்து இருக்கிறேன். காந்தி பற்றி எனக்கொரு கருத்து உண்டு. அது அப்படியே இருக்கட்டும்'' என்றார்.

பிறகு, காந்தியில் மகாத்மா வேகமாக நடப்பது பற்றிப் பேச்சு வந்தபோது சொன்னார். ''சாதாரணமாகவே மகாத்மா வேகமாக நடப்பார். ஆனால், காந்தி சினிமாவின் வேகம் மாதிரி அது இருக்காது; அப்பொழுது இருந்த பிலிம் ஸ்பீடு, காந்தியை அதிவேகமாக நடப்பது மாதிரி காட்டி இருக்கும்.

அதை டைரக்டர் எடுத்துக்கொண்டு இருக்கலாம். இந்தக்குறை இருந்தாலும், காந்தி நன்றாக இருக்கிறது என்று எல்லோரும் சொல்கிறார்கள். அதுவே எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது'' என்றார்.



மகாத்மா காந்தியைப் பற்றிய முதல் டாக்குமெண்டரி என்பதோடு மட்டுமில்லாது - மிக முக்கியமான டாக்குமெண்டரி என்ற சிறப்பும் ஏ.கே.செட்டியார் தயாரித்த 'மகாத்மா காந்திக்கு' உண்டு! ✽

# எங்கும் விடுதலை எதிலும் விடுதலை!




சிலம்பொலி செல்லப்பன்

அண்டிப் பிழைக்க வந்த ஆங்கிலேயர்களால் அடிமைப் படுத்தப்பட்டு உரிமை வாழ்வை இழந்து கிடந்த இந்திய நாடு விடுதலை பெற்று ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. நாடு முழுவதும் பொன்விழா நாள் பொலிவுடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நாளில் இரண்டு செயல்களை நாம் மேற்கொள்ளவேண்டும். இன்னுயிர் ஈந்தும், இன்னல் பல ஏற்றும் விடுதலைக்காகப் போராடியவர்களுக்கு நம் நன்றியைக் காணிக்கையாக்குவது ஒன்று; பெற்ற விடுதலையைப் பேணிக் காத்து, 'விடுதலை' என்னும் சொல்லுக்கான உண்மைப் பொருளை உருவாக்கி நிலவச் செய்வது இன்னொன்று.

விடுதலைப் போராட்டம் வீறுகொண்டிருந்த காலத்தில் அவரவர் தாம் ஈடுபட்டிருந்த துறையைப் போர்க்களமாக்கிக் கொண்டனர். பேச்சு, எழுத்து, செயல் அனைத்தும் விடுதலை உணர்வைத் தூண்டுவனவாக அமைந்தன. எந்தச் செயலைச் செய்தாலும் அதில் மறைமுகமாகவோ நேரடியாகவோ விடுதலை உணர்வு கொப்புளிக்கும்.

வள்ளித் திருமணம் நாடகம் நடைபெறும். நாரதர் வாயிலாக வள்ளியைப் பற்றி அறிந்த முருகன், வேடன் வடிவில் வள்ளியைக் காணத் தினைப்புனம் வருவான். தினைப்புனத்தில் வள்ளி 'ஆலோலம்' பாடிப் பறவைகளை விரட்டியிருப்பாள். இக்காட்சியில் வேடனாக வரும் முருகன், நாடக முறைப்படி

'ஆயலோட்டும் பெண்ணே
ஆவியே என் ஆருயிர்ச் சஞ்சீவியே
மன்மதன் என்னும் பாவியே
மலர்க் கணைகள் தூவியே
வாட்டுறான் கண்ணே !
ஆயலோட்டும் பெண்ணே'...

- என்று பாடிக்கொண்டு திரையினின்று வெளியே வரவேண்டும். ஆனால் அன்றைய நடிகர்கள், விசுவநாத தாஸ் போன்றவர்கள்-இந்தப் பாடலைப் பாடி வரமாட்டார்கள். மாறாக-

கதர்க்கப்பல் கொடி தோணுதே
கரம்சந்திர மோகனதாஸ்
காந்தி இந்தியா சுதேச
கதர்க்கப்பல் கொடி தோணுதே !'
- என்றோ, அல்லது
'பண்டித மோதிலால் நேருவைப்
பறிகொடுத்தோமே-நெஞ்சம்
பரிதவித்தோமே !'



- என்றோ பாடிக்கொண்டு வருவார்கள். கொட்டகை முழுவதும் கைத் தட்டல்-எழுச்சி முழக்கம்.

வள்ளியை மணக்க வருகின்ற வேடனுக்கும், கதர்க்கப்பல் கொடிக்கும் எந்தத் தொடர்புமில்லை. என்றாலும் நாட்டில் கொழுந்துவிட்டெரிந்த விடுதலைப் போரின் வீச்சு-பேச்சேயாயினும், எழுத்தேயாயினும், நாடகங்களேயாயினும், கதை புதினங்களேயாயினும்-அனைத்திலும் எதிரொலித்தது.

அடக்குமுறை கோலோச்சிய காலம். இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் தூக்குமேடை என்ற காட்டாட்சிக் காலம். இத்துணை கொடுமைகளிலும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, எவ்வாறோ விடுதலைக் கருத்து விதைகளைத் தூவி விடுவர்.

நாடக மேடைகளில் ஆங்கிலேயரிடம் இந்தியர் நம் நிலை கூறுவது போன்று ஒரு காட்சி. வெள்ளையர் என்று சொல்வதற்குக கூட அச்சம். ஆங்கிலேயரைக் கொக்கு என்றும், இந்தியரைக் காக்கை என்றும் குறியீடாக்கி, கொக்குக்கும் காக்கைக்கும் உரையாடல் நடக்கும்.

காக்கை : கொஞ்சமா நஞ்சமா எங்கள்
கும்பி கொதிக்கப் பணத்தைக்
கொள்ளை கொண்டு போகிறாயே
கொக்கே கொக்கே-வெள்ளைக்
கொக்கே கொக்கே!

கொக்கு : அங்குக் கொண்டுபோன பணத்திற்கு
இந்தியா சட்டசபையில் செலவுண்டு
காக்காய் காக்காய்-கருங்
காக்காய் காக்காய்

காக்கை : கஞ்சியில்லா ஏழைமக்கள்
கஷ்டப்படும் காலத்திலே
கள்ளுக்கடை எதுக்காக
கொக்கே கொக்கே!-வெள்ளைக்
கொக்கே கொக்கே!

கொக்கு : கஞ்சியில்லா ஏழைமக்கள்
கஷ்டப்படும் காலத்திலே
கள்குடித்துப் போதைவந்தால்
கவலை தெரியாதடி
காக்காய் காக்காய்-கருங்
காக்காய் காக்காய்

காக்கை : ஆட்டுத்தோலுக் கம்பெனிக்கு
ஆதியில் இடங்கொடுத்து
உங்களிடம் மாட்டிக்கொண்டோம்
கொக்கே கொக்கே-வெள்ளைக்
கொக்கே கொக்கே!

கொக்கு : ஆட்டுத்தோலுக் கம்பெனிக்கு
ஆதியில் இடம் வாங்கி
வண்ணப்புகை வண்டியென்ன
தந்தியென்ன தபாலென்ன ',...

- இவ்வளவு நன்மைகள் செய்திருக்கிறோமே எனத் திமிராகப் பேசும். நாட்டுக்கு உரியவர் அஞ்சி, நடுங்கி, கெஞ்சிக் கேட்க வஞ்சகமாய் நாட்டை கொண்டோர் மிரட்டி, அடக்கி, ஓங்கிப் பேசிக் கொண்டிருக்கும் இரங்கத்தக்க நிலை.

வீழ்ந்து கிடக்கும் நிலையிலிருந்து இந்தியன் வீறுகொண்டெழுகின்ற காட்சியை நாடகப் போக்கிலேயே பாரதியாரும் ஒரு பாடலில் படைத்துக் காட்டுகிறார். காக்கையாக இல்லாமல் இந்தியன் இந்தியனாகவே பேசுகிறான்; ஆங்கிலேயனிடம் தன் உறுதிப்பாட்டினை எழுச்சிக் குரலில் முழங்குகிறான்.

ஆங்கிலேயன் விடுதலை வேண்டுமென்று கோரும் இந்தியனிடம் சொல்கிறான்:

'தொண்டு செய்யும் அடிமை-உனக்குச்
சுதந்திர நினைவோடா ?
பண்டு கண்ட துண்டோ ?-அதற்குப்
பாத்திரம் ஆவாயோ
ஜாதிச் சண்டை போச்சா ?-உங்கள்
சமயச் சண்டை போச்சா ?
நீதிசொல்ல வந்தாய் கண்முன்
நிற்கொணாது போடா !'

ஆங்கிலேயன் விரட்டுகிறான்; இந்தியன் முன்புபோலக் கூனிக்குறுகி நெளியவில்லை; துணிச்சலோடு நேர் நின்று கேட்கிறான்;

'சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்-இனி அஞ்சிடோம்
எந்த நாட்டினும் இந்த அநீதிகள்
ஏற்குமோ ?-தெய்வம் பார்க்குமோ ?
வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம்-முடி-தாழ்த்துவோம்!
எந்தம் ஆருயிர் அன்னையைப் போற்றுதல்
ஈனமோ ?-அவமானமோ ?'

என் தாயை நான் போற்றுவது ஈனமா? வெள்ளையனே! என் சதையைத் துண்டு துண்டாக வெட்டி, நாய்களுக்கும், கழுகுகளுக்கும், பொல்லா விலங்குகளுக்கும் போட்டால்கூட "என் உள்ளத்திலே ஏற்றிவைத்துள்ள தீயை-உரிமை வேட்கையை உலகத்தில் எந்தச் சக்தியாலும் அணைக்கமுடியாது' என அழுத்தந்திருத்தமாக வெள்ளையன் கன்னத்தில் அறைவதுபோலப் பேசுகிறான்.



'சதையைத் துண்டுதுண்டாக்கினும் உன் எண்ணம்
சாயுமோ ?-ஜீவன்-ஓயுமோ ?
இதயத்துள்ளே இலங்கு மகாபக்தி
ஏகுமோ ?-நெஞ்சம்-வேகுமோ ?'

- இது இந்தியனின் வீரக்குரல்.

இவ்வாறு துணிந்து பாடுபட்டதால் விடுதலை பெற்றோம். ஐம்பதாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம்.

விடுதலை பெற்றது பெரிதில்லை. பெற்ற விடுதலையைப் பயனுள்ளதாக்க வேண்டும்! அதற்குத் தடையாயுள்ளவற்றை முதலில் அழித்தொழிக்க வேண்டும்! அப்போதுதான் விடுதலை பயனுள்ளதாய் இருக்குமென விடுதலைபெற்ற அப்போதே எடுத்தியம்பினர் எண்ணற்றோர். விடுதலை பெற்ற நம் நாட்டில் என்னென்ன குறைபாடுகள் தோன்றலாம் என்பதைப் பாவேந்தர் பாரதிதாசன் அன்றே பட்டியலிட்டுக்காட்டினார்.

'எண்ணிலா வீரர்கள் எண்ணிலாத் தீரர்கள்
கண்ணீர் செந்நீர் களங்கண்ட தன்பின்
வந்தது விடுதலை; உரிமை பெற்றது;
உடல்பொருள் ஆவி வெந்தீந் தவரின்
ஈகத்தி னால்தான் எய்தினோம் விடுதலை !'

விடுதலை பெற்று விட்டோம்! மகிழ்ச்சி! ஆனால் அவ்விடுதலையின் பயனைப் பெற முடியாத் தடைக்கற்கள் உள்ளனவே என எச்சரிக்கிறார் பாவேந்தர். விடுதலை பெற்று விட்டோம்; என்றாலும் இனி,

'சாதி மதத்தின் சழக்குகள் மிகுந்திடும்
இனவெறி யாட்டம் பிணம்தின்னி யாகும்
மொழிப்போர் மூளலாம்; சமதரு மத்தின்
விழி திறவாது; வேற்றுமைச் சிக்கல்
மாநிலம்தோறும் - வெறுப்பும் பகையும்
கால்கொளும்; ஏழை எளியவர் கடுந்துயர்
உள்நாட்டவரால் கொள்ளைநோய் ஆகும்'!

– விடுதலை கிடைத்த அப்போதே இதைப் பாடினார். 'இப்பொழுதே நீ எப்படி அறிவாய்? என்று என்னை அனைவரும் சினக்கவும் கூடும்!' என்றும் சொல்லுகிறார். இருந்தாலும் நான் சொல்லுகிறேன் என அவர் தொடர்கிறார்:

'மக்களுக் குள்ள சிக்கலறுக் காமல்
எல்லார்க்கும் எல்லாம் என்னும் உரிமை
சொல்லால் செயலால் தொடவும் எண்ணிடார்!
இரவில் வாங்கும் இந்திய விடுதலை
என்று விடியுமோ யார் அறிகுவரே!'

– என மக்களுக்கிடையே உள்ள சாதி மத வேறுபாடுகள், மத இனக்கலவரங்கள், சமத்துவமின்மை இவற்றையெல்லாம் எண்ணி நொந்து விடுதலையின் முழுப்பயனைப் பெறுவோமோ? என்று ஏங்கிப் பேசினார்.

இந்த ஏக்கம் இன்னும் ஏக்கமாகவே இருக்கிறது. ஏக்கத்தைப் போக்கி ஆக்கத்தைக் கூட்ட ஐம்பதாண்டுப் பொன்விழா நாள் புதிய பாதை காணட்டும்! ★

# சுதந்திர இந்தியா -சில கருத்துகளும் உணர்வுகளும்

முனைவர் மு. நாகநாதன்

இது (1997) இந்தியாவின் விடுதலைப் பொன்விழா ஆண்டு. 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாள், வெள்ளை ஏகாதிபத்தியம் இந்தியர்களிடம் அரசியல் அதிகாரத்தை அளித்த நாளாகும். அம்பது ஆண்டுகளில் இந்தியா பல்வேறு துறைகளில் அடைந்த வெற்றிகளையும், அடையவேண்டிய இலக்குகளையும் ஆய்வதற்கு முன், கடந்த நூற்றாண்டுகளில் அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் அந்நிய ஆதிக்கம் எப்படி கால் ஊன்றியது, நிலைபெற்றது என்பதையும் சிந்திப்பது அவசியமாகிறது.



பல்வேறு இன, மொழி, பண்பாடு, மத மற்றும் உணவுப் பழக்கவழக்கங்களை உடைய பல தேசிய இனங்களின் கூட்டமைப்பே இந்தியாவாகும். இந்தக் கூட்டமைப்பு உடைவதற்கும், உருவாவதற்குமான காரணங்களைப் பல அரசியல் அறிஞர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

முகலாயப் பேரரசு வீழ்ந்த பிறகுதான் அந்நிய ஆதிக்கச் சக்திகள் இந்திய அரசியலை ஆக்கிரமித்தன என்கிறார் கார்ல் மார்க்சு. அவரின் கூற்றுப்படி -

“முகலாயப் பேரரசின் ஆட்சியை முகலாய சிற்றரசர்கள் முறியடித்தனர்; முகலாய சிற்றரசர்களின் ஆட்சியை மராட்டிய அரசர்கள் முடிவுக்குக் கொண்டு வந்தனர். மராட்டியர்களின் ஆட்சியை ஆப்கானிய அரசர்கள் முறியடித்தனர். எல்லோரும் ஒருவருக்கொருவர் போராடிக் கொண்டிருந்தபோது, பிரிட்டன் அதிவேகமாக நுழைந்து இவர்களை எல்லாம் அடிமைப்படுத்தியது”.

"The paramount power of the Great Mughal was broken by the Mughal Viceroys. The power of the Viceroys was broken by the Mahrattas. The power of the Mahrattas was broken by the Afghans and while all were struggling against all, the briton rushed in and was enabled to subdue them all".

நடந்து முடிந்த இவ்வரலாற்று நிகழ்ச்சி நிகழ்காலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கும் ஓர் எச்சரிக்கைதானே? நாடு இரண்டுபட்டது கூத்தாடிக்குக் கொண்டாட்டமோ இல்லையோ, வெள்ளையர்களின் கொள்ளைக் கூத்திற்கு வழிவகுத்துவிட்டது. பிரிட்டானிய ஏகாதிபத்திய அரசு சர்வ வல்லமைமிக்க ஆட்சியை 19ஆம் நூற்றாண்டில் நிறுவி, வணிக மற்றும் காலனி சுரண்டலைத் தொடங்கியது. இந்திய வளங்கள் சூறையாடப்பட்டு, பிரிட்டன் சொர்க்க பூமியாவதற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இந்தக் காலகட்டத்தில், உலகின் மற்ற பகுதிகளில் ஏற்பட்ட கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் தாக்கங்களைப் பற்றி அறியாமல் பெரும்பான்மையான மக்கள் சாதி, மத மருளில் மண்டிக்கிடந்தனர். 1893ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 20ஆம் நாள் புரட்சித்துறவி விவேகானந்தர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து இந்திய மக்களின் நிலையை நாம் அறிய முடிகிறது.

“கிழக்கிந்திய நாடுகளில் மிக அவசியமான தேவை என்னவெனில், மதமல்ல - மக்கள் அதிக அளவில் மதங்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், அங்கே தேவைப்படுவது ரொட்டிதான். பசியால் வாடுகின்ற மக்களிடம் போய் மதத்தைத் தருவது அவமானத்திற்குரிய செயலாகும். பசியால் வாடும் மனிதனிடம் போய் கற்பனைக் கருத்துக்களைச் சொல்வதும் அவமானத்திற்குரிய செயலாகும்!

"The crying evil in the East is not religion - they have religion enough - but it is bread ... It is an insult to the starving people to offer them religion, it is an insult to a starving man to teach him Metaphysics".

சாதி, மத மயக்கத்திலிருந்து மக்கள் தெளிவுபெற்றால்தான், சமூகத்தில் அறிவு பரவும் என்று எண்ணி, சமூகச் சீர்திருத்தச் செம்மல்கள் ராசாராம் மோகன்ராய், விவேகானந்தர் போன்றவர்கள் புரட்சி முழக்கம் செய்தனர்.

இஸ்லாமியப் பெருமக்களும் பிரிட்டானிய ஏகாதிபத்தியம் உறுதிப்படுத்திய கொடுமைகளை எதிர்க்கத் தலைப்பட்டனர். வகாமி இயக்கத்தை (WAHHABI MOVEMENT) தொடங்கி, இஸ்லாமிய மக்கள் அறிவியல் தொழில்நுட்பக் கல்வி கற்றல் வேண்டும் என்று அப்துல் வகாப் வலியுறுத்தினார். பின்பு சையது அகமதுகான் அலிகார் கல்லூரியைத் தொடங்கினார்.

புதிய சிந்தனைகள் பெற வேண்டும் என்ற பேரார்வம் மதங்களைக் கடந்து பரவத் தொடங்கியது. முற்போக்குக் கருத்துக்களும், மதச்சார்பின்மையும் மக்களிடையே தென்படத் தொடங்கின. இந்த நல்உணர்வுகளை இந்திய தேசியக் காங்கிரசும், அந்தப்

பேரியக்கத்தில் பணியாற்றிய தீவிரவாதிகளும், பிரிட்டானிய அரசிற்கு எதிராகப் பயன்படுத்தினர். காங்கிரஸ் இயக்கத்தில் பெரும்பான்மையோர் வெள்ளைய அரசு பல சீர்திருத்தச் சட்ட நடவடிக்கைகளையும், சலுகைகளையும் இந்தியர்களுக்கு வழங்கிட வேண்டும் என்று வாதிட்டனர்.

இந்தியாவில் இரண்டு இந்தியாக்கள் உள்ளன. பணம் படைத்தோரின் இந்தியா ஒன்றும், ஏழை இந்தியா மற்றொன்றும் உள்ளது. முதல் இந்தியாவில் பிரிட்டானிய முதலாளிகளும், உயர்நிலை அதிகாரிகளும், இராணுவத்தினரும் செழிப்புடன் வாழ்ந்து, வருமானத்தை இங்கிலாந்திற்கு அனுப்புகின்றனர்.

இரண்டாவது இந்தியாவில் ஏழைகளும், உழைப்பாளிகளும் வறுமையில் வாடி வதங்குகிறார்கள். முதல் இந்தியா இரண்டாவது இந்தியாவைச் சுரண்டி சுகம் காணுகிறது என்று புள்ளி விவரங்களோடு பறைசாற்றினார் தாதாபாய் நவரோஜி அவர்கள். தாதாபாய் அடுக்கிக் காட்டிய ஆதாரங்களைத் தொடர்ந்து ரானடே, கோகலே, லாலா லசபதிராய், ஆர்.சி. தத் போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஏகாதிபத்தியச் சுரண்டலை எடுத்துக் காட்டினர். விருந்து மண்டபங்களிலும், விழா மண்டபங்களிலும் ஒலித்த குரலைப் பெருந்தலைவர் காந்தியார் நகரங்களில், கிராமங்களில், வெட்டவெளியில், மக்கள் மன்றத்தில் எதிரொலிக்கச் செய்தார்.

அரசர்களையும், ஆண்டிகளையும், நில உடைமையாளர்களையும், நிலமற்ற விவசாயிகளையும், முதலாளிகளையும், தொழிலாளர்களையும், இந்துக்களையும், இஸ்லாமியர்களையும், மிகப் பிற்போக்கான பார்ப்பனர்களையும், தீண்டத்தகாதவர்களையும் காங்கிரஸ் பேரியக்கத்தின் ஆதரவாளர்களாக மாற்றினார். தந்தை பெரியாரையும், மூதறிஞர் ராசாசியையும் காங்கிரஸ் பேரியக்கத்தில் இணைத்தது காந்தியின் தலைமைதானே!

1921ல்' தொடங்கிய ஒத்துழையாமை இயக்கம், அந்நியத் துணிகள் எரிப்பு, உப்புச் சத்தியாகிரகம், கள்ளுக்கடை மறியல், வெள்ளையனே வெளியேறு போன்ற போராட்டங்கள் பிரிட்டானிய ஆட்சியை அகற்றுவதற்கு வழிகோலின. மாவீரர் நேதாஜியின் தலைமையில்



இந்திய தேசிய இராணுவத்தின் போர்த் தாக்குதல்கள் பிரிட்டானிய அரசை நிலைகுலைய வைத்தன. இரண்டாவது உலகப் போரில் ஏற்பட்ட இழப்புகள், இங்கிலாந்து நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்கள், வெள்ளையர்கள் இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு வழிவகுத்தன. ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளாக நடைபெற்ற அரசியல் நிகழ்வுகள், அம்பது ஆண்டுகளாக நடைபெற்ற போராட்டம், சில கருத்துத் தாக்கங்களைத் தெளிவுபடுத்தின. ஏழ்மை, இல்லாமை, கல்லாமை போன்ற இருளில் சிக்கியுள்ள மக்கள் விடுதலை பெற வேண்டும். சாதி, மதச் சண்டைகள் அறவே அகற்றப்பட வேண்டும். ஏற்றத்தாழ்வு குறைந்த சமூகம் தோற்றுவிக்கப்படல் வேண்டும் என்பதைப் போன்ற உயரிய எண்ணங்களும், நெறிகளும் உருவாவதற்குத் தானே இந்த விடுதலைப் போராட்டத் தாக்கங்கள் பயன்பட்டிருக்க வேண்டும்? பயன்பட்டனவா, உண்மையான விடுதலை பெரும்பான்மையோருக்குக் கிட்டியதா என்ற வினாக்கள் எழும்பிய வண்ணம் உள்ளன.

விடுதலை பெற்ற பிறகு, இந்தியாவில் ஏற்பட்ட பிளவுகள், பிணக்குகள், மதவாதப் போக்குகள் எல்லாம் விடுதலைப் போராட்ட உணர்வுகளுக்கு எதிரானவை. ஏற்பட்டுவிட்ட இந்தத் துயர்நிகழ்ச்சிகளுக்கு இடையேதான் கடந்த அம்பது ஆண்டுகாலப் பொருளாதார, சமூக வளர்ச்சிப் போக்கினையும், ஏற்றத்தாழ்வையும் கணக்கிடல் வேண்டும். 150 ஆண்டுகால வணிக, காலனியச் சுரண்டலால் நிலைகுலைந்த இந்தியப் பொருளாதாரத்தைச் சீர் செய்வதற்குத்தான், சுயச்சார்புடைய பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்க அய்ந்தாண்டு திட்டங்கள் தீட்டப்பட்டன.

வளர்ச்சியும், சமூகநீதியும் இரு பெரும் குறிக்கோள்களாகச் சுட்டிக்காட்டப்பட்டன. அரசின் முதலீடு விவசாயத்துறை, தொழில்துறை மற்றும் கல்வி, மருத்துவத் துறைகளில் செய்யப்பட்டது. இதன் விளைவாக, பல தடுமாற்றங்களுக்கு இடையிலேயும் பல சாதனைகளை இந்தியப் பொருளாதாரம் படைத்திருக்கிறது.

1950- 51ஆம் ஆண்டில் இந்திய தேசிய வருமானம் ரூ.8,574 கோடியாகும். இது 1993- 94ஆம் ஆண்டில் 6.14 இலட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. தனிநபர் வருமானம் 1950- 51ல் 239 ரூபாயாக இருந்து 1993 -94ஆம் ஆண்டில் 6,910 ரூபாயாக அதிகரித்துள்ளது. விவசாய வளர்ச்சி,குறிப்பாக உணவு தானிய உற்பத்தி 1950- 51ஆம் ஆண்டில் 50.8 மில்லியன் டன்னாக இருந்து 1993 -94ஆம் ஆண்டில் 182 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது.

தொழில் துறையின் உற்பத்திக் குறியீடு 1950- 51ஆம் ஆண்டு 18.3

ஆக இருந்தது. இது 1993 -94ல் 225.4ஆக உயர்ந்துள்ளது. எரிசக்தி வளர்ச்சி 1950 -51ல் 2.3 மில்லியன் கிலோவாட்டாக இருந்து 1993 -94ல் 86.7 மில்லியன் கிலோவாட்டாக அதிகரித்துள்ளது. பால், வெண்ணெய், சிமெண்ட் உற்பத்தியில் இந்தியா உலகில் முதலிடம் வகிக்கிறது. இரும்பு உற்பத்தியில் உலகில் ஆறாவது இடத்தை வகிக்கிறது.

இந்திய மக்கள்தொகை 1950-51ஆம் ஆண்டு 36 கோடியாக இருந்து 1994 -95ஆம் ஆண்டு 90 கோடியாக அதிகரித்துள்ளது. மக்கள்தொகை வளர்ச்சி இந்தியப் பொருளாதாரத்தில் பெற்ற பல சாதனைகளை முறியடிக்கிறது. பிறப்பு விகிதம் 1950 -51ஆம் ஆண்டு ஆயிரம் நபருக்கு 39.9 ஆக இருந்து 1994 -95 ஆம் ஆண்டு ஆயிரம் நபருக்கு 28.6 ஆகக் குறைந்துள்ளது. அதேபோன்று இறப்பு விகிதம் 1950 -51ல் 9.2 ஆக குறைந்துள்ளது.



சராசரி மனிதனின் ஆயுள் காலம் 1950 -51ல் 32.1 ஆக இருந்து 1994 – 95ல் 60.8 ஆக உயர்ந்துள்ளது.

இதுபோன்று பல சாதனைகளைப் பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்தியிருந்தாலும் ஏழ்மையும், ஏற்றத்தாழ்வும், கல்லாமையும் பொன்விழாவைக் கடந்துசெல்லும் இந்தியாவிற்கு அறைகூவல்களாக உள்ளன. அந்நியக் கடன்கள் அச்சுறுத்தும் நிலையில் உள்ளது. ஆனால் அண்டை நாடான மக்கள் சீனத்தில் பல துறைகளில் ஏற்பட்டுள்ள சீரான வளர்ச்சி, உறுதியான பொருளாதார அமைப்பு நமக்கு நல்ல படிப்பினை தருகிறது. நூறு கோடி மக்கள் தொகையைத் தாண்டிவிட்ட சீனம் 2020 ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டைவிடப் பொருளாதார வளர்ச்சியிலும், வளமையிலும் மிஞ்சிவிடும் என்று உலக வங்கி (WORLD BANK) அறிக்கை கூறுகிறது.

ஆனால் இந்திய நாட்டில் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தாதாபாய் நவரோஜி எழுப்பிய சில வினாக்களுக்கு இந்திய சுதந்திரம் இன்னும் விடை அளித்ததாகத் தெரியவில்லை. இந்தியாவிற்குள் இரண்டு இந்தியா இருப்பதாகத் தாதாபாய் குறிப்பிட்டார். விடுதலை பெற்று அம்பது ஆண்டுகள் ஆகியும், வெள்ளை ஆட்சி வெளியேறியும் பணக்கார இந்தியாவும், ஏழை இந்தியாவும் இருந்துகொண்டுதானே உள்ளது?

இந்நிலை போக்கிட அறிஞர்கள் சிந்திக்க வேண்டும். அரசியல் தலைவர்கள் நல்வழி காட்டிடல் வேண்டும். இளைஞர்கள் எழுச்சிபெற்று நாடு நலம் பெற நற்பணிகள் ஆற்றிட வேண்டும். ஊழல் விரட்டப்படல் வேண்டும்.

இந்த உயரிய இலக்குகளை அடையத்தான், இந்தியத் தலைவர்களுக்கு எடுத்துக்காட்டாய், 74 அகவை கடந்தாலும், உறுதி கொண்ட நெஞ்சோடு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அயராது, ஓயாது உழைக்கிறார். ஏழைமக்கள் பயன்பெறும் வகையில் நல்லாட்சி தருகிறார். ஆனால், நாட்டில் நாள்தோறும் பிரச்சினைகள் பெருகி வருகின்றன. இவற்றினை வெற்றியுடன் எதிர்கொள்வதற்கு, புதியதோர் உலகம் படைப்பதற்கு, இளைஞர்கள் புரட்சிகரச் சிந்தனைகளோடு, சுயநலமற்ற உழைப்பினை நல்கிடல் வேண்டும் என்பதே விடுதலை நாள் பொன்விழா ஆண்டின் முழக்கமாக இருந்திடல் வேண்டும்.

## தேசிய கீதமும் தேசியப் பாடலும்!

*ரவீந்திரநாத் தாகூரால் எழுதப்பட்ட 'ஜன கண மன' 1911ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் தேதியன்று கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் தான் முதன்முறையாகப் பாடப்பட்டது.*

*1950ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் தேதி இந்த பாடலை இந்தியாவின் தேசிய கீதமாக அரசியல் சாசன சபை அங்கீகரித்தது. இப்பாடல் ஐந்து பத்திகளைக் கொண்டது. முதலாவது பத்தி தேசிய கீதத்தை முழுவதுமாக கொண்டுள்ளதாகும்.*

*பங்கிம் சந்திர சட்டர்ஜி எழுதிய 'வந்தே மாதரம்' பாடல் சுதந்திரத்திற்காக போராடிய நம் முன்னோர்களுக்கு எழுச்சியூட்டுவதாக இருந்தது. இது 'ஜன கண மன' பாடலுடன் சம அந்தஸ்து கொண்டது. 1896ஆம் ஆண்டில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் தான் அரசியல் விழாவில் முதன்முறையாக இது பாடப்பட்டது.*

*இதுவும் தேசிய கீதத்திற்கு இணையாகவே மதிக்கப்படுகிறது.*

"தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டிரங்குவாய் வா வா வா
ஏறு போல் நடையினாய் வா வா வா"

– என்று முழங்கிய விடுதலைப் போராட்டக் கவிஞர் பாரதியின் உணர்வு வரிகளை உள்ளத்தில் ஏந்திச் செயல்பட வேண்டும்.

**REFERENCES**


1. The Future Results of the British Rule in India - New York Daily Tribune, 8 August 1853
2. Tilak and the Struggle for Freedom Edited J.M. REISNER and NIM GOLDBERG 1963.
3. The Indian Musalmans - Hunter and History of the Freedom Movement - TARACHAND in India 1967 New Delhi.

# விடுதலைப்போர்க்கால சமயச் சீர்திருத்தம்: ராஜாராம் மோகன்ராய்



ஆங்கிலேயரின் ஆட்சி 18ஆம் நூற்றாண்டின் கடைசியில் இந்தியா முழுவதுமே நிறுவப்பட்டுவிட்டது. அதனால் படர்ந்த ஆங்கில நாகரிகமும் பண்பாடும் நம்முடைய சமுதாய சமய இயக்கங்களைப் பெரிதும் ஊனப்படுத்துவதாக இருந்தன.

மேலைநாட்டு மோகத்தால், பலரும் கிறித்துவ மதத்தில் சேர்ந்திடலாயினர்.

இவ்வாறான காரணங்களால் இந்தியாவில் சில சீர்திருத்தவாதிகள் தோன்றினர்; அறிவியக்கம் உருவாயிற்று; சமூக, சமயக் கொள்கைகளில் தீவிர மாறுபாடுகள் ஏற்பட்டன. இவ்வாறான மாற்றங்கள் இந்திய நாட்டை இடைக்காலத்திலிருந்து நவீன காலத்திற்குக் கொண்டுவந்தன.

அப்படித் தோன்றிய சமுதாயச்சீர்த்திருத்த இயக்கங்களின் நோக்கம்-சாதிமுறைகளைச் சாடுவதும், இந்தியர்களிடையே ஒருமைப்பாட்டுணர்வை வளர்ப்பது மாகவே இருந்தது. அவ்வியக்கங்கள் மூலம் சாத்திரச் சம்பிரதாயங்கள் திறனாய்வு செய்யப்பட்டன; ஒழுக்கம், சமயம் ஆகியவை இதனால் புதிய விளக்கம் பெற்றன. இவ்வாறான புதிய மாறுபாடுகள் ஏற்பட அயராது உழைத்து நமது நாகரிகத்தையும் பண்பாட்டையும் காத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் ராஜா ராம்மோகன் ராய் ஆவார்.

19ஆம் நூற்றாண்டு இந்திய மக்கள் இந்தியப் பண்பாடு-மேனாட்டு நாகரிகம் ஆகிய இரண்டிற்கும் இடையே இருதலைக் கொள்ளி எறும்பாகத் தத்தளித்துக் கொண்டிருந்தார்கள். இந்திய சுதந்திரப் போர் வேகத்தையே இது பலவீனப்படுத்துவதாக இருந்தது.

மேனாட்டு அறிஞர்களும், பாதிரியார்களும் மக்களைத் தங்கள்பால் ஈர்க்க அரசே உதவியது;



1946ல் முதன்முதல் இந்தியாவில் அமைந்த இடைக்கால அரசு

அவர்களுக்கு அசல் அடிமைகளாகிவிடாமல் நம்மவர்களைக் காப்பாற்ற மதத்தலைவர்களும், சமூகச் சீர்திருத்தவாதிகளும் விழிப்போடு அறிவே துணையாகச் செயல்படலானார்கள். அவர்களில் முன்னின்று பாடுபட்ட ராஜா ராம்மோகன் ராய், 19ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிய "மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை" என்றே போற்றப்பட்டார்.

பன்மொழிப் புலவரான அவர், வங்காளத்தைச் சேர்ந்தவர். ஆத்மீக சபை, பிரம்ம சமாஜம் ஆகியவற்றின் நிறுவனர் இவரே. இவருக்குப் பின்னர் இந்திய மக்களிடம் ஆங்கிலேய மோகம் வேரூன்றாமல் தடுக்கும் நோக்கில்-பிரார்த்தனை சமாஜம், ஆரியசமாஜம், ராமகிருஷ்ணமடங்கள், பிரம்மஞான சபை போன்றவை தோன்றின.

இந்திய மொழிகளுக்கும், இந்தியருக்கும் வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்திக் கொடுத்தால் ஆங்கிலத்தையும், ஆங்கிலேயரையும் விடச் சிறந்துவிளங்குவர் என்பதை மெய்ப்பித்தார், ராஜா ராம்மோகன் ராய்.

விஞ்ஞானக் கல்வி இந்திய ஏழை-எளிய மக்களுக்கும் கற்பிக்கப்பட வேண்டும் என்று ஆங்கில அரசை வலியுறுத்தினார்.

'சம்வத் கௌமுதி' என்ற வங்கமொழிப் பத்திரிகையொன்றையும், 'மிராட்-உல்-அக்பர்' என்கிற பாரசீக மொழிப் பத்திரிகை ஒன்றையும் நடத்தினார். அவற்றின்மூலம் தம் சீர்த்திருத்தக் கருத்துக்களைப் பரப்பிடலாயினார், இவர்.

இதைக்கண்ட ஆங்கில ஏகாதிபத்தியம், அந்த ஏடுகளுக்குத் தடைவிதித்தது; அதை எதிர்த்து வழக்காடி வென்றார், ராய்.

கணவன் இறந்து போனால், மனைவியும் உடன்கட்டை ஏறவேண்டும் என்றிருந்த 'ஸதி' என்ற கண்மூடிப்பழக்கத்தை அரும்பாடுபட்டு மண்மூட்ச் செய்த பெருமையாளர் இவர். 1829ல் இந்த 'ஸதித்திட்டம்' வில்லியம் பெண்டிங் பிரபுவால் சட்ட விரோத செயலாக அறிவிக்கப்பட்டது.


THE REPUBLIC OF INDIA

26th January 1950

WE, THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a SOVEREIGN DEMOCRATIC REPUBLIC and to secure to all its citizens:

JUSTICE, social, economic and political;

LIBERTY of thought, expression, belief, faith and worship;

EQUALITY of status and of opportunity; and to promote among them all

FRATERNITY assuring the dignity of the individual and the unity of the Nation;

IN OUR CONSTITUENT ASSEMBLY DO HEREBY ADOPT, ENACT AND GIVE TO OURSELVES THIS CONSTITUTION

***இந்தியக்குடியரசு அரசியல் அமைப்பின் பூர்வாங்க வாசகம்.***

இதைத்தொடர்ந்து-பிற்காலத்தில் பலதார மணத் தடைச் சட்டம், சிறுவர் மணத் தடைச் சட்டம் போன்றவை கொண்டு வரப்பட்டன. விதவை மறுமணம் ஏற்கப்பட்டது. அடிமை முறை, பெண் குழந்தைக் கொலை ஆகியவை தடைசெய்யப்பட்டன.

நவீன கால மறுமலர்ச்சி, சமயச் சீர்திருத்த வரலாறெல்லாம் அடிமைப்பட்டுக்கிடந்த இந்தியாவில் தோன்றிட மூல காரணமாக இருந்தவரே மோகன்ராய் தான் என்று கவி தாகூரே சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

ராயின் பின்னால்-அவருடைய மறுமலர்ச்சிப் பணிகளைத் தேவேந்திரநாத் தாகூர், கேசவ் சென் போன்றோர் தொடர்ந்தனர். 1772ல் இந்தியாவில் பிறந்த ராய், 1833ல் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தபோது பிரிஸ்டலில் இறந்துபோனார்.

**— பி.எல்.ஆர்.**

## அஞ்சாதே தமிழா!

**'தமிழா, பயப்படாதே! ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களையெல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய். ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. 'ஜாதி இரண்டொழிய வேறில்லை' என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள். பெண்ணை அடிமையாகக் கருதாதே. முற்காலத்துத் தமிழர், மனைவியை 'வாழ்க்கைத் துணை' என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று, ஆணும் பெண்ணும் சமம்!**

*- மகாகவி பாரதியார்*

நாடக மேடைகள் மூலம் வெள்ளையரை நடுங்கவைத்த

# விடுதலை இயக்கப் பாடல்கள்

- சிலம்புச்செல்வர் ம.பொ.சி.

இந்திய விடுதலைப் போரின்போது இயற்றமிழும் இசைத்தமிழுமேயன்றி, நாடகத் தமிழும் வளர்ச்சி பெற்றது. விடுதலைப் பாசறை வீரர்கள் நாடக மேடையையும் விட்டுவைக்கவில்லை. அதனையும் கைப்பற்றி ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரசாரத்திற்குப் பயன்படுத்தினர்.

"நாடகம்" என்பதற்கு "நாடு முழுவதையும் தன்னகத்தே காட்டுவது" என்றும் பொருள் கூறப்படுகின்றது. ஆனால், விடுதலைப் போருக்கு முன்பு நாட்டின் நிலையைக் காட்டுவதாக நாடக மேடை இருக்கவில்லை. ஆம்; மன்னர் நாடு திகழ்ந்த பெருமையைக் காட்டும் சரித்திரங்களையோ, பின்னர் நாடு அன்னியர் வசப்பட்டு அல்லலுறுவதையோ, வருங்காலத்தில் நாடு அடைய வேண்டிய விடுதலைக்கான வழியையோ மக்களுக்குப் போதிக்கும் நாடகங்கள் அந்நாளில் நடத்தப்படவில்லை. மக்களுடைய வாழ்க்கையோடு பொருந்தாத இதிகாச-புராணக் கற்பனைக் கதைகளே நாடக மேடையிலே ஆதிக்கம் பெற்றிருந்தன. அந்த நிலையிலே மாறுதல் கண்டனர் தேசியவாதிகள்.

மராத்தி வீரன் சிவாஜி, செஞ்சி வீரன் தேசிங்கு, பாஞ்சாலங்குறிச்சிக் கட்டபொம்மன் ஆகிய ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களின் வீர வரலாறுகளையும்; காந்தியடிகள் சாத்வீக முறையில் தோற்றுவித்த தேசிய எழுச்சியையும் பரப்ப நாடக மேடையைப் பயன்படுத்தி, நாடகக் கலையிலே மறுமலர்ச்சி கண்ட பெருமையும் தேசியவாதிகளுக்கு உண்டு. இந்த உயரிய பணிக்காகக் கல்வியறிவும் முற்போக்குக் கொள்கைகளும் உடைய தேசியவாதிகள் சிலர் நாடக ஆசிரியர்களாகவும், நடிகர்களாகவும் மாறினர். இவர்களுடைய தொடர்பு காரணமாகத் தொழில்முறை நடிக-நடிகையரிலும் பலர் தேசியவாதிகளாயினர். இந்த மாறுதல்களால் நாடகத்தமிழ் வளமும் வளர்ச்சியும் அடைந்தது. தேச விடுதலை ஆர்வத்தையும் சமூக சீர்திருத்தக் கொள்கைகளையும் பிரதிபலிக்கும் நவீன நாடக நூல்கள் தோன்றின.

இந்தக் காலத்தில்தான் "கூத்தாடிகள்" என்று பெயர் பெற்று மேன்மக்களால் இழிவாகக் கருதப்பட்டுவந்த நடிக - நடிகையர் முதன்முதலாக அரசியல் பெருந்தலைவர்களால் மதிக்கப்படும் மாண்பைப் பெற்றனர். இது வரலாறு கூறும் வாய்மை.

## முதல் தேசிய நாடகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலே, காங்கிரஸ் மகாசபையின் முதல் பத்தாண்டு காலப் பணியினையும், அதனால் விளைந்த பயன்களையும் விளக்கி, தமிழ்ப் பண்டிதர் கா.கோபாலச்சார் என்பவர் "ஆர்ய ஸபா" என்னும் பெயரால் தமிழில் நாடக நூலொன்று இயற்றினார். பெயர் வடமொழியில் அமைந்திருப்பினும், கவர்ச்சிகரமான எதுகை மோனை நடையிலே இயற்றப்பட்டுள்ளது. 102 பக்கங்களே கொண்ட இந் நாடக நூல், ஐந்து அங்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. இதில் உள்ள பாடல்களை ஆசிரியரே இயற்றியுள்ளார். மொத்தத்தில் நாடகம் தமிழில் எழுதப்பட்டிருப்பினும், பிராமணப் பாத்திரங்கள் இடையிடையே சமஸ்கிருத சுலோகங்களையும் முழக்குகின்றன. இஸ்லாமியப் பாத்திரங்கள், நிறைய பாரசீகச் சொற்களைக் கலந்து மணிப்பிரவாள நடையில் பேசுகின்றன.

ஐரோப்பியர்களே தோன்றும் ஒரு காட்சி முழுவதற்கும் உரையாடல் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டுள்ளது. இது மேடையில் நடிக்கப்பட்டதா என்பது தெரியவில்லை. ஆனால், நடிப்பதற்காகவே இயற்றப்பட்டதாகும். தேசிய காங்கிரஸ் மகாசபை பிறந்த பின்பு தமிழில் எழுதப்பட்ட முதல் தேசிய நாடகம் இதுதான்.

## பாவலரின் பணி

காந்தி சகாப்தம் தோன்றுவதற்கு முன்பு நாடக அரங்கிலே ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரச்சாரத்தை நடத்தியவர்கள் தெருக்கூத்துக் கலைஞர்களேயாவர். நவீன சாதனங்களைக் கொண்டு நகரங்களிலே நாடகம் நடத்திய கலைஞர்கள், சிறிது காலங் கடந்துதான் விடுதலை இயக்கத்தோடு தொடர்பு கொண்டனர். காந்தி சகாப்தத்தில்தானே ஏகாதிபத்திய எதிர்ப்புக்கிளர்ச்சி பொது ஜன இயக்கமாக மாறியது. தேசிய இயக்கத்தோடு தொடர்பு கொண்டால்தான் ரசிகப்பெருமக்களின் ஆதரவை நடிக-நடிகையர் பெறமுடியும் என்ற நிலை உருவானது. அதனால் நகரங்களிலே நாடகம் நடத்திய கலைஞர்களும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

சதாவதானம் தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாலவர் தேசிய நாடகங்களை எழுதுவதிலேயும் நடத்துவதிலேயும் பிற நாடகாசிரியர்களுக்கு முன்னோடியாக விளங்கினார்.

சென்னையிலே உயர்நிலைப்பள்ளி ஒன்றில் தமிழாசிரியராகப் பணிபுரிந்த பாலவர், தேசபக்தி காரணமாக ஆசிரியத் தொழிலை விட்டார். காங்கிரசிலே சேர்ந்து அரசியலில் ஈடுபட்டார். சில ஆண்டுகள் சென்னை மாவட்ட காங்கிரஸ் அங்கத்தினராகவும் இருந்தார். அந்நாளில் அகில இந்தியாவிலும் செல்வாக்குப் பெற்றிருந்த மயிலை எஸ். சீனிவாச ஐயங்கார் அவர்களுடன் பாவலர் நெருங்கிய தோழமை கொண்டிருந்தார். சிறந்த மேடைப் பேச்சாளராகவும் விளங்கினார்.

நாடக மேடையின் வாயிலாகவும் தேசியப் பிரச்சாரம் செய்யும் குறிக்கோளுடன், நாடகத்துறையில் ஈடுபட்டார் பாவலர். "பால மனோகர சபா" என்ற பெயரில் தனியாக ஒரு நாடகக்குழுவினை நடத்தினார். "கதரின் வெற்றி' உட்பட தேசிய நாடகங்கள் பலவற்றை எழுதினார். தமது சிறுவர் நாடகக் குழுவைக் கொண்டு தமிழகம் முழுவதிலும் அவற்றை நடத்தி விடுதலைக் கிளர்ச்சியை வலுப்படுத்தினார்.

1930ஆம் ஆண்டில் வடக்கே நாகபுரியில் நடைபெற்ற கொடிப் போராட்டத்தைக் கருப்பொருளாக்கி, அந்தப்போராட்டத்தில் கதாநாயகன் கலந்துகொள்வதாகக் கற்பித்து, "தேசியக்கொடி" என்னும் பெயரில் ஒரு நாடகத்தை எழுதினார். அதனை நாடு முழுவதும் நடத்திக்காட்டினார்.

1924க்குப் பின் "மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி"யில் ஆசிரியப் பொறுப்பை ஏற்றார். "கதரின் வெற்றி", "பதிபக்தி', "பம்பாய் மெயில்", "கவர்னர்ஸ் கப்" ஆகிய தேசிய மணங்கமழும் சமூக சீர்திருத்த நாடகங்களை எழுதி, அவற்றை நடத்தி வைத்தார்.

பாவலரின் தேசிய நாடகங்களால் ஏகாதிபத்திய எதிர்ப்பு வலுப்பெற்று வருவதைக் கண்ட ஆட்சி, சில ஊர்களில் அந்த நாடகங்களை நடத்தவொட்டாமல் தடை விதித்தது. அந்தத் தடைகளை மிகுந்த தந்திரத்துடன் சமாளித்தும், சில சந்தர்ப்பங்களில் தடையை மீறியும் நாடகங்களை நடத்தியிருக்கிறார்.

தமிழ் நாடகக் கலைஞர்களில், தேசியப் பாசறையோடு இரண்டறக் கலந்திருந்தவர்களிலே ஆரியகான கே.எஸ். அனந்தநாராயண ஐயர் ஒருவராவர். இவர், புகழ்மிக்க நடிகராக விளங்கினார். அந்நாளில் ஆண்கள் பெண் வேடந்தாங்கி நடிப்பதுண்டு. ஐயரும் நாடக மேடையில் பெண் வேடத்திலேயே தோன்றி நடித்தார். இவர், 1937 முதல் 1941 வரையுள்ள ஐந்தாண்டு காலத்தில் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினராகவும், முதல் சர்க்கிள் காங்கிரஸ் கமிட்டி, முதல் வட்ட (குண்டையார்பேட்டை)க் காங்கிரஸ் கமிட்டி ஆகியவற்றின் தலைவராகவும் இருந்து விடுதலைப் போருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தார். தாம் நடித்த புராண நாடகங்களிலேயும் தேசியக் கருத்துக்களை வெளியிட்டு ரசிகப்பெருமக்களின் பாராட்டுதலைப் பெற்று வந்தார்.

## விசுவநாத தாஸ்

எஸ்.எஸ்.விசுவநாத தாஸ் என்ற நடிகர் தேசபக்தி மிக்க தேசியவாதியாகத் திகழ்ந்ததோடு, தமது நாடகத்துக்கு அரசாங்கம் விதித்த தடையை மீறிச் சிறைத்தண்டனை பெற்ற தியாகியாகவும் விளங்கினார். நாடக மேடையைத் தேசியப் பாடல் மயமாக்கும் பணியிலே பிற நடிகர்களுக்கு இவரே சிறந்த வழிகாட்டியாக விளங்கினார். இவருக்கிருந்த தேச பக்தியைக் கண்டு அரசாங்கம் அஞ்சியதெனலாம்.

1919ல் பஞ்சாப் படுகொலை நடந்தபோது, அதனைக் கண்டித்து இயற்றப்பட்ட "பஞ்சாப் படுகொலை; பாரிற் கொடியது, பரிபவமிக்கது" என்ற பாடலைப்பாடி பாடி, நாட்டு மக்களுக்குத் தேசாவேசத்தை ஊட்டினார்.

வெள்ளை நிறத்து அதிகாரிகளைக் கொக்குகளாகக் கற்பனை செய்து நாடக மேடையில் பாடுவதற்கென்று பூமிபாலக தாஸ் என்பவர் இயற்றிய "கொக்கு பறக்குதடி பாப்பா" என்ற பாடல் பிரசித்தி பெற்றதாகும். நாடக மேடையில் தோன்றியபோதெல்லாம் நடிகர் தாஸை "கொக்கு' பாட்டைப்பாடும்படி ரசிகப்பெருமக்கள் வற்புறுத்தினர். அரசாங்க அதிகாரிகளோ, அதைப் பாடக்கூடாதென்று பயமுறுத்தினர். தேசபக்தி மிக்க விசுவநாத தாஸ், அதிகாரிகளின் பயமுறுத்தலைப் புறக்கணித்து மக்களின் விருப்பத்தையே நிறைவேற்றுவார். அவர் பாடிய கொக்குப் பாட்டின் சில வரிகள் வருமாறு :

*'கொக்கு பறக்குதடி பாப்பா !-அதைக்*
*கோபமின்றிக் கூப்பிடடி பாப்பா !*



*மக்களை ஏமாற்றும்*
*கொக்கு-அதன்*
*மமதை அழியவேண்டும்*
*பாப்பா !*
*தேம்ஸ்நதிக் கரையில்*
*கொக்கு-அங்கு*
*தின்ன வழியில்லாத*
*கொக்கு-மது*
*மாமிச வெறிபிடித்த*
*கொக்கு-நம்*
*மக்களை ஏமாற்ற வந்த*
*கொக்கு'*

இந்தப் பாடலையேயன்றி, வேறு பல தேசியப் பாடல்களையும் அவர் பாடுவதுண்டு. "வள்ளித்திருமண" நாடகத்திலே அவர் முருகன் வேடத்தில் தோன்றும்போதும் "கொக்கு பாட்டுப் பாடு" என்று ரசிகப்பெருமக்கள் குரல் கொடுப்பார்கள். பாடத் தொடங்கியதுமே ஆனந்தத்தால் கைதட்டி ஆரவாரம் செய்வார்கள். ஒருமுறை பாடி முடித்தால், "ஒன்ஸ் மோர்" என்று கூவி, திரும்பவும் பாடுமாறு வற்புறுத்துவார்கள். அவரும் பாடுவார்.

நாடக நடிகர்களிலேயே தலைசிறந்த தேசியவாதியாகத் திகழ்ந்த விசுவநாத தாஸ், திருமங்கலம் தாலுகா காங்கிரஸ் கமிட்டியில் அங்கம் வகித்தார். மதுரை ஜில்லா போர்டிலும் காங்கிரஸ் சார்பில் அங்கம் வகித்தார். இவர் வேடந் தரிப்பதற்கான உடைகளையும் கதரிலேயே தயாரித்துப் பயன்படுத்தினார். தேசியப் பாசறையிலே மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த நிலையில், 31.12.1940ல் எஸ்.எஸ்.விசுவநாத தாஸ்

திடீரென்று மரணமடைந்தார். சென்னை ராயல் தியேட்டரில் (இப்போது அந்தக் கொட்டகை இல்லை) வள்ளித்திருமணம் நாடகத்திலே கழுகாசல சீனில் தோன்றிப் பாடிக் கொண்டிருந்த போது திடீரென்று மாரடைத்து மேடையிலேயே மரணமடைந்தார். அப்போது அவர் தாங்கியிருந்த முருகன் வேடத்துடனேயே மயில் மீது அமர்ந்த கோலத்திலேயே அவரது பிரேத ஊர்வலம் நடத்தப்பட்டது.

## தேச பக்தி

தேசபக்தர் சாமிநாத சர்மா, ''பாணபுரத்து வீரன்'' என்னும் சரித்திரந் தழுவிய நாடகம் ஒன்றைத் தமிழில் தந்துள்ளார். அதனை, 'தேசபக்தி' என்ற மாற்றுப் பெயரால் நாடக உலகில் புகழுடன் விளங்கிய டி.கே.எஸ்.சகோதரர் நாடகக் குழுவினர் நடித்துள்ளனர். பல ஊர்களில் அரசினரின் தடைக்கும் உள்ளானது இந்நாடகம்.

## இராட்டைப் பாட்டு

நாடகமேடையில் நடத்தப்பட்ட தேசிய நாடகங்கள் அதிகமில்லை; சொற்பமே! ஆயினும் புராண நாடகங்களிலே-கதைக்குப் பொருத்தமின்றியும்-தேசியப் பாடல்களைப் பாடி, அந்நாளைய நடிக-நடிகையர் தேச பக்தியை வளர்த்தனர். இதனால் ஆன்ம ஒளிபெருக்கும் தெய்வ பக்திப்பாடல்களையே வழிவழி கேட்டு வந்த தமிழ்மக்கள், அடிமைத் தளையறுக்கும் தேசபக்திப் பாடல்களையும் தமிழில் கேட்கும் பேறுபெற்றனர். இது காந்தி சகாப்தத்திலே நாடகத்தமிழ் அடைந்த மறுமலர்ச்சியாகும்.

*'கதர் கப்பல் கொடி*
*தோணுதே*
*கரம் சந்த்ர மோகன தாஸ்*
*காந்தி இந்தியா சுதேச...*
*(கதர்)'*

– என்றும்

*'ஆடு ராட்டே சுழன் றாடு*
*ராட்டே-சுய*
*ஆட்சியைக் கண்டோமென்*
*றாடு ராட்டே'*

– என்றும்,

*'நம்பிக்கை கொண்டெல்லோரும் கை*
*ராட்டை சுற்றுவீர்!-கை*
*ராட்டை சுற்றுவீர்-சுய*
*நாட்டைப் பற்றுவீர்'*..

- என்றும் தொடங்கும் கைராட்டைப் பாட்டுகளைப் பாடாமல் அந்நாளில் எந்த நாடகமும் நடந்ததில்லை. நடிக-நடிகையரேயன்றி நாடகத்திலே ஒரு காட்சிக்கும் இன்னொரு காட்சிக்குமிடையே உள்ள அவகாசத்தில் ஆர்மோனியக்காரர்களும் தேசியப் பாடல்கள் பாடுவார்கள்.

தேசியக் கவி ராஜா சண்முக தாஸ், லட்சுமண தாஸ், மதுர பாஸ்கர தாஸ், சுந்தர வாத்தியார், கவி ஆறுமுகனார் முதலிய பாவலர்களின் பாடல்களே பெரும்பாலான நடிக - நடிகையரால் பாடப்பட்டன.

வள்ளித் திருமணம் நாடகத்திலே, தினைப்புனத்தில் பரண் மீது நின்று வள்ளி ஆயலோட்டும்போது, தினையரிசிகளைக் கொத்தித் தின்னவரும் குருவிகளை ஆங்கிலேயர்களாகக் கற்பித்துக் கொண்டு, ''வெள்ளையனே வெளியேறு'' என்னும் பொருள்பட வள்ளி பாடுவாள். ஆம்; 1942 ஆகஸ்டுப் புரட்சிக்கு முன்பே!

*'வெள்ளை வெள்ளை கொக்குகளா வெகுநாளாய் இங்கிருந்து*
*கொள்ளை யடித்தீர்களே ஆலோலங்கடிச் சோ-இனி*
*கோபம்வரும் போய்விடுங்கோ ஆலோலங்கடிச்சோ!*
*காந்தி மகத்துவத்தால் கதிர்கள் விளைந்து இங்கே*
*சாய்ந்து கிடக்குதென்றா ஆலோலங்கடிச்சோ-இங்கு*
*தட்டிப் பறிக்க வந்தீர் ஆலோலங்கடிச்சோ!*
*இந்தியாவைக் கொள்ளையிட எங்கிருந்தோ இங்குவந்து*
*குந்தித் தின்னும் குருவிகளா ஆலோலங்கடிச்சோ-உங்கள்*
*சொந்த நாட்டைத் தேடிப்போங்க ஆலோலங்கடிச்சோ!'*

எந்த நாடகமாயிருந்ததாலும் சரி; அந்த நாடகத்திலே எந்தக் காட்சியாக இருந்தாலும் சரி; மக்கள் ஒரு தேசியப் பாட்டைப் பாடும்படிக் கேட்டுவிட்டால், அதைப் பாடி ரசிகர்களைத் திருப்தி செய்விக்காமல் மேலே நாடகத்தை நடத்திச் செல்ல முடியாது. ஆம்; தேசாவேசம் உச்சநிலையில் இருந்த காலம் அது! தேசபக்தியானது தமிழ்ப்பற்றோடு பிணைந்து வளர்ந்த காலமுமாகும்!

## சிவாவும், வ.வே.சு.வும்

தியாகி சுப்பிரமணிய சிவம், மொகலாய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி மாண்ட சிவாஜி - செஞ்சி தேசிங்கு ஆகிய மாவீரர்களின் வரலாறுகளை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புக்கும் பயன்படும் வகையில் நாடகங்களாக எழுதினார். அவற்றை, சிவமும் அவருடைய ''ஸ்ரீ பாரத விலாச சபை''யினரும் தமிழகமெங்கணும் சென்று நடித்துக் காட்டினர். நாடகங்களில் வசூலான பணத்தைத் தேச விடுதலை இயக்கத்திற்காகப் பயன்படுத்தினர்.

சிவா குழுவினரின் "தேசிங்கு" நாடகம் சிதம்பரத்திலே அரசினரால் தடை செய்யப்பட்டது. அரசின் அடக்குமுறையை எதிர்த்து நாடகத்தை நடத்திய தேசபக்தர்கள் சார்பாக அப்போதைய சென்னை சட்டமன்றத்திலே கண்டனக்குரல் கொடுத்தார் நாவலர் சத்தியமூர்த்தி. இவரும் நாடகத்துறையில் அக்காலத்தில் "சுகுண விலாஸ சபையில்" சேர்ந்து விடுதலைப்போராட்ட மையக்கருத்துள்ள நாடகங்களில் நடித்துப் புகழ்பெற்றதுண்டு. தேச விடுதலைப் போருக்கு வெற்றி தேடும் பொருட்டாக நாடகப் பணியில் ஈடுபட்டவர்களில் வ.வே.சு.ஐயரும் ஒருவராவார்.

(பூங்கொடி பதிப்பகம் வெளியிட்ட
"விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு"
புத்தகத்திலிருந்து)

# சிரிக்கத் தெரிந்தவர் சிரிக்க வைத்தவர்!



இலக்கியங்களில் சொல்லப்படும் ஒன்பது வகைச் சுவைகளில் நகைச்சுவை சிறப்பிடம் பெறுகிறது. மனித வாழ்க்கையில் நகைச்சுவைக்குத் தனி மதிப்பு இருந்து வருகிறது. பொதுக்கூட்டங்களில் நகைச்சுவை உணர்வுடன் உரையாற்றுகின்ற பேச்சாளர்கள், பொதுமக்களின் பாராட்டுகளை எளிதில் பெறுகிறார்கள்.

நாடகத்திலும் சரி, திரைப்படத்திலும் சரி; நகைச்சுவைக் காட்சிகளை மக்கள் மிகவும் ரசிக்கிறார்கள். நகைச்சுவைக் கலைஞர்கள் மிகுந்த பாராட்டை எளிதில் பெற்றுவிடுகிறார்கள். தமிழகத் திரைப்பட நகைச்சுவை நடிகரான கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் மேல்நாட்டு நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின் ஆகிய இருவருக்கும் சிலை எடுத்துப் பெருமை சேர்த்துக்கொள்கிறார்கள்,ரசிகர் பெருமக்கள்.

நமது நாட்டில் பல அரசியல் தலைவர்களிடம் நகைச்சுவை உணர்வு பெருகியிருக்கிறது.

வாழ்நாள் முழுவதும் அறப்போரிலும் அரசியல் நிகழ்ச்சிகளிலும் ஆவேசச் சொற்பொழிவுகளிலும் ஆன்மீக போதனைகளிலும் பிரார்த்தனைக் கூட்டங்களிலும் கலந்துகொண்ட அண்ணல், நகைச்சுவை உணர்வையும் சுவீகரித்துக்கொண்டிருந்தார் என்ற செய்தி பிறரையும் வியப்பில் ஆழ்த்தும்.

ஒருமுறை காந்தி அவர்களிடம ஓர் அன்பர் கேட்டார்; "வாழ்க்கைக்கு நகைச்சுவை அவசியம் என்று நீங்கள் கருதுகிறீர்களா ?"

"அந்த இயல்பு என்னிடம் இல்லாவிட்டால் நான் என்றோ தற்கொலை செய்து கொண்டிருப்பேன்" - காந்தியடிகள் அளித்த பதில் இது.

நகைச்சுவையை, சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் காந்தியடிகள் பயன்படுத்தி இருக்கிறார் என்பதை அவரது நெடிய வரலாறு தெரிவிக்கிறது.

காந்தியடிகள், வட்டமேஜை மாநாட்டிலே கலந்துகொள்வதற்காகக் கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அதே கப்பலில் பயணம் செய்த ஒரு வெள்ளைக்காரன் தான் எழுதிய கவிதை ஒன்றினை அடிகளிடம் கொடுத்து, "இது நான் எழுதிய கவிதை; இதைப் படித்துப் பார்த்து எப்படி இருக்கிறது என்று சொல்லுங்கள்'' என்றார். அந்தக் கவிதையைப் படித்துப்பார்த்த காந்தி அடிகள், தம்மைப்பற்றிக் கேலி செய்து அந்தக் கவிதையில் எழுதப்பட்டிருப்பதைப் புரிந்து கொண்டார்.

சிறிது நேரம் கழித்து அந்த வெள்ளைக்காரன் அடிகளிடம் வந்தான்-

"கவிதை .எப்படி இருந்தது ?" அவன் கேட்டான்.

"கவிதையின் சாரத்தை மட்டும் நான் தனியாக எடுத்து வைத்திருக்கிறேன்" - அடிகள் பதில் சொன்னார்.

வெள்ளைக்காரனுக்குப் புரியவில்லை. திகைப்பு ஏற்பட்டது.

"இதுதான் நான் குறிப்பிட்ட சாரம்" என்று சொல்லியபடி ஒரு குண்டூசியை எடுத்துக் காண்பித்தார் காந்தியடிகள்.

அந்த வெள்ளைக்காரன் எழுதிய கவிதையினால் பயன் எதுவும் கிடையாது. ஆனால் அந்தக் காகிதத்தில் இணைக்கப்பட்டிருந்த குண்டூசிதான் பயன்படக்கூடியது என்பதை நகைச்சுவை ததும்பக் காந்தியடிகள் எடுத்துரைத்தார்.

ஒருமுறை திபெத்தின் முனிவரான 13வது தலாய்லாமா, டான் ஷ்யூன்ஷான் என்னும் சீன அறிஞரின் மூலம் காந்தியடிகளுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தார். கடிதத்தைப் பிரித்துப் பார்த்த அண்ணல் அது திபெத் மொழியில் எழுதப்பட்டிருப்பதை அறிந்தார். வந்திருப்பவருக்கு திபெத் தெரியாது என்பதை அண்ணல் அறிந்துகொண்டார்.

"தயவுசெய்து கடிதம் கிடைத்த விவாரத்துக்குப் பதில் எழுதுவீர்களா ?" சீன அறிஞர் காந்தி அடிகளைக் கேட்டார்.

"நிச்சயம் எழுதுகிறேன்! நான் குஜராத் மொழியில் பதில் எழுதிப் போடப்போகிறேன். அப்போதுதான் தலாய்லாமாவும் என்னைப்போல மொழி தெரியாமல் விழித்துத் திண்டாடுவார்! நான் இங்கே திண்டாடிச் சிரிப்பது போல அவரும் சிரிப்பார்'' நகைச்சுவை ததும்பும் விதத்திலும் பொருள் பொதிந்த முறையிலும் பதிலளித்தார் காந்தி அடிகள்.

ஒருமுறை சிறையில் இருந்தபோது காந்தி அடிகளுக்குக் கடுமையாகச் சளிப் பிடித்துக்கொண்டது. டாக்டர் அவரது உடல் நிலையைச் சோதித்துப் பார்த்தார்.

**- புலவர் தமிழ்ப்பித்தன்**

"ஊசி போட்டுக்கொண்டால் மூன்றே நாளில் சளி ஓடிப்போகும்! இல்லாவிடில் குணமாவதற்கு மூன்று வாரமாவது ஆகும்"-டாக்டர் சொன்னார்.

''ஊசி எதற்கு? வேண்டாம்! மெதுவாய்க் குணமாகாட்டும்! எனக்கு இப்போது அவசரமில்லை" - காந்தி அடிகள் சொன்னார்.

"உங்களுக்கு அவசரம் இல்லாதிருந்திக்கலாம். உங்கள் சளி, மற்றவர்களுக்கும் பரவக்கூடும் அல்லவா?" டாக்டர் கேட்டார்.

"அப்படி என்றால் அவர்களுக்குப் போடுங்கள் ஊசியை" - காந்தியடிகள் சட்டென்று சொன்னார்.

டாக்டரும் சிரித்துவிட்டார், நகைச்சுவை நிறைந்த இந்தப் பதிலைக் கேட்டு!

காந்தி அடிகள் இலண்டனுக்குப் போயிருந்தபோது பிரிட்டிஷ் மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் அவரை விருந்துக்கு அழைத்திருந்தார். மன்னரைச் சந்திக்கச் செல்லும் காந்தியடிகள் எத்தகைய ஆடை அணிந்து கொள்வார் என்று அந்த நாட்டுப் பத்திரிகைகள் பிரச்சினையைக் கிளப்பியிருந்தன.

காந்தி அடிகள் எந்த விதமான சிறப்பான உடைகளையும் அணியாமல், வழக்கம்போல் நான்கு முழ வேட்டி அணிந்து, மேலே ஒரு துண்டைப் போர்த்தியவாறு சென்றார்.

விருந்துக்கு மறுநாள்; ஒரு பத்திரிகை நிருபர் காந்தி அடிகளைச் சந்தித்து,

"நீங்கள் நேற்று மன்னரைச் சந்திக்க என்ன வகை உடை அணிந்து சென்றீர்கள்?" என்று வினவினார்.

"எப்பொழுதும் அணிந்துவரும் இதே உடையுடன் தான் சென்றேன்" - நமது வேட்டியையும் மேல் துண்டையும் காண்பித்தார் காந்தி அடிகள்.

"வெறும் வேட்டி மாத்திரம்தானா?" வியப்புடன் கேட்டார் நிருபர்.

"ஆம்! இது போதாதா? உங்கள் அரசர்தான் எனக்கும் சேர்த்து உடை அணிந்திருந்தாரே"-நகைச்சுவை ததும்ப பதில் தந்தார் காந்தி அடிகள்.

சிறையிலிருந்த போது ஒருமுறை கவியரசி சரோஜினி தேவியாருடன் பேட்மின்டன் விளையாட விரும்பினார் காந்தி அடிகள். ஆனால், தனக்கு நன்கு விளையாடத் தெரியும் என்று சொன்ன அண்ணல் மட்டையை இடது கையில் பிடித்திருந்தார்.

''மட்டையை எந்தக் கையில் பிடிப்பதென்பது கூடத் தெரியவில்லை! நீங்கள் எப்படி விளையாடுவீர்கள்?" சரோஜினி கேலி செய்தார்.



## சோதனையில் வெற்றி

நம்முடைய ஒவ்வொரு
பணியிலும் புதிய புதிய
சோதனைகள் ஏற்படலாம்.
பணிவு, எளிமை, அகிம்சை,
சகிப்புத்தன்மை ஆகிய
நல்ல சில பண்புகளினால்
அத்தகைய சோதனைகளில் எல்லாம்
நாம் பரிபூரணமான
வெற்றி அடைந்துவிடலாம்.

- காந்தியடிகள்

அண்ணல் சமாளித்துக்கொண்டு மட்டையை வலது கையில் பிடித்துக்கொண்டார். சில விநாடிகள் கழித்துப் பார்த்தபோது சரோஜினி மட்டையைத் தமது இடக்கரத்தில் வைத்திருப்பதைக் கண்டார்.

நீங்கள் மட்டும் மட்டையை இடக்கையில் ஏந்தியிருக்கிறீர்களே - சந்தேகத்துடன் கேட்டார் அண்ணல்.

"அதுவா? எனது வலக்கரம் சுளுக்கிக் கொண்டுவிட்டது. அதனால்தான் இடக்கரத்தில் மட்டையைப் பிடித்திருக்கிறேன்" - சரோஜினி பதில் தந்தார்.

சில விநாடிகள் கழிந்தன. அண்ணல் மறுபடியும் மட்டையை இடக்கரத்தில் ஏந்திக் கொண்டார். அதனைப் பார்த்த சரோஜினி, "இன்னமும் உங்கள் தவறைத் திருத்திக் கொள்ளாதிருக்கிறீர்களே" என்று கேட்டார்.

"முன்பு அது தவறாக இருந்திருக்கலாம். இப்போது அது தவறல்ல! ஒரு பெண்மணி இடக்கரத்தில் மட்டையைப் பிடித்துக்கொண்டு சிரமத்துடன் விளையாடும் போது, நான் மட்டும் வலக்கரத்தில் பிடித்து ஆடுவதை விரும்பவில்லை'' என்று அண்ணல் பதிலளித்தபோது சரோஜினி சிரித்துவிட்டார்.

ஏராளமான அரசியல் போராட்டங்களிலும், எண்ண முடியாத சத்தியாக்கிரகங்களிலும் ஈடுபட்டு-காவல் துறையினரின் கெடுபிடிக்கும் ஒற்றர்களின் கண்காணிப்புக்கும் அடிக்கடி ஆளாகிவந்த காந்தியடிகள் இப்படி நகைச்சுவைக்கனிகளையும் உதிர்த்திருக்கிறார். அண்ணல் சிரிக்கத் தெரிந்தவர் மட்டுமல்ல; பிறரைச் சிரிக்க வைக்கவும் தெரிந்தவர்! ★

## ஜீவா சொன்ன

# தேசபக்திக் கதை

### -முக்தா சீனிவாசன்

நான் மாணவப் பருவத்தில் தொடங்கி, 1963 வரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்தினராக இருந்தேன். அந்தக் காலத்தில் கும்பகோணம் சாராங்கபாணி சன்னதித்தெரு, கம்யூனிஸ்ட் இளைஞர்களின் சரணாலயமாக இருந்தது.

வெங்கடாச்சாரி என்கிற இளைஞர் (எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதியின் மூத்த சகோதரர்) எங்களுக்கெல்லாம் தலைவர்; அவர் மூலமாகக் கம்யூனிஸ்ட் தலைவர் ப.ஜீவானந்தம் அவர்களின் அறிமுகத்தை நான் பெற்றேன். எங்களது நட்பு ஜீவாவின் மரணகாலம் வரை தொடர்ந்து இருந்தது.

ஜீவா மிகப்பெரிய இலக்கியவாதி, ஆற்றல்மிக்க பேச்சாளர். பெரியாரிடம் ஆரம்பக்காலப் பயிற்சி பெற்றவர். தன்னலம் சிறிதும் இல்லாத அப்பழுக்கற்ற தேசபக்தர். சுதந்திரப்போராட்டத்தில் முழுமூச்சோடு கலந்துகொண்டவர்.

அவர் கூட்டங்களில் பேசும்போது சுதந்திர வீரர்களின் வரலாற்றை-உணர்ச்சிபூர்வமாக - குரலை மேலும் கீழும் ஏற்றி இறக்கி-கதைபோல் சொல்லுவார். கேட்கும் மக்களிடையே கண்ணீர் வெள்ளமாகப் பெருகும்.




பேரறிஞர் அண்ணா அவர்களே கூட சொல்லியிருக்கிறார்; தான் 'ஜீவாவின் பேச்சுக்களை கூட்டத்தின் கோடியில் நின்று கேட்டு மகிழ்ந்ததுண்டு' என்று.

அப்படிப்பட்ட உயர்ந்த தேசபக்தரான ஜீவா, சென்னை மாநகரத்தில் நடந்த ஒரு சுதந்திரப்போராட்ட நிகழ்ச்சியை, கேட்பவர் உள்ளம் எல்லாம் நெகிழ நெகிழச் சொல்லுவார். அதை நான் இக் கட்டுரையில் எடுத்தாள்கிறேன்:

1928ஆம் ஆண்டு -

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், தன்னிடம் அடிமைப்பட்டுள்ள இந்திய நாட்டில் எழுந்துள்ள சுதந்திர வேட்கையைத் திசை திருப்பிவிட, சைமன் கமிஷன் என்கிற ஒரு குழுவை அமைத்தது. அந்தக்கமிஷன், இந்தியாவிற்கு பிரிட்டிஷ் மேலாண்மைக்கு உட்பட்டு-எந்த அளவுக்குக் குடியேற்ற நாடு என்கிற அந்தஸ்தையும், அதை ஒட்டி சிறுசிறு சலுகைகளையும் அளிக்கலாம் என்று ஆராய்ச்சி செய்யவே இந்தியா வந்தது. அந்தக்குழுவில் இந்தியர் யாரும் இல்லை. அத்துணைபேரும் ஆங்கிலேயர்.

அந்தக்குழுவை பகிஷ்கரிக்க காந்திஜி உத்தரவிட்டார்.

நமது சென்னைக்கு அந்த சைமன் கமிஷன் வந்தது. மாணவர்கள் அணிஅணியாகத் திரண்டு அதை பகிஷ்கரித்தார்கள்.

''சைமன்-திரும்பிப்போ'' என்று குரல் எழுப்பியபடி உயர்நீதிமன்றத்தின் முன்னால் மாணவர்கள் கூடினார்கள். சற்று உணர்ச்சி வசப்பட்ட ஒரு மாணவன் நீதிபதியின் காரின் மீது பாஸ்பரசை வீசிவிட்டான். ''நீதிமன்றத்தை மூடிவிடுங்கள்'' என்கிற அவனது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதன் விளைவே அது. ஆத்திரம் கொண்ட நீதிபதி, ராணுவத்திற்குத் தகவல் தருகிறார். அவர்கள் தங்களது பீரங்கிப் படையோடு வருகிறார்கள். மாணவர்களைச் சுடுவதற்கு இராணுவம் தயாராகிறது.

இதைக்கேட்டார் பிராட்வே பகுதியில் பத்திரிகை நடத்திக்கொண்டிருந்த டங்குடூரு பிரகாசம் (இவர் பிற்காலத்தில் சென்னை மாநிலத்தின் முதலமைச்சரானார்). ''ஆந்திர கேசரி'' என்கிற பட்டப்பெயரும் பெற்றார். நேராக உயர்நீதிமன்றப் பகுதிக்குப் பதறிக்கொண்டு வருகிறார், டி. பிரகாசம்.

மாணவர்களை ஒரு பக்கமாக நிற்கும்படி உத்தரவிடுகிறார்.

ஆர்மீனியன் தெரு நுழைவு வாசல்.

டி. பிரகாசம் தன் கார் மீது ஏறி நிற்கிறார். சட்டைப் பொத்தானைக் கழற்றுகிறார். இரு கைகளாலும் சட்டையை விலக்கிக்கொண்டு மார்பைத் திறந்து காட்டுகிறார்.

"இதோ இங்கு நிற்கும் அனைத்து மாணவர்கள் என் இந்த இதயத்தில் வசிப்பவர்கள். இவர்களைச் சுடுவதற்குப் பதிலாக என்னைச் சுட்டுவிடுங்கள். என் திறந்த மார்பு உங்கள் துப்பாக்கிக்குறியின் எல்லைக்குள்ளேயே இருக்கிறது, சுடுங்கள். என் மார்பை நோக்கி உங்கள் குண்டுகள் வரட்டும்'' என்று ஆங்கிலத்தில் கர்ஜிக்கிறார், ஆந்திரகேசரி பிரகாசம் பந்துலு!

அதிகாரிகள் கையைப் பிசைகின்றனர். "நாம் மேற்கொண்டு எது செய்தாலும் சென்னையே இரத்தக்குளம் ஆகிவிடும்'' என்பதை உணர்கிறார்கள்.

இராணுவம் நகர்கிறது.

பீரங்கிகள் வெளியேறுகின்றன.

வெள்ளையன் தோற்கிறான்.

சைமன் கமிஷன் திருப்பிப்போகிறது!

மரணத்தைச் துச்சமென மதித்து மாணவர்களுக்குத் தலைமையேற்ற அந்த பிரகாசம்தான் எங்களுக்கு-உங்களுக்கு-இந்த நாட்டுக்கு - அண்ணன், அப்பன் - ஆசான்" என்று பேசுகிறார் தோழர் ஜீவா.

இந்தக் கதையை உணர்ச்சிப் பிழம்பாக உரத்த குரலில் அவர் சொல்லி முடிக்கும்போது கூட்டத்தில் ஒருவன் ''வந்தேமாதரம்'' என்று கத்தினான். நாங்களும் பதிலுக்கு ''வந்தேமாதரம்-அல்லாஹு அக்பர்" என்று பெரும் குரல் கொடுத்தோம்.





# வாழ்க்கையின் முகவரி

கவிஞர் ஈரோடு தமிழன்பன்



**வி**டுதலை
உள்ள பூமியில் மட்டுமே
விடியல்கள் உண்டு!

காற்றில்
மனித உயிர்ப்புக்
காரியம் நடக்கும்.

நீரில்
தாகத்தின் விடைகள் இருக்கும்.

நெருப்பில்
வெப்ப நர்த்தனம் நிகழும்.

வெட்கத்தில்
வான
விதானம் சுருங்காது!

விலங்குகள்
வகுத்த வீதிகளில்
சடைகள் தொலைந்து போகாது.

விடுதலை
மடிந்த மண்ணில்
எந்த விதையிலும்
இருட்டு முளைக்கும்!...
எந்த நதியிலும்
அலைகள் நொண்டும்!

மனிதன்
திறக்கும் கதவுகளை
இரத்தம் சுண்டிய வெளிச்சம்
மூடிவைக்கும்!

மார்புக் கூட்டுக்குள்
ஒளியும்
அவனைச்
சவப்பெட்டிக்குள் தூக்கி எறியும்
மரணம்.

ஆறடி
நிலத்தோடு அவனைத்
துரத்தும் அச்சம்.

வெட்டுப்பட்ட
வார்த்தைகளின்
உதட்டில் சிவப்பு
ஒழுகும்!

அறுந்துபோன
அறிவின் நரம்புகள்
வாழ்வின் மடியில் துடிக்கும்.

வசந்தச் சவங்கள்
போகும்
வழியில்-ஒளி
நமுத்த பொரிகளை
வாரி இறைக்கும் வானம்.

மூச்சுத்
திணறும் மொழி...
வெளியே நின்று
அலறும் அர்த்தம்.

சுதந்திரம்
இல்லாத நாட்டில்
மக்கள் இருப்பார்கள்
குழந்தை பெறமாட்டார்கள்
குட்டி போடுவார்கள்.

சுதந்திரம்
இல்லாத நாட்டில்
குடும்பங்கள் இருக்கும்!
பட்டிகளில் மட்டுமே
பார்க்க முடியும்!

வாழ்க்கைக்கு
முகவரிக்கு உரிமை
என்றிருந்தால்
வருகிற மடல்களில்
எல்லாம்
இன்பம் இருக்கும்.



# தமிழகத்தில் நேரு



தீரர் சத்தியமூர்த்தியின் அழைப்பின் பேரில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தார், நேரு. சென்னையில் தீரர் சத்தியமூர்த்தி வீட்டிலேயே தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், சில அரசியல் மாறுபாடுகளால் அவரைப் பிடிக்காத சிலர், அவர் வீட்டில் தங்கக்கூடாது என்று நேருவுக்குத் தந்தி கொடுத்தார்கள்; கடிதம் எழுதினார்கள். நேரு அதைப் பெரிதுபடுத்தவில்லை. தீரர் சத்தியமூர்த்தியின் விருந்தினராகவே தங்கினார்.

பொன்னேரி புகை வண்டி நிலைய வரவேற்பில் பத்தாயிரம் ரோஜாக்களால் தயாரிக்கப்பட்ட மிகப் பெரிய மாலையொன்று அவருக்கு அணிவிக்கப்பட்டது. "இவ்வளவு பெரிய மாலையா? இதைப்போல இதற்குமுன் நான் எங்கும் பார்த்ததில்லை" என்று சொல்லிச் சொல்லி வியப்படைந்தார் நேரு.

மறுநாள் காலை நேரம். தீரர் சத்தியமூர்த்தியும், காமராசரும் சுற்றுப்பயணத்தில் நேருவுடன் புறப்படத்தயாராக இருந்தார்கள். வீட்டு வாசலில் நிறுத்தப்பட்டிருந்த காருக்கு வந்தார் நேரு. அப்போது நேரு எழுதிய 'சுயசரிதை' நூலுடன் வாசலில் நின்ற இளைஞர் ஒருவர், அதிலொரு கையெழுத்துப் போட்டுத்தருமாறு வேண்டினார்.

"மத்தியானம் வாருங்கள், போட்டுத்தருகிறேன்" என்றார் நேரு.

அந்த இளைஞர் விடுவதாயில்லை.

"கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்; கையெழுத்திடுங்கள்" என்றார்.

"யாரானாலும் கெஞ்சுவது எனக்குப் பிடிக்காது" என்றார் நேரு.

"என்ன செய்வது, நம் நாடே பிச்சைக்கார நாடுதானே?" என்று பதிலுக்குச் சொன்னாரோ இல்லையோ, நேருவுக்கு, குபீரென்று கோபம் வந்துவிட்டது.

"இந்த நாடும் பிச்சைக்கார நாடல்ல. நானும் பிச்சைக்காரனல்ல. பிச்சை கேட்பவர்களையே நான் வெறுக்கிறேன்".

- என்று உரத்த குரலில் சொல்லிவிட்டுக் காரில் ஏறினார், நேரு.

தீரர் சத்தியமூர்த்தி அந்த இளைஞரைக் கோபத்தோடு பார்த்தார். ஆனால், நேருவின் கோபமோ அடுத்த நிமிஷம் ஆறிவிட்டது. அந்த இளைஞரின் கையிலிருந்த புத்தகத்தைத் தாமே வேகமாக வாங்கி அட்டையைப் புரட்டி, முதல் பக்கத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட்டு வேறுபக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டார்.

இதைக்கண்ட சத்தியமூர்த்தியும், காமராசரும் வியப்போடு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். அந்த இளைஞரோ? "பண்டித நேரு வாழ்க" என்று உற்சாகமாகக் குரல் எழுப்பினார்.

நேருவுடன் பகல் உணவு சாப்பிட, ராஜாஜியையும் அழைத்திருந்தார் சத்தியமூர்த்தி. நேருவும் அவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அது, ராஜாஜி அரசியலை விட்டு ஒதுங்கியிருந்த நேரம். பேச்சோடு பேச்சாக அதை ஒருவர் நினைவுபடுத்தினார்.

உடனே நேரு "அதை நான் நம்பமாட்டேன்; சிறுத்தைப் புலி தன் வரிகளை எப்படி மாற்றிக்கொள்ள முடியும்?" என்று வேடிக்கையாகக் கேட்டார். ராஜாஜி உட்பட அனைவருமே சிரித்துவிட்டனர்.

குபீரென்று கோபப்படுவதும், அடுத்த வினாடியே அதை மறந்து விடுவதும் நேருவுக்கே உரிய தனித்தன்மை. சில நேரங்களில் அவர் குழந்தையைப்போல் மாறிவிடுவதும் உண்டு.

**"இந்தியா சுதந்திரம் பெறுமுன்-1936-ல் (அக்டோபர் 5-20) தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் செய்தார், அந்நாள் இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்த ஜவகர்லால் நேரு. அப்போது நடந்த சில சுவைமிகு சம்பவங்கள் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன."**

ஒருநாள் சுற்றுப்பயணம் முடித்துவிட்டு வந்திருந்த நேரு. அன்றைய பத்திரிகைகளில் தமது நிகழ்ச்சிகள் பற்றிய புகைப்படங்கள் வெளிவந்திருப்பதை வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு பக்கத்தில் இருந்தவரிடம் "ஒரு கத்தரிக்கோல் வேண்டுமே?" என்றார்.

"கத்தரிக்கோல் எதற்காக?" என்று கேட்டார்கள்.

"பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருக்கிற என் மகள், இதையெல்லாம் பார்த்தால் தன் தந்தைக்குக் கிடைக்கும் வரவேற்பைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைவாள்; இந்தச் செய்தித்தாள்களில் உள்ள படங்களைக் கத்தரித்து அவளுக்கு அனுப்பப்போகிறேன்" என்றார், நேரு.

"அப்படியானால் இந்தப் படங்கள் எதற்கு? அவர்களிடம் கேட்டு அந்தப் புகைப்படங்களையே வாங்கித் தருகிறோம்" என்றார்கள், அங்கிருந்தவர்கள்.

"அப்படியானால் அந்தப் படங்களைக் கண்ணாடி போட்டே வைத்துக்கொள்வாள் அவள்" என்று பெருமகிழ்ச்சியோடு தெரிவித்தார் நேரு. அவருடைய இந்த மகிழ்ச்சி அங்கிருந்த அனைவரையும் அதிசயிக்கச் செய்வதாக இருந்தது.

**கோ**வை மாவட்டம் கோபியில் நேருவுக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்குப் பேசுவதாக முன்னேற்பாடு இல்லை. ஆனால் அங்கிருந்த அமைதியான மக்களைக் கண்ட நேரு சுமார் அரைமணி நேரம் உரையாற்றினார்.

"இதுபோன்ற அமைதியான மக்களிடையே பேசுவது எனக்கு ஆனந்தமாக இருக்கிறது" என்றும் அவர் பெருமையோடு சொன்னார்.

**பி**றகு, ஈரோட்டில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேச ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கே கூடியிருந்த மக்கள் செய்த ஆர்ப்பாட்டம் நேருவுக்குப் பிடிக்கவில்லை. "அமைதியாக இருந்தாலன்றி, நான் இங்கே பேசப் போவதில்லை" என்று பணிவாகவும் கடுமையாகவும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். மக்கள் அமைதி யடைவதாக இல்லை.

அவ்வளவுதான், "இன்னொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார் நேரு.

**பொ**ள்ளாச்சி பொதுக்கூட்டம் இரவு 10 மணிக்கு; நேரு முதலானோர் அங்கு வரவே சுமார் பன்னிரெண்டு மணியாகிவிட்டது.

கூட்டம் முடிந்ததும் "உடுமலைக்குப் போகலாம்" என்றார் நேரு.

"நீங்கள் சாப்பிட வருவீர்கள் என்று சேட்ஜி காத்திருப்பாரே?" என்றார் ஒருவர்.

## ஆகஸ்ட்டுத் தீர்மானம்

**"வெள்ளையனே வெளியேறு" தீர்மானம் 1942 ஆகஸ்ட் 8ஆம் நாளன்று பம்பாயில் கூடிய காங்கிரஸ் பெருங்குழுவில் கொண்டுவரப்பட்டு நிறைவேறியது.**

**"ஆகஸ்ட் 8 தீர்மானம்" என்று இந்திய வரலாற்றில் தனிப்படக் குறிப்பிடப்படும் அத்தீர்மானத்தை முன்மொழிந்தவர் ஜவகர்லால் நேரு; அதை வழிமொழிந்து பேசியவர் சர்தார் வல்லபாய் படேல்.**

"சேட்ஜியும் அவர் விருந்தும் காத்திருக்கலாம்; ஆனால் என்னுடைய மக்களை நான் காக்க வைக்க முடியாது" என்று மிகுந்த கண்டிப்போடு சொல்லிவிட்டார், நேரு.

**உ**டுமலைப்பேட்டை பொதுக்கூட்டத்தை முடித்துக் கொண்டு தங்குமிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள் அனைவரும். பொள்ளாச்சியில் சாப்பாடு என்று சொல்லப்பட்டிருந்ததால், அங்கே உணவு தயாரித்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

"இப்படியா இருப்பீர்கள்?" என்று அங்கிருந்தவர்களிடம் சப்தம் போடத் தொடங்கினார் தீரர் சத்தியமூர்த்தி.

இதைக் கவனித்த நேரு "சத்தியமூர்த்தி, இரவில் சாப்பிடாமல் இருப்பது உடம்புக்கு மிகவும் நல்லது தெரியுமா? அதற்காக அவர்களிடம் கோபப்படாதேயும்" என்று சிரித்தபடி சொல்லி, அவரை அடக்கினார்.

**நே**ருவைத் தொட்டுப் பார்க்கும் ஆவலில் கோவை மாவட்ட மக்கள் எடுத்துக்கொண்ட உரிமை, "அவருடைய சிவந்த கரங்களில் நகக்கீறல்களாகக் கோடு கோடாகத் தெரிந்தது. இதைக் கவனித்த தி.சு. அவினாசிலிங்கம் "எங்கள் மாவட்ட மக்கள் இப்படி அதிகப்படியாக நடந்து கொண்டதற்காக, தாங்கள் மன்னிக்க வேண்டும்" என்றார் பணிவோடு.

"மக்களுக்கு என்னிடம் உள்ள அன்பின் அடையாளச் சின்னமல்லவா இது! இதில் வருத்தப்பட என்ன இருக்கிறது!" என்றார் நேரு, சிரிப்போடு!

**- இந்திரன்**

# விடுதலைப் போரில்
# வீராங்கனைகள்

புலியையே முறத்தினால் அடித்து விரட்டிய வீராங்கனைகள் பலரும் நம்முடைய தமிழ்நாட்டில் வாழ்ந்திருக்கிறார்கள்.

பகைவரோடு சண்டையிட்ட தன் மகன், முதுகிலே காயம்பட்டு மாண்டான் என்பதை உணர்ந்த அணங்கொருத்தி இப்படிப்பட்ட கோழைக்கா பால் கொடுத்து வளர்த்தோம் என்று வாளெடுத்துத் தன் மார்பகங்களையே அறுத்தெறிந்த வீரத்தின் விளைநிலமே தமிழகம்.

இந்த வீரமண்ணுக்கு, அந்தப் புறநானூற்றுக்காலப் பெண்மணிகளைப்போல ஏராளமான மங்கையர் திலகங்களைப் பெற்றுத் தரும் சக்தி இன்னமும் அற்றுப் போய் விடவில்லை.

இதை மெய்யாக்கும் வகையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் எண்ணற்ற வீராங்கனைகள் நம்நாட்டின் எங்கோ ஓர் மூலையில் பிறந்திருக்கிறார்கள்; புகழ் நிறுவி இறந்திருக்கிறார்கள்.

குறிப்பாக-சுதந்திரப் போர்க்களத்தில் சுடர்விட்ட அந்த வீரத் தாய்மார்களை நம்மால் மறக்கவே முடியாது.

இந்தியாவில் கும்பினி ஆதிக்கத்தை எதிர்த்து விடுதலை வேள்வி துவக்கப்பட்ட ஆரம்பக் காலகட்டம், இந்திய விடுதலையின் 50-வது ஆண்டு விழா கொண்டாடும் இந்நாளில், நாம் எண்ணிப்பார்த்து இறும்பூது எய்தத் தக்கது ஆகும். அதிலும் குறிப்பாக, எழுச்சி கொண்டு அந்நாளில் வெகுண்டெழுந்த தாய்க்குலத் தகைமையாளர்களை நாம் நினைவுகூர்தல் நன்று.

ராஜபுத்திர குலத்தில் பிறந்த பத்மினி, கோண்ட்வானா மாநிலத்தில் பிறந்த துர்க்காவதி, மகாராட்டிரத்தில் பிறந்த தாராபாய், ஜான்சி நாட்டு அரசி ராணி லட்சுமிபாய் போன்ற மங்கையர் திலகங்கள் இந்தியாவைச் சூழ்ந்த அடிமை இருள் விலக்க அரும்பாடு பட்டவர்களில் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

மதுரை மங்கம்மாளைப் போலத் தமிழகத்தில் போராட்டக் களம் கண்டு புகழ்பெற்ற பெண்மணிகள் பலராவர். இந்திய விடுதலைப் போரில் தம் வாழ்வையே தியாகம் செய்த அந்தத் தன்மானப் பெண்மணிகள் பற்றிய விவரக் குறிப்புகளின் தொகுப்பே இந்தக் கட்டுரை.

**கிட்டூர் சென்னம்மா**

"விடுதலைப் போரில் கர்நாடகம்" என்ற நூலில், இந்தியாவில் முதன்முதலாக விடுதலை எழுச்சிக்கு வித்திட்டவரே பெண்மணிதான் என்கிற குறிப்புக் காணப்படுகிறது.

1824-ல் நடந்த கிட்டூர் சென்னம்மாளின் போராட்டம் தேசிய முக்கியவத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஜான்சி ராணி லட்சுமிபாய்க்கு ஒரு தலைமுறைக்கு முன்பாகவே, கிட்டூர் ராணி சென்னம்மா, ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி இந்தியாவிலேயே முதல் புரட்சியாளராக விளங்கினார் என்று அந்நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதற்குக் கால் நூற்றாண்டுக்கு முன்பே - தமிழகத்தில் பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டியக் கட்டபொம்மனால் எழுச்சிக்கனல் மூட்டப்பட்டதும், அந்நூலில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, விடுதலைப் போரில் இறங்கிய முதல் பெண்மணி என்கிற பெருமை வேண்டுமானால் அவருக்குச் சேரக்கூடுமா என்றால் அப்படியும் தெரியவில்லை.

ஏனென்றால், 1783க்கு முன்பே கர்னல் ஸ்மித் என்பானோடு, சிவகங்கைச் சீமையை ஆண்டு வந்த



"சுதந்திரப் போராட்டக் காலத்தில் களம்கண்ட பெண்மணி திருமதி ருக்மணி லட்சுமிபதி அம்மையார் அஞ்சல்தலை அண்மையில் வெளியிடப்பட்டது; தில்லையாடி வள்ளியம்மாள் நினைவகத்தை மேம்படுத்த முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ரூ.5.91 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவர்களைப்போல, விடுதலைப் போரில் துணிந்து நின்ற வீராங்கனைகள் பற்றி விவரிக்கும் கட்டுரை இது."

முத்துவடுகரும், அவரது அன்பு மனைவி வீரமங்கை வேலு நாச்சியாரும் போரிட்டார்கள் என்கிறது நம் சுதந்திர காலத் தமிழக வரலாறு.

போரில் முத்துவடுகர் மாண்ட பின்னர், அதே வீர உணர்வுகளோடு சிவகங்கையை வேலுநாச்சியாரே ஆட்சி செய்து வந்திருக்கிறார். பிறகுதான் பெரிய மருது, சின்ன மருது இருவரும் ஆட்சிப் பொறுப்பேற்றனர்.

ஆகவே, விடுதலைப் போரில் முதலிடம் பெறுகின்ற பெண்மணி யார் என்பதை ஆய்வாளர்கள் கருத்துக்கே விட்டுவிடுவோம்.

**அன்னிபெசன்ட்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே நியூயார்க்கைச் சேர்ந்த பிளாவட்ஸ்கி அம்மையாரும், கர்னல் ஆல்காட் என்பாரும் 'தியோசாபிகல் சொசைட்டி' என்ற பிரம்மஞான சங்கத்தைத் தோற்றுவித்தார்கள். 1875ல் தொடங்கப்பட்ட அச் சங்கத்தில், அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவரான அன்னி பெசண்ட் அம்மையார் சேர்ந்தார். பின்னர் அவர் சென்னை வந்து சேரவே 1883ல் அச் சங்கத்தின் தலைமை நிறுவனம் அடையாறில் நிறுவப்பட்டது.

இந்தியாவில் தேசியக்கல்வி பரப்புவதில் இச்சங்கம் மிகவும் ஈடுபாடு கொண்டது.



தில்லையாடி வள்ளியம்மை

1916ல், பெசண்ட் அம்மையார் காங்கிரஸில் சேர்ந்தார். அவரால் தோற்றுவிக்கப்பட்ட "ஹோம் ரூல்" இயக்கத்தை மகாத்மா காந்தியடிகளும் கூட ஆதரித்துப் பிரச்சாரம் செய்ததுண்டு.

தமிழ்நாட்டைத் தாய்வீடு போல் கொண்ட அவ்வம்மையார், இந்தியக் குடிமகளாகவே தம்மைப் பதிவு செய்துகொண்டார். இதனாலேயே, 1917ல் கல்கத்தா காங்கிரஸ் தலைவராக்கப்பட்டார் அன்னிபெசன்ட் அம்மையார். கோவையிலும் உதகமண்டலத்திலும் இருந்த அவரது இல்லங்கள் இரண்டும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் அவ்வப்போது வந்து பல்வேறு அரசியல் பிரச்சினைகள் பற்றிக் கலந்தாலோசிக்கும் கேந்திரங்களாயின.

''காமன்வீல்'', ''நியூஇண்டியா'' ஆகிய பத்திரிகைகளையும் துவக்கிய அவ்வம்மையார், தமிழகத்தில் இந்திய விடுதலைக் கனல் மூட்டிய முதல் பெண்மணி என்றுகூடக் கூறப்படுவதுண்டு. அந்த அளவுக்குப் பாடுபட்ட அன்னிபெசண்ட் அம்மையார், பிரிட்டிஷ் மக்களின் பார்வையை இந்தியாவின்மேல் திருப்பி வெற்றி கண்டவரும் ஆவார்.

திருமதி மார்கரெட்கசின்ஸ் என்கிற வெள்ளைக்காரப் பெண்மணியும் தியோசாபிகல் சங்கத்தின் சார்பில் காங்கிரசில் சேர்ந்தார். 1932-ல், நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறைபுகுந்தவர் இவர். 1893-ல் இந்தியக் கம்பெனியின் வழக்கொன்றை நடத்துவதற்காகத் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார் காந்தியடிகள். அந்நாட்டில் இந்தியர் படும் அல்லல் அவர் கவனத்தில் பட்டது. அங்கே நிறவெறி பிடித்த வெள்ளையரால் ஒப்பந்தக் கூலிகளாகக் கடத்தப்பட்ட இந்தியர்களில் பெரும்பாலோர் சென்னையிலிருந்து கொண்டு செல்லப்பட்டோராவர்.

**தில்லையாடி வள்ளியம்மை**

இதனால், அங்கு நடத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டங்களில் பெரும்பாலும் தமிழர்களே பங்கேற்றார்கள். தில்லையாடி வள்ளியம்மை என்ற தமிழகத்து வீராங்கனை அப்படிப் போராடியவர்களில் குறிப்பிடத்தக்கவராவார். சத்தியாக்கிரகப் போராட்டம் காரணமாகத் தமது 17-ஆம் வயதில் சிறையில் அடைக்கப்பட்ட அவர் சிறைக்கொடுமை தாங்காமல் நோயுற்று,

விடுதலை செய்யப்பட்ட சில நாளிலேயே மாண்டு போனார். மணவிழாக்கூட காணாத அப்பெண்மணிக்கு மரணவிழா எடுக்கப்பட்டது.

இதற்கெல்லாம் பின்னாலேதான், அப்போராட்டத்தில் தாமே ஐக்கியமாகித் தீவிரம் காட்டினார் காந்தியடிகள். சத்தியாக்கிரகப் போராட்டம் வெற்றிபெற்றது.

தென்னாப்பிரிக்காவிலிருந்து 1914-ல் இந்தியாவுக்குத் திரும்பிய காந்தியார், அப்படியொரு விடுதலை வேள்வி இங்கேயும் துவக்கப்படவிருப்பதை உணர்ந்தார். கோபாலகிருஷ்ண கோகலே அவருக்கு அரசியல் வழிகாட்டினார்.

**காந்தியார் பெருமிதம்**

''பலன் ஏதும் கருதாமல் தென்னாப்பிரிக்காவில் தியாகம் செய்து வெற்றி கண்ட தில்லையாடி வள்ளியம்மை முதலானவர்கள்தான் எனக்கு முதன்முதலில் விடுதலை உணர்வூட்டிய பெருமைக்கு உரியவர்கள்'' என்று பின்னர் சென்னை வந்திருந்தபோது திருவல்லிக்கேணி கடற்கரை திலகர் கட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசும்போது பெருமிதத்தோடு குறிப்பிட்டார் காந்தியார். மாயவரம் சென்று அதற்கு அருகாமையில் உள்ள தில்லையாடியில் இருந்த வீரமாது வள்ளியம்மாள் வீட்டுக்குச் சென்று மரியாதைச் செலுத்திவரவும் அவர் தவறினாரில்லை.


அன்னி பெசண்ட்

1921-ல் இரண்டாவது முறையாகச் சென்னைக்கு வந்த காந்தியடிகள், தமிழகத்தின் பல ஊர்களுக்கும் சென்றார். அப்போது பெரியார் ஈ. வெ இராமசாமியின் இல்லத்திற்குப் போய்த் தங்கினார். பெரியாருக்கும் அவர் குடும்பத்தாருக்கும் கைராட்டையில் நூல்நூற்கும் விதத்தைக் கற்றுக்கொடுத்தார். தனது மனைவியார் நாகம்மையார், தமையனார் ஈ.வெ.கிருஷ்ணசாமி நாயக்கர் ஆகியோருடன் சேர்ந்து ஒத்துழையாமைப் போரில் ஈடுபட்ட தியாக குடும்பத்தின் தலைவரே பெரியார் ஈ.வெ.ரா.கள்ளுக்கடை மறியலின் போது தமக்குச் சொந்தமான தென்னை மரங்களையெல்லாம் குத்தகைக்கு விட மறுத்ததோடு, இலாபம் எண்ணாமல் அவைகளை வெட்டித் தள்ளவும் செய்தார்.

அம்மறியலில் அவர் மனைவியார் நாகம்மாளும், சகோதரி கண்ணம்மாளும் காட்டிய தீவிரம் காந்தியடிகளாரையே வியக்கவைப்பதாக இருந்தது.

கள்ளுக்கடை மறியலைக் கைவிடுமாறு ஒருமுறை காந்தியாரிடம் வலியுறுத்தப்பட்டபோது ''அதைக் கைவிடுவது என் கையில் இல்லை; தமிழ்நாட்டைச் சேர்ந்த ஈரோட்டில் இருக்கும் நாகம்மாள், கண்ணம்மாள் என்கிற இரண்டு பெண்மணிகள்தான் அந்த அமைப்பைத் தலைமை தாங்கி நடத்துகிறார்கள்; அவர்களிடம் போய்ப் பேசிப்பாருங்கள்'' என்றார் அவர்.

அந்த அளவுக்கு விடுதலைப் போர்க்காலத்தில் சிறப்புற்றிருந்தார்கள் அந்தப் பெண்மணிகள்!

**வைக்கம் பொதுவிடுதலை**

கேரள மாநிலத்தைச் சேர்ந்த வைக்கத்தில், அரிசன மக்கள் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டு வந்தார்கள். ஆலயங்களுக்குள்ளே புக மட்டுமல்ல; முக்கிய வீதிகளில் நடக்கவும் கூடாதெனத் தடுக்கப்பட்டிருந்தார்கள். அந்த நிலை நீங்க, ''வைக்கம் போராட்டம்'' பெரியார் ஈ.வெ.ரா.தலைமையில் நடத்தப்பட்டபோதும் திருமதி நாகம்மாளும், திருமதி கண்ணம்மாளும் அதில் ஈடுபட்டு சிறைத் தண்டனை பெற்றார்கள்.

அந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்திலே வெற்றி கண்ட பெரியார் ஈ.வே.ரா. ''வைக்கம் வீரர்'' என்றே சிறப்புறக் குறிப்பிடப்பட்டார்.

7-8-1724ல் திருவிதாங்கூர் மன்னர் இறந்துபோன பின், பட்டத்திற்கு வந்த மகாராணி சேதுபார்வதியம்மாள் அந்தச் சத்தியாக்கிரகத் தியாகிகளுக்கெல்லாம் பொது விடுதலையளித்தார்.

1930ஆம் ஆண்டு, இந்திய விடுதலைப் போரின் ஓர் அங்கமாகத் தமிழ்நாட்டின் உப்புச் சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது. அப்போது, அப்போராட்டத்தில் பங்கேற்று ஓராண்டு சிறைத்தண்டனை பெற்றவர்களில் செல்வி துர்காபாய், திருமதி ருக்மணி லட்சுமிபதி இருவரும் குறிப்பிடத்தக்கத் தியாகப் பெண்மணிகளாவர்.

மதுரையைச் சேர்ந்த எல். கிருஷ்ணசாமி பாரதியின் மனைவியார் திருமதி கே.லட்சுமி பாரதி என்பாரும் இந்திய விடுதலைப்போரில் களம் கண்டு சிறைசென்று சிறப்புற்றார். தமிழ்நாடு சட்டமன்றத்தில், 1937ஆம் ஆண்டிலும் 1946ஆம் ஆண்டிலும் உறுப்பினராக அங்கம் வகித்தவர் இவர்.

அந்நியத் துணிக்கடை மறியலில் ஈடுபட்டு திருமதி எஸ்.அம்புஜம்மாள், ஜானாம்பாள், கமலாபாய், லட்சுமி சங்கர ஐயர் போன்றோரும் சிறைத்தண்டனை ஏற்றார்கள். அதே போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைதண்டனை ஏற்ற திருமதி பி.லீலாவதி, லலிதா பிரபு இருவரும் தலைச்சேரி நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரிக்கப்பட்டனர். அவர்கள் கழுத்தில் கிடந்த

தாலிக்கயிறும் போலீசாரால் அகற்றப்பட்டது. இதனால், “தாலியறுத்தான் தலைச்சேரி’ என்றே அவ்வூர் அப்போது குறிப்பிடப்பட்டது.

அதை எதிர்த்து இந்திய மகளிர் சார்பில்-திருமதி டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, அம்மு சுவாமிநாதன், ஜி. விசாலாட்சி ஆகியோரால் கண்டனக் கூட்டங்கள் நடத்தப்பட்டன; எதிர்ப்பு அறிக்கைகள் விடப்பட்டன.

திருமதி சுப்பம்மாள், கன்னட மாநிலத்தில் உள்ள பெல்காம் சிறையில் அடைக்கப்பட்டார். சென்னை மாகாணக் கல்வி அமைச்சராக இருந்த மாதவமேனன் என்பாரின் மனைவி திருமதி குட்டியம்மாளு அம்மாள் கைக்குழந்தையோடு சிறை புகுந்தார்.

**விட்டுக்கும் ஆபத்து!**

ஒரு சந்தர்ப்பத்தில் தேசபக்தர்களுக்கு யாரும் வீடு வாடகைக்குத் தரக்கூடாது என்று அரசே அறிவித்ததால், திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் அம்மையாரும் அஞ்சலையம்மாளும் போலீஸ் கமிஷனர் அலுவலக வளைவுக்குள்ளேயே போய் அடுப்புப் பற்ற வைத்துச் சோறாக்கி எதிர்ப்பைக் காட்டினார்கள்.

திருமதி மரகதம் சந்திரசேகர், திருமதி ராதாபாய் சுப்பராமன், மீராபாய், திருமதி நீலாவதி சுப்பிரமணியம், டாக்டர் பிச்சமுத்து அம்மாள், கே.எஸ். பார்வதவர்த்தனி போன்ற இன்னும் பல பெண்மணிகளும் விடுதலைப் போர்க்களம் புகுந்து சிறை சென்றார்கள்.

சுதந்திரப் போர் மூண்ட காலத்தில், அந்த எழுச்சிக்கனல் மங்காமல் ஒளிவிட அரும்பாடுபட்ட தமிழகப் பெண்மணிகளை நினைவுகூரும் நாம், அனைத்திந்திய அளவில் இவ்வகையில் பங்கேற்றவர்களையும் மறந்துவிட முடியாது.

கடமை வீரரான காந்தியடிகளாரின் துணைவியார் கஸ்தூரிபா அம்மையாரும், மோதிலால் நேருவின் மனைவியார் சொரூபராணியும், கவியரசி சரோஜினியும் அவரது சகோதரிகளில் ஒருவரான மிருணாளினி சட்டோபாத்யாயாவும் அனுசூயாதேவியும் இன்னபிறரும் இந்திய விடுதலைக்காகச் செய்த தியாகங்களும் இணையற்றவைகளாகும் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

“நாட்டு விடுதலைக்காகப் போராட ஆண்கள் மட்டுந்தான் முன்னிற்பதா? ஆண்களோடு சரிநிகர் சமானமாக நிற்க நாங்களும் தயார்” என்ற வகையிலே தாய்க்குலமும் எழுந்தது இப்படி!

பிறந்த நாட்டைத் ‘தாய்நாடு’ என்றுதானே கூறுகிறோம்; அதை மெய்ப்பிப்பது போல் அலைபோல் ஆர்ப்பரித்தெழுந்த அவர்களை நாடு மறக்காது.

- ராஜு



## காந்தியார் பார்வையில் தமிழும் தமிழரும்

“தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போரில் தமிழ்மக்கள் புரிந்த துணையைப் போல் வேறெந்த இந்தியரும் புரியவில்லை. அவர்களுக்கு நன்றியறிதல் காட்ட நூல்களைப் பயில வேண்டுமென நினைத்தேன். அப்படியே அவர்கள் மொழியைப் பயில்வதில் ஊக்கமாக ஒரு திங்கள் கழித்தேன். அம்மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது மனங்கவரும் ஓர் இனிய மொழி.

தமிழ் மக்களுள் பண்டைய நாளிலும் - இந்நாளிலும்கூடப் பல அறிஞர் இருந்தனர்-இருக்கின்றனர் என்பது அம்மொழியின் அமைப்பாலும் பயிற்சியாலும் அறியக் கிடைக்கின்றது. இந்தியாவில் ஒரினம் ஏற்பட வேண்டுமாயின் சென்னை மாநிலத்திற்கு அப்புறமுள்ளவர்களும் தமிழுணர்தல் வேண்டும்.

தமிழ் மக்கள் எனது இரத்தக் கலப்புற்ற உடன் பிறந்தவர் போலத் தோன்றுகிறார்கள்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னரே நான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம், திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டும் என்று என் உள்ளத்தில் எழுந்த ஆசையேயாகும்.

தமிழ்மொழியில் புலமை பெறுவதற்குரிய ஒய்வு எனக்கு ஆண்டவன் அருளினானில்லை. அதுகுறித்து நான் அடையும் வருத்தத்திற்கு ஓர் அளவில்லை.

தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழ்பயில வேண்டுவது அவர்களது இன்றியமையாக் கடமை. தமிழர் தம் மொழியை ஆங்கிலம் முதலிய மொழிகளை விடக் கூட முதன்மையாகக் கருதுதல் வேண்டும்.”

- காந்தியடிகள்

Tel : Rocket
Fax : 04562-72063

Phone : 20814
72825
21614

Estd : 1923

# SRI KALISWARI FIRE WORKS

*Manufacturers of the Best* **'Cock'** *Brand Sparklers,*
*Crackers, Rockets & Toy Fireworks*

★★★★
★★
★

5-A, Chairman A. Shunmuga Nadar Road,
Post Box No.133, **Sivakasi-626 123.**

# செக்கிழுத்த செம்மலின் செந்தமிழ்த் தொண்டு!

'கப்பலோட்டிய தமிழன்' என்றும் 'செக்கிழுத்த செம்மல்' என்றும் இன்று பாராட்டப்பெறும் வ.உ.சிதம்பரனார் அவர்கள் வெறும் அரசியல்வாதியாக மட்டுமன்றித் தமிழ் இலக்கிய உலகிற்கும் அரும் பணியாற்றியுள்ளார்.

வ.உ.சிதம்பரனார் இளமைக் காலந்தொட்டே தமிழ் நூல்களைப் படிப்பதில் பேரார்வம் காட்டினார். அவர் அரசியலில் ஈடுபட்டுச் சிறையில் செக்கிழுத்துச் சொல்லொணாத் துயருற்ற காலத்திலும் அவர் எழுதுகிற கடிதங்களில் தமிழ் மணக்கும்; பல கவிதை மலர்கள் பூத்து மணம் பரப்பும். வெண்பாக்களையும், அகவற்பாக்களையும் விரைந்து பாடுவார்.

வ.உ.சிதம்பரனார் சென்னையில் இருந்தபோதும், கோவில்பட்டியில் வழக்கறிஞராகப் பணி புரிந்தபோதும் பல பழம் ஏட்டுச் சுவடிகளை ஒப்பு நோக்கிச் சில பழைய தமிழ்நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவ்வாறு தமிழ் நூல்களைப் பதிப்பித்ததோடு ஆங்கில நூல்கள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துத் தாய்த்தமிழகத்திற்குத் தந்துள்ளார்.

அரசியல் வரலாற்றில்-குறிப்பாக விடுதலை வரலாற்றில் வ.உ.சிதம்பரனார்க்கு உள்ள தனிப் பெருமை, தமிழ் இலக்கியத் துறையிலும், தமிழ் இல்க்கிய வளர்ச்சி வரலாற்றிலும் உண்டு என்பதிலே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. தமிழ் இலக்கிய உலகிற்கு அவர் தந்து சென்றுள்ள அவரது 'செல்வக் குழந்தைகள்'-ஆம் இலக்கியச் செல்வங்கள் என்றும் நின்று அவரது ஈடிலாப் புகழை இசைத்துக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அத்தகைய அவரது இலக்கியப் பணியை, இந்த நேரத்தில் நினைந்து பார்ப்பது சாலப் பொருத்தமுடையதாகும்.

**சிதம்பரனார் பெருமை**

ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியத்திற்கு அன்று முதல் இன்றுவரை உரை எழுதித் தந்துள்ளவர்கள் பலர். அவர்களுள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச்சிலையார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் இளம்பூரணர் என்பார் காலத்தால் பேராசிரியருக்கு முற்பட்டவர். கி.பி.9 அல்லது 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார். எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்கட்கு இவர் எழுதிய உரையை 1928-ல் அச்சிட்டு உதவிய பெருமை வ.உ.சிதம்பரனார் அவர்கட்குண்டு.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறளும் ஒன்று; எனினும் திருக்குறள், தமிழில் எழுந்த உலகப் பெருநூலாக மட்டுமன்றி, உலகப் பொதுநூலாகவே போற்றப்படுகிறது. அத்தகைய திருக்குறளுக்கு அந்நாளில் உரையெழுதிய பதின்மருள் சிறந்த உரையாசிரியராகப் பலரால் கருதப்படுகிற பரிமேலழகரையும் விடக் காலத்தால் சற்று முற்பட்டவர் மணக்குடவர். இவரது உரையே பரிமேலழகர் உரைக்கும் முற்பட்ட உரையாகும். இந்த உரையை முதன் முதலில் அச்சிட்டு வெளியிட்ட பெருமை வ.உ.சிதம்பரனார் அவர்களையே சாரும். மேலும், 'திருக்குறள் படிக்காத தமிழன், தமிழனல்ல' என்று கருதிய சிதம்பரனார் 1935-ல் தம் அறத்துப் பால் ஆராய்ச்சியை வெளியிட்டார்.



"

**இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, நாற்பதாண்டு காலச் சிறைத்தண்டனை பெற்றதோடு, கோவைச் சிறையில் செக்கிழுத்து வதைபட்ட பெருமையாளர் வ.உ.சிதம்பரனார். அன்னைத் தமிழுக்கு அவர் ஆற்றிய அளவிடற்கரிய தொண்டுபற்றி விளக்கிடும் கட்டுரை இது.**

"



# சுதந்திரம்

மகிழ்ச்சியும் எழுச்சியும் பெற்றிட-
வாழ்த்தும் வணக்கமும் கூறிட-
உறுதியும் அஞ்சாமையும் பெற்றிட-
சுருக்கமாகக் கூறுவதானால்,
பெற்ற சுதந்திரத்திற்கு ஏற்றவர்களாக
நம்மை ஆக்கிக்கொள்ள-
சுதந்திரத்தின் முழுப்பயனை
நாட்டவர் அனைவரும் பெற்றிட-
அதற்கான அறிவாற்றலையும்,
பண்பாட்டையும் வளர்த்துக் கொள்ளவே
இந்த ஆகஸ்டுப் பதினைந்து.
வீரம்-வெற்றியைத் தந்தது;
தியாகம் - சுதந்திரத்தைத் தந்தது;
வீரமும் தியாகமும் போற்றத்தக்கவை;
அதிலும், உலக உத்தமர் காந்தியடிகள் வகுத்தளித்த
அறநெறி வழிநின்று இந்தியா பெற்ற சுதந்திரம்
உலக வரலாற்றுக்கே ஒரு புதுமையாகும்!

- அறிஞர் அண்ணா

திருக்குறள் பாயிரத்தில் காணப்படுகிற "கடவுள் வாழ்த்து", "வான் சிறப்பு" "நீத்தார் பெருமை" ஆகிய மூன்று அதிகாரங்களும் திருவள்ளுவர் இயற்றவில்லை என்பது சிதம்பரனார் கருத்து.

"இன்னிலை" என்பதும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். பொய்கையாரால் இயற்றப்பட்ட இந்நூலையும் முதன்முதலில் அச்சிட்டு வெளியிட்டவர் வ.உ.சிதம்பரனார் அவர்களேயாவர்.

**சிவஞான போதம்**

சிதம்பரனார் சைவ சித்தாந்தத்தில் அழுத்தமான ஈடுபாடு கொண்டவர். சித்தாந்த வரிகளின் மூல நூலாக-மூலமந்திரமாகக் கருதப்படுகிற இந்நூலுக்கும் சிதம்பரனார் ஒரு நயமான உரை எழுதியிருக்கிறார்.

இவ்வாறு பழைய நூல்களைப் பதிப்பித்த தோடன்றிப் பிறநாட்டு இலக்கியங்கள் சிலவற்றைத் தமிழில் பெயர்த்துத் தமிழ் உலகிற்கு வழங்கிய பெருமையும் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு உண்டு.

ஆங்கில நூலாசிரியரான ஜேம்ஸ் ஆலன், சிறந்த ஒழுக்க நூலாசிரியராகப் பாராட்டப்பெறுபவர். அவரது சீரிய சிந்தனைகள் தமிழ் மக்களிடையே பரவவேண்டும் என்று பெரிதும் விரும்பினார். அவ்விழைவின் விளைவே, "மனம்போல வாழ்வு", "அகமே புறம்", "வலிமைக்கு மார்க்கம்" ஆகிய நூல்கள்.

"மனம் போல வாழ்வு"-மனத்தின் தன்மையைத் தெளிவுபடுத்துகிறது; அந்த மனத்தை மாசற்றதாக - தூய்மையுடையதாக வைத்துக் கொள்ள வேண்டியதன் இன்றியாமையை வலியுறுத்துகிறது.

"அகமே புறம்" - என்பது இப்போதும் எப்போதும் இங்கும் எங்கும் நமது உயிர் வாழ்வுநிலை பேறடைவதற்கான வழிமுறைகளை வகுத்துக் கொடுத்துரைப்பது; அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதற்கு ஒரு விரிவான விளக்கமாகத் திகழ்வது.

"வலிமைக்கு மார்க்கம்"-என்பது உடலும் உள்ளமும் சோம்பி நலிந்து வாழ்வோர், வலியுடைவராக ஆதற்குரிய உடற்பயிற்சி, உளப்பயிற்சி ஆகிய இரண்டினையும் தெளிவான முறையில் சித்திரித்துக் காட்டுகிறது.

இவ்வாறு பழைய நூல்களைப் பதிப்பித்தும், பிற நாட்டு நல்லறிஞரின் சிந்தனைச் செல்வத்தைத் தமிழ்ப் பெருமக்கள் கற்றுத் தேர்ந்து தெளிய வழிசெய்தும், இலக்கியப் பணியாற்றிய வ.உ.சிதம்பரனார் அவர்கள் புது நூல்கள் பல இயற்றியும் உதவியிருக்கிறார்கள்.

அவையாவன:-

**மெய்யறிவு** : அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை அடைவதற்கான வழிவகைகளையும் உவமைகளோடு சுருக்கமாகவும், தெளிவாகவும்

கூறுவது. பல்வேறு நீதி நூல்களின் பிழிவென விளங்குவது இந்நூல்.

**மெய்யறம் :** திருக்குறளின் வழிநூல் எனத்தகும் இந்நூலில் மாணவ இயல், இல்வாழ்வியல், அரசியல், அந்தண இயல், மெய்யியல் என்னும் ஐந்தியல்கள் உள்ளன. சிதம்பரனார் கண்ணனூர்ச் சிறையில் இருந்தபோது எழுதப்பட்ட இந்நூலில், கைம்மை மணத்தை ஆதரிக்கிறார்.

**வள்ளியம்மை சரித்திரம் :** இது வ.உ.சிதம்பரனார் அவர்களின் முதல் துணைவியாரின் வரலாறு, இது, செய்யுள் வடிவானது. ஆடவர் தம் வாழ்க்கைத் துணைவியாரிடத்தும், உற்றாரிடத்தும், மற்றவர் களிடத்தும் பின்பற்ற வேண்டிய முறைகளை யெல்லாம் எழிலுற விளக்கும் அறிவு நூலாகும்.

**என் பாடல் திரட்டு :** பல்வேறு சூழ்நிலைகளில், பல்வேறு காலகட்டங்களில் வ.உ. சிதம்பரனார் அவர்கள் இயற்றிய நூறு பாக்களைக் கொண்ட தொகுப்பு இது. மக்கள் அனைவர்க்கும் பொதுவான ஒழுக்கப் பண்புகளை வலியுறுத்தத்தக்க பாடல்களைக் கொண்ட இந்நூல் கற்போர்க்கு விருந்தாகிப் பயன் தரத்தக்கது.

**சொற்பொழிவு நூல் :** 1927-ஆம் ஆண்டு சேலம் மாவட்ட மூன்றாவது அரசியல் மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டில் வ.உ.சிதம்பரனார் அவர்கள் ஆற்றிய பேருரையே இந்நூல். இந்நூலில் தன் ஆட்சி என்றால் என்ன, அதனை அடைவதற்குரிய வழிகள் யாவை, என்பவையெல்லாம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

**தற்சரிதை :** வ.உ. சிதம்பரனார் அவர்களின் ''தற்சரிதை'யாக விளங்கும் இந்நூல் முற்றும் அகவற்பாவால் ஆனது. சிதம்பரனார் சிறைக் கோட்டத்தில் இருந்தபோது, "லோகோபகாரி" பத்திரிகையின் ஆசிரியராக விளங்கிய பரலி சு. நெல்லையப்பர் அவர்களின் வேண்டுகோட்கிணங்க இந்தத் "தற்சரிதை" எழுதப்பட்டது. நூலின் பிற்பகுதி, சிதம்பரனார் அவர்கள் சிறைக் கோட்டத்தினின்றும் வெளிவந்த பின் இயற்றி இணைக்கப்பட்டது. சிதம்பரனார் "விவேக பானு" என்னும் பெயரில் திங்கள் இதழ் ஒன்றை நடத்தினார்.

இவ்வாறு தமிழ் இலக்கிய உலகில், வ.உ.சிதம்பரனார் அவர்கள் சிறந்த பதிப்பாசிரியராகவும், மொழி பெயர்ப்பாளராகவும், உரையாசிரியராகவும், நூலாசிரியராகவும், தத்துவ ஞான வித்தகராகவும், பத்திரிகையாளராகவும் விளங்கி ஆற்றியுள்ள அருந்தமிழ்த் தொண்டுக்குத் தமிழ் மக்கள் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். தமிழ்த் தொண்டினை மனத்தகத்தே எண்ணி மகிழ்ந்து பாராட்டுவோமாக.

- சாமி. பழனியப்பன்



## கை குவித்து வணங்குவோம்!

- நாமக்கல் கவிஞர்

அடிமை வாழ்வை நீக்கிநாம்
அரசரான நாளிது!
அந்நியர்க்கு அஞ்சிவாழ்ந்த
அவதிவிட்ட நாளிது!
கடமையோடு கண்ணியம்
கட்டுப்பாடு மூன்றையும்
கண்ணைப்போலக் காப்போமென்று
கையடித்த நாளிது!
விடுதலைநாள் கொண்டாடும்
வீரம்மிக்க நாளிதில்
வியப்புமிக்க சாந்தசத்திய
விரதம்பூண்ட வேள்வியில்
கடுமையான தவமியற்றிக்
கட்டவிழ்த்து விட்டநம்
காந்தியண்ணல் நினைவுகொண்டு
கைகுவித்து வணங்குவோம்!

# காங்கிரஸ் தலைவர் பெரியார்

- சாமி சிதம்பரனார்



ஈ.வெ.ரா., திரு. காந்தியாரின் சொற்களையெல்லாம் முற்றும் நம்பினார். அவற்றையே தமது ஒத்துழையாமைப் பிரசாரத்தில் பேசினார். தாம் அணிந்துவந்த ஆடம்பரமான ஆடைகளையெல்லாம் வீசியெறிந்தார். சிகரெட் குடிப்பது, வெற்றிலை போடுவது முதலிய அனேகப் பழக்கவழக்கங்களை ஒரே பகலில் அடியோடு நிறுத்திவிட்டார். ஒரு சாது ஆனார். முரட்டுக் கதரையே உடுத்தினார், தாம் மட்டிலும் அல்ல; உயர்ந்த பட்டு உடுத்திவந்த நாகம்மையாரையும் கதர் உடுத்தச் செய்தார். தமது 80 வயது அம்மையாரையும் கதர் உடுத்தச் செய்தார். மற்றும் வீட்டில் உள்ளவர்களையும் தம் இனத்தவரையும் நண்பரையும் கதர் அணியச் செய்தார்.

> "ஸ்ரீமான் நாயக்கர் செல்வமெனும் களியாட்டில் அயர்ந்தவர்; உண்டாட்டில் திளைத்தவர்; வெய்யில் படாது வாழ்ந்தவர். ஈரோட்டு வேந்தரென விளங்கியவர். ஸ்ரீமான் நாயக்கர் தமது செல்வம் முதலிய மாயைகளை மறந்து வறியார்போல் எளிய உடைதரித்து, எளிய உணவு உண்டு இரவு பகல் ஓயாது தேசத் தொண்டிற்கே தமது வாழ்வை அர்ப்பணம் செய்துள்ளதை எவரே அறியார் ?"

- என்று 24.5.1924ல் ஈ.வெ.ரா. சிறைப்பட்டபோது ''நவசக்தி''யில் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் எழுதியுள்ளார்.



தமிழ்நாட்டில் இன்று நடைபெற்று வரும் கதர் இயக்கம் ஈ.வெ.ரா.வினாலேயே பலமடைந்தது. அவர்தாம் கதரைக் காங்கிரசோடு பிணைத்தார். காங்கிரஸ் கதர் வஸ்திராலயங்கள் அவரால்தான் ஏற்படுத்தப்பட்டன. அதுவரை தனிப்பட்ட வியாபாரிகள் கொள்ளையடித்து வந்தார்கள். திரு. சி.ராஜகோபாலாச்சாரியார் நிர்வாகம் நடத்திவந்த திருச்செங்கோடு ஆச்ரமமும் ஈ.வெ.ரா வினாலேயே திறந்துவைக்கப்பட்டதாகும். கதரைப்பற்றி அவர் செய்த சொற்பொழிவுகள் அளவற்றவை. அவர் சொற்பொழிவைக் கேட்ட ஒருவன் சீமைத் துணியைக் கையினாலும் தொடமாட்டான். அதை நெருப்பிட்டுக் கொளுத்துவான். உடனே கதர் கட்டத் தொடங்கி விடுவான். தீண்டாமை விலக்கைப் பற்றியும் மிகவும் வன்மையாகப் பேசுவார்.

கோர்ட்டுகளை விலக்குதல் பள்ளிக்கூடங்களை விடுதல் முதலியவைகளைப் பற்றிப் பேசுவாரானால் உடனே அப்பேச்சுக்குப் பலன் விளைந்துதான் தீரும். ஒத்துழையாமை காலத்தில் இராமசாமியார் செய்துவந்த சொற்பொழிவுகள் தமிழ்நாட்டினரின் மனத்தைக் கவர்ந்து வந்தன. பிரசாரகர்களுக்கு அவுடதம் போலாயின. இன்றும் தமிழ்நாட்டில் நல்ல கெட்டிக்காரச் சொல்வன்மைப் பிரசாரகர்கள் என்போர் இவரது பேச்சுக்களில் உள்ளவைகளைப் பொறுக்கிப் பேசுவதன் மூலமேதான் பெயர் பெற்றிருக்கின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். சொல்வன்மையில் இவருக்கு இணை எவரும் இல்லை. இது இவர் பகைவர்களாலும் மறுக்கப்படாத செய்தி.

**"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்".**

-என்பது வள்ளுவர் மொழி. இதற்கு இவர் சொற்பொழிவே சிறந்த எடுத்துக்காட்டு. தமிழ்நாட்டில் ஒத்துழையாமைக் காலத்தில் ஈ.வெ.ரா.வின் சொற்பொழிவுக்குத் தனி மதிப்பிருந்தது. தனித்த பெரும் பயனும் விளைந்தது. மூலையாகட்டும், முடுக்காகட்டும், நாடாகட்டும், நகரமாகட்டும் ''ஈரோட்டு ராமசாமி நாயக்கர் பிரசங்கம்'' என்றால்போதும், படிக்காதவர்களும் படித்தவர்களும் ஆயிரக்கணக்கில் கூடிவிடுவார்கள். கேட்போர் சலிப்படையாதபடி மணிக்கணக்கில் 2 மணி 3 மணி நேரம் பேசுவார். இவருடைய சொற்பொழிவில் வீரச்சுவை நிறைந்திருக்கும். வேண்டுமிடத்தில் சோகத் தன்மை சொட்டும். நகைச்சுவையைக் கொட்டுவதில் இவருக்கு ஈடாக எவரும் இலர்.

"ஸ்மரணையற்றுக் கிடந்த தமிழர்களின் உள்ளத்தை ''அடிதெரியும்படி'' கலக்கிய பிரம்மாண்ட பாக்கியம் நாயக்கரைப் பெரிதும் சேர்ந்ததாகும் அப்பா! நாயக்கரின் அழகு பிரசங்கத்தை ஆணித்தரமான சொற்களை, அணியணியாய் அலங்காரம் செய்யும் உவமானங்களை, உபகதைகளை, அவரது கொச்சை வார்த்தை உச்சரிப்பை, அவரது வர்ணனையை, உடல் துடிப்பைப் பார்க்கவும்,




கேட்கவும் வெகுதூரத்திலிருந்து ஜனங்கள் வண்டுகள் மொய்ப்பதுபோல், வந்து மொய்ப்பார்கள்... அவர் இயற்கையின் புதல்வன். மண்ணை மணந்த மணாளன், மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு நாயக்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் என்பதில் சந்தேகமில்லை... செய்ய வேண்டும் என்று தோன்றியதைத் தயங்காமல் செய்யும் தன்மை அவரிடம் காணப்படுவதுபோல தமிழ்நாட்டில் வேறு எவரிடமும் காணப்படுவதில்லை... நாயக்கர் மகாஸரஸி, பரம ரஸிகர்".

-இது 1933ல் "காந்தி" என்னும் பத்திரிகையில் வெளி வந்தது. நல்ல எழுத்தாளரான வ. ராமசாமி அய்யங்கார் அவர்களால் எழுதப்பட்டது.

ஈ.வெ.ரா. கதர் வளர்ச்சிக்காக ராட்டினத்தைத் தூக்கிக்கொண்டு ஊர் ஊராகச் சுற்றிவந்தார். கதர் மூட்டைத் தூக்கி விற்றார். அந்நிய நாட்டுத் துணியை விலக்கவேண்டுமென்பதற்கும் கதரையே அணியவேண்டு மென்பதற்கும் இவர் சொல்லும் விதவிதமான காரணங்கள் கேட்பவர்கள் மனதை அவ்வினாடியிலேயே கவ்விவிடும். சுருங்கக் கூறவேண்டுமானால் தமிழ்நாட்டில் இன்று கதர் உடுத்துபவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேரும், இதுவரையில் கதர் உடுத்தி இப்போது கைவிட்ட பல்லாயிரக்கணக்கானவரும் ஈ.வெ.ரா. வின் சொற்பொழிவைக் கேட்டுக் கதர் அணிந்தவர் களேயாவார்கள்.

'கோர்ட்டு'களை விலக்கவேண்டும் என்பதைச் செயலில் காட்டியவர் இவரேயாகும். இக்கொள்கையின் பயனாய்த் தம் குடும்பத்திற்கு வரவேண்டிய சுமார் 50,000 ரூபாயை இழந்தார். அதில் 28,000 ரூபாய்க்கு ஒரு அடமானப் பத்திரம் இருந்தது. ஒத்துழையாமை காரணமாய்க் கோர்ட்டுக்குப் போய் அதை வசூலிக்க ஈ.வெ.ரா. விரும்பவில்லை. காங்கிரசுக்குத் தலைவராயிருந்த சேலம் சி. விஜயராகவாச்சாரியார் அவர்கள் இதையறிந்தார். "இந்தப் பத்திரத் தொகைக்காகத் தாவா செய்ய உமக்கு இஷ்டமில்லையானால் நீர் அதை 'மேடோவர்' (மாற்றி) செய்துகொடுத்துவிடும். நான் இனாமாகவே வாதாடி வசூல் செய்து தருகிறேன். அந்தப் பணத்தையடைய உமக்கு இஷ்டமில்லையானால், வசூல் செய்ததும் அதைத் திலகர் சுயராஜ்ய நிதிக்காவது கொடுத்துவிடும்'' என்று ஈ.வெ.ரா.விடம் வலியுறுத்திக் கேட்டார். ஆயினும் அவர் இணங்கவில்லை. அவ்வளவு பெரிய தொகையை மனதார இழந்தார்.

அதுசமயம் அவர் திரு. விஜயராகவாச்சாரியாருக்குச் சொன்னதாவது: ''நானே வழக்காடுவதும் ஒன்றுதான். உங்களிடம் எழுதிக்கொடுத்து வழக்காடச் செய்வதும் ஒன்றுதான். இது என் கொள்கைக்கு ஒத்ததல்ல. கொள்கையே பெரிது; பணம் பெரிதல்ல" என்பதாகும்.

மதுவிலக்குப் பிரசாரம் மும்முரமாக நடந்தபோது, காந்தியார் ஒரு பணியிட்டார். ''கள்ளுக்கு உதவும் மரங்களையெல்லாம் வெட்டிவிட வேண்டும்" இது அப்பணி. வடநாட்டில் பெரும்பாலும் கள் தருவது ஈச்சமரங்கள். அவைகளை வெட்டிவீழ்த்துவதால் பெருஞ்சேதம் இல்லை. தென்னாட்டில் அப்படியல்ல. இங்கே கள் இறக்கப்படுவது தென்னை மரங்களில். தென்னையின் பயன் மிகமிகப் பெரியது. இவைகள் அழிக்கப்பட்டால் நாட்டுக்குப் பொருட்சேதம் பல. இதைப் பற்றிக் காந்தியார் சிந்திக்கவே இல்லை போலும்!

காந்தியாரின் பணியைப் பலர் ஏற்றனர். வடநாட்டில் பல இடங்களில் ஈச்சமரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டன. இச்செய்தி, செய்தித்தாள்களில் வந்தன. கண்டார் ஈ.வெ.ரா. காந்தீய வெறியில் மூழ்கியிருந்தார் அல்லவா? தமது தோட்டங்களிலிருந்த 500 தென்னை மரங்களையும் வெட்டிச் சாய்த்தார்.

அக்காலத்தில் காந்தீய வெறியினால் தென்னைகளை வெட்டி வீழ்த்திய பைத்தியக்காரர்களில் இவரே தலைசிறந்தவர் என்று கூறலாம்.

1921ஆம் ஆண்டில் கள்ளுக்கடை மறியல் மிகவும் புகழ் பெற்றது. ஈரோட்டில் மறியல் மும்முரம் மிகுதி. ஈ.வெ.ரா. மறியலைத் தலைமை தாங்கி நடத்தியவர். இதற்காக 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. மறியல்காரர்கள் தடையுத்தரவைப் பொருட்படுத்தவில்லை. எண்ணற்ற தொண்டர்கள் சிறை புகுந்தனர். 1921 நவம்பரில் ஈ.வெ.ரா.வும் அவரோடு சுமார் 100 தொண்டர்களோடு சிறைபிடிக்கப்பட்டனர். ஒரு மாதம் தண்டனை பெற்றார். இதனால் ஊரெங்கும் அமளி. நாடெங்கும் கலவரம்.

இச்சமயம் நாகம்மையாரும் ஈ.வெ.ரா.வின் தங்கை கண்ணம்மாளும் மறியலுக்குப் புறப்பட்டனர். இவர்களுடன் பல பெண்மணிகளும் தொடர்ந்தனர். மறியல் செய்பவர்கள் ஒருநாளில் ஆயிரக்கணக்கில் பெருகினர். நாகம்மையாரும் அவருடன் சென்ற தோழர்களும் சிறைபடுத்தப்பட்டால் ஈரோட்டின் நிலைமை மிக்க மோசமாகி 10,000 பேர்களுக்குச் சிறை வேண்டியிருக்குமென்று அதிகாரிகள் கருதி, சென்னை அரசாங்கத்துக்குத் தந்தி கொடுத்து முன்னறிவுடன் தடையுத்தரவை நீக்கினர். அதுசமயம் சர்க்கார் 144 க்கு மதிப்பற்று வாய்தா காலத்திற்குள் ரத்து செய்யப்பட்டது இது ஒன்றேயாகும். இச்சம்பவத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் கள்ளுக்கடை மறியல் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்துவிட்டது. இவ்வாறு குடும்பத்துடன்



தேசத்திற்குத் தியாகம் செய்த இராமசாமியாரைச் சிலர் நாக்கில் நரம்பின்றித் தேசத்துரோகி என்று தூற்றுகின்றனர். என்னே! இக் கற்றுக்குட்டிகளின் பேதமை.

இச்சமயம் பொதுவாகவே இந்தியாவில் நடந்துவந்த ஒத்துழையாமைக் கிளர்ச்சி சம்பந்தமாகக் காங்கிரசுக்கும் அரசாங்கத்துக்கும் ஒரு சமாதான ஒப்பந்தப் பேச்சு நடைபெற்றது. இதற்காகப் பம்பாயில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அதற்குக் காலஞ்சென்ற சர். சங்கரன் நாயர் தலைவர். இம்மாநாட்டின் பெயர் மாளவியா மாநாடு. இம்மாநாட்டின் நடவடிக்கை துவக்கப்படும் முன்பு திரு. பண்டிட் மாளவியா அவர்களும் சர். சங்கரன் நாயர் அவர்களும் 'மறியலை நிறுத்திவிட்டு, நடவடிக்கை துவக்கலாம்' என்று காந்தியாரைக் கேட்டுக்கொண்டார்கள்.

அப்போது காந்தியார், ''மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை; அது ஈரோட்டிலுள்ள இரண்டு பெண்களிடம் இருக்கிறது. அவர்களைக் கேட்க வேண்டும்" என்று பதிலுரைத்தார். இச்செய்தி, அச்சமயம் 19.1.22ந் தேதி வெளியான ''ஹிந்து'' பத்திரிக்கையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

காந்தியார் இவ்வாறு சொன்னதற்குக் காரணம், ஈ.வெ.ரா.வின் மனைவி நாகம்மையார், அவரது தங்கை கண்ணம்மாள் ஆகிய இரு பெண்மணிகளும் மறியலுக்கு முக்கியக் காரணமானவர்கள். ஆதலால் அவர்களின் கருத்தையறிந்த பின்பே முடிவு செய்ய வேண்டுமென்று கருதிக் கூறியதேயாகும்.

கள்ளுக்கடை மறியல் செய்வதாக முதன் முதல் முடிவு செய்த இடம் ஈரோடுதான். ஈ.வெ.ரா. அவர்கள் வீட்டில் காந்தியார் முதலிய தலைவர்கள் கூடின காலத்தில், கள்ளுக்கடை மறியல் செய்யவேண்டுமென்று பேசி முடிவு செய்யப்பட்டது. அம்முடிவுக்கு அடிப்படை ஈ.வெ.ரா.வின் முழு ஆதரவேயாகும்.

பின்பு ஒத்துழையாமை ஒருவாறு அடங்கிற்று. பலர் அம்முறை தவறு என்று உணர்ந்தனர். அவர்களில் காலஞ்சென்ற சி.ஆர்.தாஸ் என்பவரும் ஒருவர். "விலகி நின்று கூச்சலிடுவது பயன் தராது கோட்டைக்குள் சென்று எதிரிகளை மடக்கவேண்டும்'' என்ற கொள்கையுடன் சுயராஜ்யக் கட்சியைத் தொடங்கினார் இவர். இக்கட்சியை ஈ.வெ.ரா. ஆதரிக்கவில்லை; எதிர்த்தார். காந்தியார் முதலிய மற்றும் பலரும் ஒப்புக்கொள்ளவில்லை. திரு. சி. ராஜகோபாலாச்சாரியாரும் ஈ.வெ.ரா.வையே பின்பற்றினார்.

காந்தியாரின் தலைமைக்கடங்கிய இவர்கள் வைதீக ஒத்துழையாதார் அல்லது "மாறுதல் வேண்டாதார்", என்று அழைக்கப்பட்டனர். ஆயினும் சுயராஜ்யக்கட்சி வளர்ச்சியடைந்து வந்தது. தென்னாட்டிலும் இக்கட்சி உரம் பெற்றது. அப்பொழுது நமது மாகாணத்தில் நீதிக்கட்சியின் பேரால் பார்ப்பனரல்லாதார் அதிகாரம் நடத்தினர். பார்ப்பனர்களால் இதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அதற்காகவே சுயராஜ்யக் கட்சியை ஆரம்பித்தார்கள் என்றும், தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் சுயராஜ்யக் கட்சியை ஆதரித்து நின்றனர் என்றும் சொல்லவேண்டும். ''பார்ப்பனரல்லாதார் கட்சியை அதிகாரத்திலிருந்து விரட்டவேண்டும், சுயராஜ்யக்கட்சியின் பேரால் நாமே அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டும்" என்பது அக்காலச் சுயராஜ்யக் கட்சியின் நோக்கம். இதனாலேயே பார்ப்பனர்கள் அனைவரும் ஒருமுகமாக அக்கட்சியைப் போற்றினர், ஆதரித்தனர். இவ்வுண்மையை ஈ.வெ.ரா.வும் அறிந்துகொண்டார்.

வைக்கம் சத்தியாக்கிரகம் நாடெங்கும் புகழ்பெற்று விட்டது. இதனால் ஈ.வெ.ரா. "வைக்கம் வீரர்" என்ற பெயர் பெற்றார் இன்றும் தமிழ்நாட்டார் இப்பெயரை மறக்கவில்லை. ''வைக்கம் வீரர்'' என்றால் போதும், ஈ.வெ.ரா. என்று நன்கறிவார்கள். எனவே தீண்டாமையை ஒழிப்பதற்காகத் திருவாங்கூர் அரசாங்கத்தாரால் இவர் இருமுறை சிறையிலிடப்பட்டார்.



***நம்முடைய நாட்டிற்கு இப்போது உழைப்புதான் தேவை; இதை நாம் நன்குணர்ந்து பணியாற்றினால், இப்போதுள்ள தொல்லைகள் அனைத்தும் நம்மைவிட்டு நீங்கும்.***

***- காமராசர்***

இச்சமயம் நம் நாட்டுப் பத்திரிகைகளெல்லாம் நடுநிலைமையின்றி ஒரு சார்பாகவே நடைபெற்றுவந்தன. அவைகள் எல்லாத்துறைகளிலும் பார்ப்பனர்களையே ஆதரித்துவந்தன. வைக்கம் சத்தியாக்கிரகத்திலும் ஈ.வெ.ராவின் வழக்கிலும் அவைகள் நடுநிலைமை வகிக்கவில்லை. பார்ப்பனரல்லாதாரின் கருத்துக்களைப் பற்றிய உண்மைச் செய்திகளை வெளியிடுவதே இல்லை.

பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் பேரால் நடைபெற்று வந்த ஆங்கிலத் தினசரி "ஜஸ்டிஸ்" பத்திரிகையும், தமிழ்த் தினசரி "திராவிடன்" பத்திரிகையும் செல்வாக்கில்லாமல் இருந்தன. ஆதலால், பார்ப்பனரல்லாதார் நன்மையைப் பாதுகாக்க ஒரு தனிப்பத்திரிகை வேண்டும் என்கின்ற எண்ணம் இவருக்கு அப்போதுதான் உதயமாயிற்று போலும்! எனவே, 2.5.1935ல் "குடி அரசு" என்னும் பேரால் ஈ.வெ.ரா. ஒரு வாரப் பத்திரிகையை ஈரோட்டில் தொடங்கினார். இது இன்றும் நடந்துவருகிறது. இப்பத்திரிகை, சிறந்த தமிழறிஞரும், பெரியாருமாகிய திருப்பாதிரிப்புலியூர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரியசுவாமி என்னும் ஞானியார் சுவாமிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குருகுலப் போராட்டம் தொடங்கிற்று. "தமிழ்நாட்டுக் குருகுலம்" என்ற பெயருடன் வ.வெ. சுப்ரமணிய அய்யர் அவர்களால் சேரன்மாதேவியில் ஒரு தேசீய நிலையம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதற்குப் பெயர் குருகுலம். அதற்குப் பண உதவி செய்தவர்கள் தமிழ் மக்கள். காங்கிரசிலிருந்தும் பத்து ஆயிரம் கொடுக்கப்பட்டது. அதன் வளர்ச்சிக்காக ஈ.வெ.ரா. டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு.வி.கலியாணசுந்தர முதலியார், கானாடுகாத்தான் வயி.சு.சண்முகம் செட்டியார் முதலியவர்கள் உழைத்தனர். ஆனால், குருகுலத்தில் உண்மையாய் நடந்தது என்ன? பார்ப்பனப் பிள்ளைகளுக்குத் தனி உணவு; பார்ப்பனரல்லாத பிள்ளைகளுக்கு வேறு உணவு; வேறு வேறு இடம்; வேறு வேறு பிரார்த்தனை. இதன் முலம் ஜாதிப்பிரிவுக்கு ஆக்கம் இவை குருகுலத்தில் நடைபெற்றன. 'இப்பிரிவினை தவறு; குருகுல நோக்கத்துக்கு மாறுபட்டது; தேசீய ஒற்றுமைக்கு ஏற்றதன்று; சமபந்தி உணவே அளிக்கப்படவேண்டும்" என்று ஈ.வெ.ரா கூறினார். அப்போது ஈ.வெ.ரா. காங்கிரஸ் காரியதரிசி.

காங்கிரசில் குருகுலத்துக்கு 10,000 ரூபாய் கொடுக்க இசைந்து ரூ.5000 முதலில் கொடுத்ததால் மீதி 5000த்தை வ.வெ.சு. அய்யர் கேட்டார். குருகுலத்தில் ஜாதி பேதம் இருப்பதால் கொடுக்கமுடியாது என்று மறுத்துவிட்டார். அய்யர் ஈ.வெ.ரா.வின் கூட்டுக் காரியதரிசியாய் இருந்த ஒரு பார்ப்பனரிடம் செக் வாங்கிக் கொண்டுபோய்விட்டார். இதை ஈ.வெ.ரா. தெரிந்ததும் குருகுலத்தோடு போர் தொடுத்தார். இதற்கு டாக்டர் நாயுடு ஆதரவளித்தார்; திரு.வி.கலியாணசுந்தர முதலியாரும் ஆதரவளித்தார். மந்திரியாயிருந்த திரு. எஸ். ராமநாதன் அவர்கள் வீட்டில்தான் முதன்முதல் குருகுலத்தை எதிர்த்து, அதை ஒழித்துவிட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அப்போது கூடி ஏற்பாடு செய்தவர்கள் திரு. ராமநாதன், ஈ.வெ.ரா., திரு.வி. கலியாணசுந்தர முதலியார், என். தண்டபாணிப்பிள்ளை ஆகியவர்கள். டாக்டர் நாயுடுவைத் தலைவராக வைத்துக் கொண்டு பார்ப்பனிய வளர்ச்சிக்காக இருந்த இக்குருகுலத்தை அடியோடு ஒழித்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டார்கள். வ.வெ.சு. அய்யர் இக்கொள்கையை ஒப்புக் கொள்ளவில்லை. அய்யரின் கொள்கை நாடெங்கும் கண்டிக்கப்பட்டது. நாயுடுவும் நாயக்கரும் இதைப்பற்றி நாடெங்கும் சென்று கண்டித்துப் பேசினர். இக்கிளர்ச்சியை அடக்கக் காந்தியாரும் தலையிட்டார். "குருகுலத்தில் ஜாதிப் பிரிவினைக்கு இடந்தருதல் கூடாது. சமபந்தி உணவுதான் அளிக்க வேண்டும்" என்ற காந்தியாரின் கருத்தையும் அய்யர் ஏற்கவில்லை. "பார்ப்பனப் பிள்ளைகளும் அல்லாத பிள்ளைகளும் ஒன்றாக உட்கார்ந்து உணவருந்துவதற்கு நான் ஒருப்பட முடியாது. அப்படிச் செய்தால் குருகுலம் கெட்டுவிடும்'' என்று அய்யர் கூறிவிட்டார். இது ஈ.வெ.ரா.வுக்குப் பார்ப்பனர்களையும் காங்கிரசையும் தாக்குவதற்குச் சாதனமாக்கிற்று.

இக்குருகுலப் போராட்டத்தால் தமிழ்நாட்டில் ஒரு பெரும் பரபரப்பு உண்டாயிற்று. பார்ப்பனர்கள் தீண்டாமையைப் பற்றிப் பேசுவது வெறும் பேச்சு; அவர்கள் தேசீயத்தைப் பற்றிப் பேசுவது வீண்; ஒற்றுமையைப் பற்றிப் பேசுவதற்குப் பொருள் இல்லை" என்ற நிரந்தரமான உண்மையை உணர்ந்து கொண்டனர். தமிழ் மக்கள் குருகுலத்துக்குப் பண உதவி செய்து வந்த பார்ப்பனரல்லாத மக்கள் தங்கள் உதவியை நிறுத்திக் கொண்டனர். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இதன் பொருட்டுச் சேர்க்கப்பட்ட தொகைகள், நாயுடு, ஈ.வெரா., திரு.வி.க. இவர்களின் முயற்சியால் ஆங்காங்கே நின்றுவிட்டன. எரிவதை இழுத்துவிட்டால் கொதிப்பது எங்கே?

குருகுலம் ஒழிந்தது. தேசீயத்தின் பேரால் வருணாச்சிரம தருமத்தை நிலைநிறுத்த ஏற்பட்ட ஒரு நிலையம் ஒழிந்ததைப் பற்றித் தமிழர் களிகூர்ந்தனர்.

- அடுத்த இதழில் முடியும்..

('தமிழர் தலைவர்' என்ற நூலிலிருந்து.)

**THE HIND MATCHES LIMITED**

**&**

**STANDARD MATCH INDUSTRIES (P) LIMITED**

*Manufacturers of* ***'The Train & Sun Flower'*** *Brand Cardboards & Veneers Safety Matches.*

**5-2-15-C, Sattur Road,**
**SIVAKASI-626 123.**
**Tel : 21142, 22173, 20952**
**Fax : 04562-72378**

# தியாக தீபம்

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத ஊர் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பூர்; இந்த ஊரில்தான், **1932** ஜனவரி மாதம் வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெற்ற அறப்போராட்டத்தில் தாயின் மணிக்கொடியான தேசியக் கொடியைக் காப்பதற்காக, தடியடியைத் துச்சமென மதித்து, உயிர்த் தியாகம் செய்தார் குமாரசாமி என்கிற தீரர்; குண்டாந்தடியால் தாக்கப்பட்டுக் குருதி வெள்ளத்தில் குற்றுயிராகக் கிடந்தபோதும், பாரதத் தாயின் மணிக்கொடியைத் தரையில் வீழாது காத்த குணக்குன்று. குமாரசாமி 'திருப்பூர்க் குமரன்' என்ற புகழ்ப் பெயரைப் பெற்று, இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனி இடம்பெற்றுவிட்டார்.

பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த சென்னிமலையில் நெசவாளர் குடும்பத்தில், நாச்சிமுத்து - கருப்பாயி தம்பதியருக்கு, 1904 அக்டோபர் மாதத்தில் பிறந்தவர் குமாரசாமி. இவருக்கு ஆறு சகோதரர்கள். ஐந்தாவது வயதில் சென்னிமலையில் பள்ளியில் சேர்ந்த குமாரசாமி ஐந்தாவது வகுப்பு வரையில் தான் படித்தார். அதற்குமேல் அவரைப் படிக்க வைக்க அவரது பெற்றோரின் பொருளாதார நிலை இடங்கொடுக்கவில்லை.

பள்ளிப்பாளையத்தில் தாய்மாமன் வீட்டில் தங்கி, நெசவுத் தொழிலைக் கற்றுக்கொண்டு, சென்னிமலை திரும்பி, நெசவுத் தொழிலைச் செய்யத் தொடங்கினார். இவரது பத்தொன்பதாவது வயதில் பதினான்கு வயதுப் பெண் இராமாயியை இவருக்கு இவரது பெற்றோர் திருமணம் செய்துவைத்தனர். நெசவுத் தொழிலில் போதிய வருமானம் இல்லாததால், திருப்பூர் பஞ்சரைக்கும் தொழிற்சாலையில் எடைப் பதிவு எழுத்தர் வேலையில் சேர்ந்தார்.

கள்ளுக்கடை மறியலா, கதராடை உற்பத்தியா, எதிலும் முன்னணியில் நின்ற ஊர் திருப்பூர்; காந்தியடிகள் காட்டிய வழியில், சுதந்திரப் போராட்டத்தில் அந்நகர மக்கள் காட்டிய ஆர்வமும், எழுச்சியும் போற்றத் தக்கவை. தேசபந்து



வாலிபர் சங்கம் என்ற பெயரில் ஒரு அமைப்பு திருப்பூரில் இருந்தது. அதில் குமாரசாமியும் உறுப்பினராகச் சேர்ந்து, சுதந்திரப் போராட்டத்தில் தீவிர ஆர்வம் காட்டினார். காந்தியடிகள் கூறியபடி கதராடையே உடுத்தினார், தம் மனைவியையும் கதர்ச் சேலை அணியும்படி செய்தார். தினந்தோறும் ராட்டையில் நூல் நூற்பதைத் தம் கடமைகளுள் ஒன்றாக நினைத்துச் செயல்பட்டார்.

வேதாரணியத்தில் மூதறிஞர் ராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்ளத் துடித்தார். ஆனால், குடும்பத்தினரும், தொழில் நிலையத்தினரும் தடுக்கவே, அவரது ஆசை நிறைவேறவில்லை. அதனால் மனம் உடைந்தார். ஒருநாள் முழுவதும் உண்ணாவிரதம் இருந்து, மன ஆறுதல் தேடிக் கொண்டார்.

1932ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் நாள் ஆங்கிலேய வைசிராய் லார்டு வெல்லிங்டன் கட்டவிழ்த்துவிட்ட அடக்குமுறை தர்பார் காரணமாக அண்ணல் காந்தியடிகள் பம்பாயில் கைது செய்யப்பட்டார். நாடே கொத்தளித்தது, நாடெங்கிலும் அறப்போர் தொடங்கப்பட்டது, திருப்பூரும் களத்தில் இறங்கியது. ஜனவரி 6ஆம் நாள் திருப்பூரில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடந்தது. ஜனவரி 10 முதல் அறப்போர் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

ஜனவரி 10ஆம் நாள், 144 தடை உத்தரவை மீறி, பி.எஸ். சுந்தரம் என்கிற வீரர், ஒன்பது தொண்டர்களுடன் ஒத்துழையாமை ஊர்வலத்தை நடத்தினார். 'வந்தே மாதரம்' முழக்கத்துடன், 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற நாமக்கல் கவிஞரின் பாடலை எழுச்சியுடன் பாடிக்கொண்டே, திருப்பூர் நகர வீதியில் தொண்டர்கள் வீரநடை போட்டனர். அந்தத் தொண்டர்களில் ஒருவராக, குடும்பத்தினர் தடுத்தும், நண்பர்கள் அறிவுரை கூறியும் கேட்காமல், எல்லோருக்கும் முன்னால், முன்னணி வீரராக, மூவர்ணக் கொடியுடன் குமாரசாமியும் வீரநடை போட்டார்.

போலீஸ் படை 'கலைந்து செல்லுங்கள்' என்று எச்சரித்தும், கலைய மறுத்து, "அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே" என்று முழங்கினார்கள் விடுதலை வீரர்கள். போலீசார் பாய்ந்து, அவர்களை ஓட ஓடத் துரத்தி அடித்து நொறுக்கினார்கள். கொடியைத் தாங்கி, முன்னால் சென்று கொண்டிருந்த குமாரசாமிக்குச் சரியான அடி. அவரை ஆளுக்கொரு பக்கம் குண்டாந்தடியால் தாக்கினர், மண்டை எலும்பு உடைந்தது, குருதி கொட்டிய நிலையிலும், தாங்கிப் பிடித்த தாயின் மணிக்கொடியை வீரர் குமாரசாமி விடவில்லை. அவரது கரங்களிலிருந்து போலீசாரால் கொடியைப் பறிக்க முடியவில்லை.

பட்ட அடியால், மூளை செயலற்றதும், மாவீரன் குமாரசாமியின் உடல் மண்ணில் சாய்ந்து, குருதியில் தோய்ந்தது. ராமன் நாயர் என்பவர் மார்பில் பலமான அடி விழுந்தது. மார்பு எலும்பு ஒன்று ஒடிந்தது, சுந்தரம் என்பவரின் உடலெல்லாம் எலும்பு முறிவு.

சந்துபொந்துகளில் வீசி எறியப்பட்டிருந்த தொண்டர்களை அவர்களது உறவினர்களும், நண்பர்களும் வந்து எடுத்துச் சென்றனர், குமாரசாமி, ராமன் நாயர், சுந்தரம் ஆகிய மூவர் மட்டும் நடுத்தெருவில் குற்றுயிராகக் கிடந்தனர். வெகுநேரத்திற்குப் பிறகுதான், திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அவர்கள் எடுத்துச் செல்லப்பட்டார்கள்.

ஆபத்தான நிலையில் குமாரசாமி நினைவு இழந்தார். அடுத்தநாள் ஜனவரி 11, விடியற்காலை 4 மணிக்கு அரசு மருத்துவமனையில் திருப்பூர்க் குமரன் அமரர் ஆனார். சுந்தரமும், ராமன் நாயரும் நீண்ட சிகிச்சைக்குப் பிறகு, உயிர் பிழைத்தனர்.

சென்னிமலையில் பிறந்து வளர்ந்த குமாரசாமி திருப்பூர்க் குமரனாக மறைந்தார். தாயின் மணிக்கொடியைக் காக்க, இன்னுயிர் ஈந்த குமாரசாமி, திருப்பூரை, இந்திய மக்கள் மறக்க முடியாதபடி செய்து விட்டார்.

-வ. இராசமனோகரன்

# நல்லிரவாகிய நள்ளிரவு!

நாற்பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு, ஆகஸ்டு 14-ஆம் தேதியன்று நள்ளிரவில், இந்தியர் தனது அடிமைத் தளையை உடைத்தெறிந்துவிட்டுச் சுதந்திர நாடாக மலர்ந்தது. 1942-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கத்துக்கு நாட்டு விடுதலை உச்சக் கட்டமாக அமைந்தது. பெதிக் - லாரன்ஸ் பிரபுவின் தலைமையிலான பிரிட்டிஷ் அமைச்சகத் தூதுக் குழுவினர், ஆட்சி மாற்றத்துக்கான அரசியல் அடித்தளத்தை உருவாக்கினர்.

மாநிலச் சட்ட மன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் 650 பேரும் இரவு பன்னிரண்டு மணி அடித்தவுடன் வாக்குறுதி எடுத்துக் கொள்வதற்காக, டாக்டர் இராசேந்திர பிரசாத்தின் தலைமையில் கூடியிருந்தனர்.

திட்டத்தைத் திரு சவகர்லால் நேரு கொண்டு வந்து பேசுகையில், ''விதியுடன் கால ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம்'' என்று கூறினார்.

''இரவு பன்னிரண்டு மணி அடித்து ஓய்ந்தவுடன், இங்குக் கூடியுள்ள அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் அனைவரும், கீழ்க்கண்டபடி வாக்குறுதி எடுத்துக்கொள்வார்கள்'' என்று கூறும் தீர்மானம் முன் வைக்கப்பெற்றது.

''இன்னல்கள், தியாகங்கள் ஆகியவற்றின் மூலம் இந்தியப் பெருமக்கள் சுதந்திரம் பெற்றிருக்கும் இந்தப் புனித வேளையில், பழம் பெருமை வாய்ந்த இந்த நாடு உலக அரங்கில் தனக்குரிய இடத்தை அடைவதற்கும்-உலக அமைதிக்கும்-மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும்-இந்த நாடு தன்னாலியன்றதனைத்தையும் செய்வதற்கும் ஏற்ப இந்திய நாட்டுக்கும், மக்களுக்கும் தொண்டு செய்வதற்கு இந்திய அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகிய நான் தாழ்மையுடன் என்னை அர்ப்பணிக்கிறேன்''.

- திட்டத்தை ஆதரித்துப் பண்டித நேரு பின்வருமாறு பேசினார் :

''நமது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது. வாக்குறுதிகளை முழுஅளவுக்கு நிறைவேற்ற முடியாவிட்டாலும், கணிசமான அளவுக்கு நிறைவேற்ற வேண்டும்; உலகம் உறங்கிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், இந்தியா விழித்து எழுந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்கிறது. பழையன கழிந்து புதியன புகுதலும், நீண்ட நாட்களாக ஒடுக்கப்பட்டிருந்த ஒரு நாட்டின் ஆன்மா விழித்தெழுந்து மீண்டும் பேசும் நிகழ்ச்சியும் வரலாற்றில் அபூர்வமாகத்தான் நிகழும். தாய் நாட்டின் சேவைக்கும், மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும் எங்களை அர்ப்பணித்துக் கொள்வோம் என்று இந்த நேரத்தில் உறுதிமொழி எடுத்துக்கொள்வது முற்றிலும் பொருந்தும்''.

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த சௌத்ரி காலிக் குஸ்ஸமான் தீர்மானத்தை வழிமொழிந்து பேசினார்.

அதற்கு முன்னால், அவைத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் தமது துவக்க உரையில், நாடு தனது இலட்சியத்தை அடைவதற்கு வழிகாட்டியமைக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தினார். காந்தியடிகளைப் பற்றிக் கூறுகையில், ''கடந்த 30 ஆண்டுகளாக நமக்குக் கலங்கரை விளக்கமாகவும், வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் இருந்து வருகிறார்'' என்று புகழாரம் சூட்டினார்.

இரவு மணி பன்னிரண்டு அடித்தவுடன் அவைத் தலைவரும் மற்ற உறுப்பினர்களும் எழுந்து நின்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அவைத்தலைவர் உறுதிமொழியைப் படிக்க-ஒவ்வொரு வாக்கியமாக அதை உறுப்பினர்கள் இந்தியிலும் ஆங்கிலத்திலும் திருப்பிக் கூறினர்.

அதன் பின்னர் அவைத் தலைவர், கீழ்க்காணும் செய்தியை வைசிராய் மவுண்ட் பேட்டன்

பிரபுவுக்கு அனுப்ப வேண்டுமென்று முன் மொழிந்தார்.

(அ) அரசியல் நிர்ணய சபை இந்தியாவை ஆள்வதற்கான அதிகாரத்தைப் பெற்றுவிட்டது.

(ஆ) மவுண்ட்பேட்டன் பிரபு 1947 ஆகஸ்டு 15-ஆம் தேதி முதல் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட வேண்டுமென்ற பரிந்துரையினை இந்திய அரசியல் நிர்ணய சபை ஏற்றுக்கொள்கிறது.

இதற்குப் பிறகு பம்பாயைச் சேர்ந்த திருமதி ஹன்ஸாமேத்தா, டாக்டர் சரோஜினி நாயுடு அப்போது அங்கு இல்லாததால் நாட்டுக்குத் தேசியக் கொடியை வழங்கினார்.

திருமதி சுசேதா கிருபளானியின் "வந்தேமாதரம்" பாடலுடன் அவைக்கூட்டம் துவங்கியது. கூட்டத்தின் முடிவிலும் அவரே "சாரே ஜகான் சே அச்சா'' என்ற இந்திப்பாடலைப் ('பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு' பாடினார்.)

அரசியல் நிர்ணய சபையின் தீர்மானத்தை டாக்டர் இராசேந்திர பிரசாத்தும், திரு.சவகர்லாலும் உடனடியாக வைசிராய் மவுண்ட்பேட்டன் பிரபுவுக்குத் தெரியப்படுத்தினார்.

"எனக்கு அளிக்கப்பட்டுள்ள கௌரவம் குறித்துப் பெருமைப்படுகிறேன்; அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு உங்கள் ஆலோசனைகளை நிறைவேற்ற முழுமுயற்சி மேற்கொள்வேன்'' என்று மவுண்ட் பேட்டன் பிரபு கூறினார்.

சபை உறுப்பினர்கள் முகமலர்ச்சியுடன் கலைந்து சென்றனர். பார்லிமென்ட் கட்டடத்துக்கு வெளியே கூடியிருந்த பெருந்திரளான மக்கள் அவர்களை வாழ்த்தி வரவேற்றனர். வரலாறு படைத்த அவை உறுப்பினர்களைக் கண்டு, வாழ்த்துவதற்காக உற்சாகம் கரைபுரண்டோடக் காத்துநின்ற கூட்டத்தினரைக் கட்டுப்படுத்துவது காவல் துறையினருக்குப் பெரும் பிரச்சினையாகிவிட்டது.

டாக்டர் அம்பேத்கர், கூட்டத்தின் நெரிசலில் சிக்கிக் கொண்டார். அண்மையிலிருந்த முக்கியச் சாலையில் அமெரிக்கத் தூதர் திரு.ஹென்ரி கிரேமின்



**14-15.8.1947** நள்ளிரவில் நடைபெற்ற சுதந்திர இந்தியாவின் முதலாவது சட்டமன்றக் கூட்டத்தில் பிரதமர் நேரு உரையாற்றுதல்.



இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேருவுடன், முதல் குடியரசுத்தலைவர் ராஜேந்திர பிரசாத்.

மனைவியார், கூட்டத்தில் தமது கணவரைத் தேடிக் கொண்டிருந்தார். அவரைக் கண்டு கொண்ட ஒரு காவல்துறை அதிகாரி அவரை அழைத்துச் சென்று காரில் அமர்த்தினார்.

ஆகஸ்டு 15-ஆம் தேதியன்று மவுண்ட்பேட்டன் பிரபு, கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்றார். அப்போதைய தலைமை நீதிபதி கானியா, வைசிராயின் தர்பார் மண்டபத்தில் (இப்போதைய ராஷ்டிரபதி பவன்) அவருக்குப் பதவி ஏற்பு செய்துவைத்தார். நேருவின் தலைமையில் பதவி யேற்ற புதிய அமைச்சரவைக்குக் கவர்னர் ஜெனரல் பதவி ஏற்பு செய்துவைத்தார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், மவுண்ட்பேட்டன் பிரபு தமது ''கோச்'' வண்டியில் ஏறி, அரசியல் நிர்ணய சபை கூடியிருந்த மண்டபத்துக்குப் போய்ச் சேர்ந்தார். சபைக்கூட்டம் காலை பத்து மணிக்குத் துவங்கியது.

இந்தியா சுதந்திரமடைந்ததைப் பாராட்டி உலகெங்கிலுமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகளைச் சபைக்கூட்டத்தில் டாக்டர் இராசேந்திர பிரசாத் படித்துக் காட்டினார்.

பிரிட்டிஷ் மன்னர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியினை மவுண்ட் பேட்டன் பிரபு படித்தார்.

மவுண்ட்பேட்டன் பிரபு தமது உரையில், இந்தியத் தலைவர்களின் விவேகம், சகிப்புத்தன்மை, சிநேகபாவம் ஆகிய நற்குணங்களைப் புகழ்ந்துகூறினார். ''முதலில் நிர்ணயிக்கப்பட்டிருந்த தேதிக்கு 10 மாதங்கள் முன்னதாகவே ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு இந்தியத்தலைவர்களின் அருங்குணங்களே காரணம்'' என்றார் அவர். சர்தார் வல்லபாய் படேலின் தொலைநோக்கு மதி நுட்பத்தையும், பண்டித நேருவின் தீரத்தையும் கவர்னர் ஜெனரல் பாராட்டிப் பேசினார். 'உலகப் புகழ்பெற்ற தலைவர்களுள் நேருவும் ஒருவர்' என்றார்.

கவர்னர் ஜெனரலின் உரைக்குப் பதிலளித்துப் பேசிய டாக்டர் இராசேந்திர பிரசாத், "இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி இன்றோடு முடிவடைந்தது; இனிமேல் பிரிட்டன் நமது உறவுகள், சமத்துவம், நட்புரிமை நன்மை ஆகியவற்றின் அடிப் படையிலேயே அமைந்திருக்கும்" என்றார்.

அவைக்கூட்டம் முடிந்து திரும்பிச்செல்லுகையில் மவுண்ட்பேட்டனும், அவரது மனைவியாரும், அவரது மகள் பாமிலாவும் வெளியே காத்திருந்த கூட்டத்தினரின் அன்புப்பிடியில் சிக்கித் தவித்துப் போயினர். கூட்டத்திலிருந்த எல்லாரும், அவர்களுடன் கைகுலுக்க முயன்றனர். அவர்கள் வைசிராயின் இல்லத்துக்குப் போய்ச்சேர்ந்த போது பகல் மணி பன்னிரண்டாகி விட்டது!

- கே. ஜே. வித்யா

# மகா கவிகளின் மறதிகள்

பிரபஞ்சன்

இந்தியாவின், முதல் தன் வரலாற்று நூலை, வியாசர்தான் எழுதினார் என்று சொல்லலாமா? 'ஆம்' என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

வியாசரின் இயற்பெயர், கிருஷ்ண துவபாயனன் என்பதை அறிவோம். கறுப்பன் என்பதால், 'கிருஷ்ணர்' என்கிற சொல் ஒட்டிக் கொண்டது, போலும். பாரதத்தைத் தொகுத்தவர்தான் வியாசர் என்றாலும், பாரதமே, அந்தப் பேரிலக்கியத்திலே உலவும் பாத்திரங்கள் எல்லாமே, வியாசரின் பரம்பரைதானே?

வியாச மரபைக் கொஞ்சம் விளங்கிக் கொள்வோம்.

குரு வம்ச மன்னன் விசித்திர வீரியன். சந்ததியின்றி இறந்து போகிறார். நாடாள மன்னர் வேண்டுமே. விசித்திர வீரியன் மனைவிமார்கள் இருவர். அம்பாலிகை மற்றும் அம்பிகை அவர்கள். விசித்திர வீரிய அண்ணன் முறையாக வேண்டிய வியாசர் மூலம், அந்தப் பெண்களிடம் சந்ததியை உருவாக்கலாம் என்று யோசிக்கிறாள். விசித்திர வீரியன் தாய் சத்தியவதி. வியாசர் அழைக்கப்படுகிறார். சாஸ்திர சம்மதமான இந்தக் கர்ப்பதான முறைக்கு வியாசர் சம்மதிக்கிறார். வியாசருக்கு அம்பாலிகை மூலம், திருதராஷ்டிரன் பிறக்கிறான். அம்பிகை மூலம், பாண்டு பிறந்தான். அம்பாலிகையின் 'சூத்திரத்' தோழி சுபா மூலம் விதுரன் பிறந்தான். திருதராஷ்டிரன், துரியோதன் முதலான 101 பிள்ளைகள் மற்றும் ஒரு பெண்ணுக்குத் தந்தையாவதும், பாண்டுவின் மனைவிகள் பஞ்சவரைப் பெற்றதும், இவர்களின் கதையே மகாபாரதம் அல்லவா? ஆக, வியாசரின் கதையும், வியாசப் பரம்பரைக் கதையும் தானே மகாபாரதம்? இந்தப் பாரதத்தை வியாசர் எழுதினார். எழுதியவைகளைத் தொகுத்தார் என்கிற கொள்கைகளையும் ஏற்றுக் கொள்வோம் என்றால் மகாபாரதம், வியாசரின் தன் வரலாற்று நூல் என்று சொல்லத் தடை என்ன?

வியாசர் 'சூதர்' வகுப்பைச் சேர்ந்தவர். இன்றைய புராணப் பிரசங்கிகளைப் போலவும் தமிழ் மரபில் பாணர்களைப் போலவும், ஊர்தோறும் சென்று கதை சொல்லி வாழ்கிறவர்களே 'சூதர்' என்பவராவர். வியாசரோடு பலரும் பாரதக் கதையைச் சொல்லியிருக்கிறார்கள். தங்கள் தங்கள் மனோபாவம் கற்பனை தோன்ற இவர்கள் காலம், இடம், சூழல்களுக்கு ஏற்றவாறு கதை சொல்லியிருக்கிறார்கள். இவர்களது மாணவர்கள் மற்றும் ரசிகர்கள் தங்கள் தங்கள் கற்பனையைச் சேர்த்தார்கள். எல்லாப் பேரிலக்கியங்களைப் போலவே, மஹாபாரதமும் முதலில் வாய்மொழியாகச் சொல்லப்பட்டு பின்னரே எழுத்து வடிவத்தைப் பெற்றது. எழுத்து வடிவம் பெற்றபோது அது வியாசனுடையதாக மட்டுமின்றி பல ஆசிரியர்களின் கைவண்ணம் பெற்றதாக மாறி இருந்தது. இந்தியாவில் மகாபாரதம் சுமார் பத்துக்கும் மேற்பட்ட பிரதிகளைப் பெற்றிருந்தமைக்கு, இந்த பல ஆசிரியர்களின் கைவண்ணமும், மக்கள் மனோபாவமும் காரணம்.

மகாபாரதத்தின் இரண்டாயிரத்துக்கும் அதிகமான ஆண்டுகளின் ஜீவியத்துக்கு எவை காரணமாக இருக்க முடியும்? அந்த இதிகாசத்துக்கு மேலே பூசப்பட்ட பக்தி முலாம் என்று கூற முடியுமா? அது மிகவும் பலகீனமான காரணமாகவே இருக்க முடியும். வைணவம் புத்துயிர் பெற்ற பத்தாம் நூற்றாண்டை ஒட்டியே, பாரதத்தை, அது தன் வயமாக்கிக் கொண்டது.

அதற்கும் முன்னர், பாரதத்தின் ஆயிரம் ஆண்டு கால ஜீவியத்தை சாத்தியமாக்கியது எது? பாரதத்தின் பேரிலக்கியத் தன்மைதான். மனிதனை, அவனுடைய சகல இருட்டுகளுடனும், சகல உன்னதத்துடனும், எதிலும் குறை வைக்காது சித்திரித்தது மகாபாரதம் மட்டுமே ஆகும். விதவிதமான ஏராளமான பாத்திரங்கள் மட்டும், அதன் விசேஷமல்ல. மாறாக, விதவிதமான மானுட சூட்சமங்களை, மனசின் முடிச்சுகளை அது, வாசகர் முன் வைத்தது போல, பிரிதொரு இலக்கியம் வைத்தது இல்லை. பாரதம்

சுதந்திர இந்தியாவில்
பெண்கள் நிலையை
மேம்படுத்துவதற்கான
முதல் சட்டப்பூர்வமான
மகளிர் கமிஷன்
31-1-1992ல்தான்
நியமிக்கப்பட்டது!

படிக்கப் புகுகிற, எவருக்கும் அதற்குள் ஏராளமான அதிர்வுகள் காத்திருக்கின்றன, மனித குலத்துக்கு என்றுமே சவாலாக இருக்கும் சகமனிதப் புரிதலை அந்த இதிகாசம் சாத்தியப்படுத்தியது போல மற்றொன்று இன்றுவரை சாத்தியப்படுத்தியது இல்லை. மகாபாரதம் பிரதியாக வடிவமைக்கப்பட்ட பிறகு மனிதன், மனிதனுக்குச் சுலபமானவனாக ஆனான். மனிதத்துக்குள்ளே இருக்கிற நூறு ஆயிரம் முகங்களை அவனுக்குச் சொல்லியது பாரதம். அதனால் தான் அது 'மகா' பாரதம் ஆயிற்று. 'மகா' என்கிற அடை, அளவில் வந்தது அன்று. உள்ளடக்கப் பெருமையினால் வந்தது.

என்றாலும், மகாபாரதம், விளங்கிக் கொள்ள முடியாது பல 'விடுதல்களை' அல்லது விலகல்களைப் பெற்றுள்ளதை யோசிக்கவே வேண்டியிருக்கிறது.



1. தன் காலத்தில் இருந்த 'நியோகம்' என்கிற தர்மத்தால் தான் (வழக்கினால்) வியாசர் தன் `சகோதரன் மனைவிமார்களுடன் கூடி அரச வாரிசுகளைத் தந்தான் என்கிறது மகாபாரதம். வியோகம் என்பது பண்டைய ஆரிய பரம்பரையின் குழந்தைகள் அற்ற விதவைகள், குழந்தைகளைத் தரமுடியாத கணவர்களை உடைய பெண்கள், தன் கணவரின் உடன்பிறந்தார் மூலமும், தன் கோத்திரத்தைச் சேர்ந்தவர் மூலமும் அல்லது காசு கொடுத்து பிராமணன் மூலமும் பிள்ளை பேற்றை அடையலாம். இது அந்தக் காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட வழக்கம்தான்.

இது வாரிசுகள் என்கிற நோக்கத்தைப் பூர்த்தி செய்கிறது என்றாலும், அந்தக் காரியத்தில் ஈடுபடும் பெண்களுக்குப் பெரும் அவஸ்தையாகவே இருந்திருக்கிறது. வியாசர் என்கிற கருப்பனை, நாற்றம் வீசுகிற உடம்பை உடையவனை, முக்கியமாய் - காதல் அரும்ப முகாந்திரங்கள் இல்லாதவளைக் கண்டு, அருவருப்பால் முகத்தை, கண்களை இறுக்கி மூடிக்கொள்கிறாள் அம்பாலிகை. ஆகவே, கண் இல்லாத திருதராஷ்டிரன் பிறக்கிறான். அம்பிகையின் மனதிலோ கடுமையான பயமே ஏற்படுகிறது. உடம்பு வெளுத்துப் போகிறது அவளுக்கு. அதனால் வெளுத்த பாண்டு பிறக்கிறான்.

இத்தனை அவஸ்தைகளையும் உடைய பெண்களைச் சேர வியாசர் எவ்வனம் மனம் ஒப்பினார்? தாயின் கட்டளைப்படி அவர் இணங்கினார் என்றால் பெண்களின் மனத்துயரம், தர்மசங்கடம் ஏன் சித்தரிக்கப்படவில்லை. மகாபாரதத்தின் பல பகுதிகளையாவது எழுதி இருக்கும் வாய்ப்பைப் பெற்ற வியாசர் தன் மனப் பிரச்சினைகளை ஏன் எழுதவில்லை? ஒரு பெண் தன்னை விரும்பவில்லை என்று தெரிந்தும் பலாத்காரம் செய்யும் அளவிற்குப் போகிற இந்த நியோகத்தை எங்ஙனம் ஒரு கவியால் ஏற்கமுடிகிறது?

2. பிறந்த அக் கணமே தன் தந்தை பராசரனுடன் தவம் செய்யக் கிளம்பும் ஞானக் குழந்தை வியாசர். எல்லை இல்லாத தவப்பெருமையும் ஞான தேஜசும் உடைய மகரிஷி, சடுதியில், இந்த நியோக முறைக்கு எப்படி ஒப்புக் கொள்கிறார்? அவர் தவம் என்னவாயிற்று? தவத்துக்குள் இந்தச் சறுக்கல்கள் உள்ளடங்கியதுதானா?

3. மகாபாரதத்தை இயக்குபவர்கள் மூன்று ஆண்கள், வியாசர், பீஷ்மர், விதுரர் ஆகியோர்களே அவர்கள். இதில், வியாசர் தன்னைக் குறுக்கிக் கொள்கிறார். பீஷ்மனோ மகாமனிதனாக வடிவமைக்கப்படுகிறான்.

பீஷ்மன் என்கிற மனிதனின் மகத்துவம், அவன் தன் தம்பி விசித்திர வீரியனுக்காக அம்பை, அம்பாலிகை, அம்பிகா ஆகிய மூன்று சகோதரிகளைக் கடத்திக் கொண்டு வருவதில் தொடங்குகிறது. இதில், அம்பை ஏற்கெனவே ஒருத்தனின் காதலி, அம்பாலிகை பீஷ்மரின் பௌருஷத்தில் தன் இதயத்தைப் பறிகொடுத்தவள் என்றாலும் என்ன? அம்பையை பீஷ்மனும் ஏற்கவில்லை. அவள் காதலனும் ஏற்கவில்லை. அம்பாலிகையை பீஷ்மன் சுலபமாகவே கைகழுவுகிறான்.

பீஷ்மன் என்கிற மகாமனிதன், கொஞ்சமும் இந்தப் பெண்களின் ஆத்மாவை, மனசைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படவில்லை. ஏன்? அவன் பீஷ்மன். சரி

போகட்டும். வியாசர் ஏன் அவர்கள் மனுஷப் பிறவிகள் என்றுகூட கவலைப்படவில்லை. பீஷ்மனின் ஆளுமையைக் காட்டுவதில் அவர் காட்டுகிற அக்கறை இந்தப் பெண்களை, ஒரு சார்புப் பாத்திரங்கள் என்கிற அளவில்கூட செதுக்கவில்லையே, ஏன்?

பீமன் போகிற போக்கில் காதலித்து, தாயாக்கிச் சென்றுவிடுகிற இடும்பியைக் குறித்து பீமனும் கவலைப்படவில்லை. "அவளைப் பெற்ற" ஆசிரியனும் கவலைப்படவில்லையே - எப்படி?

திரௌபதியின் துகில் உரிப் பருவத்தின் போது மகாமனிதன் பீஷ்மன், மாவீரன் துரோணன், ரிஷிகிருபன், முனிபுங்கவன், அசுவத்தாமன் போன்ற 'மனச்சாட்சிகள்' ஏன் மவுனித்துக் கிடந்தன? கர்ணனுக்கு இருந்த "விட புருஷ" ஆசை இவர்களின் மனதுக்குள்ளும் புகுந்ததா என்ன?

கண் தெரியாத திருதராஷ்டிரனை மன்னனாக்குவதில் மிகத் தீவிரமாக இருந்து அவன் ஆட்சியை, ஆயிரம் கொடுமைகள் அவன் செய்தும், கொடுமைகளுக்குத் துணை போய் இருப்பதும், திருதராஷ்டிரனைக் காப்பாற்றுவதிலும், பீஷ்மர் கொண்ட அக்கறையில் மகா ஞானியாக இருந்த விதுரனை அரசனாக்கிப் பார்ப்பதில் ஒரு எள் அளவும் இல்லையே ஏன்? அவன் 'சூத்திரத்' தாய்க்குப் பிறந்தவன் என்பதாலா? விதுரன் பக்கம் இருக்கும் நியாயம் பற்றிப் பேச "மீனவப் பெண்ணுக்குப்" பிறந்த வியாசனுக்கும் ஏன் வார்த்தைகள் இல்லாமல் போய்விட்டன?

ஒன்று புரிகிறது!

ஆட்சிபீடம் என்கிற நாற்காலியைக் காப்பாற்றுவதிலேயே பீஷ்மனின் ஆயுள் கழிந்து போயிற்று. பெண்கள் அந்த யுகத்தின் பார்வையில் வெறும் நுகர் பொருட்கள். அவர்களுக்கு ஆத்மா என்பது இல்லை. மனம் என்பதும் இல்லை. ஆசைகள் இல்லை. விருப்பு வெறுப்புகள் இருக்கமுடியாது.

இதைக் கேள்வி கேட்கிற ஆய்வுகள், இந்திய மொழிகளில் நடக்கத் தொடங்கி இருக்கின்றன. வியாசரின் 'விலகலை' கேள்விக்குள்ளாக்கும் இலக்கியப் படைப்புக்கள் உருவாகத் தொடங்கி இருக்கின்றன. அண்மையில் வெளிவந்திருக்கும் நந்திகிஷோர் ஆச்சாரியா இந்தியில் எழுதி, தமிழில் சரஸ்வதி ராம்நாத். மொழி ஆக்கத்தில் வெளிவந்திருக்கும் மகாபாரதத்தில் பெண்ணியம் என்கிற நாடகத்தில் இதுபோன்ற எண்ணற்ற கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கிறது (அலைகள் வெளியீட்டகம், சென்னை 24).

மராத்தி எழுத்தாளர் ஐராவதி கார்வே இப்பொருள் பற்றி அருமையாக முயற்சிகள் செய்துள்ளார்.

மகாகவிகளின் மறதிகள், விடுபடல்கள், விலகல்கள் இன்று கேள்விக்குள்ளாகின்றன. எதையும் கேள்விக்கு உள்ளாக்குவதும், ஆராய்வதுமே, அறிவுப் பயணம் செய்யும் அறிவாளர்களின் பணியாக இருக்க முடியும். மகத்துவம் என்று கருதப்படுகிற எதுவும் மண்ணுக்கு மேலும் மனிதத்துக்கு மேலும் இல்லை.

# தேசியச் சின்னம்

தேசியச் சின்னமானது, சுதந்திர இந்தியாவின் அடையாளத்தையும், இறையாண்மையையும், தன்னகத்தே கொண்ட மரியாதையையும், விசுவாசத்தையும் காட்டுகின்றது.




நாட்டின் தேசியச் சின்னமானது, சாரநாத்தில் உள்ள அசோகர் ஸ்தூபி சிங்கத்திலிருந்து வந்தது. அசல் முகப்பில் பின்புறம் ஒன்றுக் கொன்று ஒட்டியுள்ள நான்கு சிங்கங்கள் உள்ளன. அதன் கீழே மணி வடிவ தாமரை மேல், யானை, பாய்ந்து செல்லும் குதிரை, ஒரு காளை மற்றும் ஒரு சிங்கம் ஆகியனவும் இடை இடையே சக்கரங்களும் முன், பொறிக்கப்பட்டுள்ளது. பளபளப்பான ஒரே பாறைக் கல்லில் உருவாக்கப்பட்ட ஸ்தூபியின் மேல் பகுதியானது நீதிச் சக்கரத்தினால் (தர்மசக்கரம்) அலங்கரிக்கப்பட்டுள்ளது.

1950ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் தேதி இந்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இத்தேசியச் சின்னத்தில் மூன்று சிங்கங்களே கண்ணுக்குத் தெரியும். நான்காவது சிங்கம் கண்ணிலிருந்து மறைக்கப்பட்ட நிலையில் உள்ளது. பீடத்தின் நடுப் பக்கத்தில் உள்ள சக்கரத்தின் வலது புறம் ஒரு காளையும், இடது புறம் ஒரு குதிரையும் இடது மற்றும் வலது கோடியில் பிற சக்கரங்களின் புறத் தோற்றங்களும் தெரிகின்றன. மணி வடிவத் தாமரையானது நீக்கப்பட்டுள்ளது. பீடத்தின் கீழே முண்டகா உபநிடதத்திலிருந்து எடுக்கப்பட்ட 'வாய்மையே வெல்லும்' என்ற பொருள் கொண்ட 'சத்யமேவ ஜயதே' என்ற சொற்கள் தேவனாகிரி எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

தேசியச் சின்னமானது, இந்திய அரசாங்கம் மற்றும் மாநில அரசாங்கங்களின் அலுவலக நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும். இந்தியக் குடியரசுத் தலைவர், மத்திய அமைச்சர்கள் மற்றும் அமைச்சகங்கள்; வெளிநாடுகளிலுள்ள இந்திய தூதரகங்கள்; மாநில ஆளுநர்கள்; மற்றும் தலைமை அதிகாரிகள்; மாநில அமைச்சர்கள் மற்றும் இலாகாக்களின் ஒரே அதிகாரபூர்வமான முத்திரை இதுவே ஆகும்.



# சுதந்திரச் சுகம்!

கல்லக் குடிஎனும் களத்திடைப் பிடித்து
சிலமா தங்கள் சிறைவைத் தாரெனை;
பட்டினிப் போரும் பாசப் பெருக்கும்
உறவின ரில்லா உலகுமாய் வாழ்ந்தேன்!
நான்கு சுவர்களின் நடுவே இருப்பதை
எண்ணி எண்ணிநான் ஏக்கம் பெருக்கினேன்!
விரைந்தவர் ஒருநாள் 'விடுதலை' என்றார்;
பறந்தேன் பிறந்த பட்டியை நோக்கி!
விடுதலையின் சுகம் விளக்கவும் ஒண்ணுமோ?
பார்வை புதிது; பசியும் புதிது;
ஊருணி புதிது; உறவினர் புதியவர்;
கண்மாய்க் காற்றின் கனிவே கனிவு!
அன்னை தன் கையால் அமுதம் படைக்க
அள்ளி அள்ளி அருந்திய சுகங்கள்
சூழும் மனைவி, சுற்றம் மக்கள்
வல்லவன் கோவில் வாசக சாலை
நடந்து நடந்து நடையும் பழகினேன்!
சிறகு விரித்த சிட்டுக் குருவிபோல்
வானில் பறந்தே வண்ணம் பாடினேன்!
பத்து நாட்களுக்குள் பட்டினம் வந்தேன்;
மனையொன்று தேடி வாழ்வைத் தொடங்கினேன்.
எண்ணம் புதிதாய் எழுத்தும் புதிதாய்!
வண்ணம் பலப்பல வடித்துச் சிறந்தேன்!
ஒருதரம் சிறையின் உள்ளே சென்று
திரும்பி வந்தால்தான் தெரியும் உலகம்!
'நிழலின் அருமை வெயிலில்' என்று
நிகழ்த்திய மூதோன் மொழிபொய் யன்று!
அடிமை வாழ்வதனையும் அளந்து பார்க்கிறேன்
விடுதலை நாளையும் வியந்து காண்கிறேன்
இரண்டின் நடுவே உள்ளதோர் இடைவெளி
இமயம் குமரி இடைவெளி யலவோ!
சுதந்திரம் முழுவதும் சுகந்தர வேண்டுமேல்
நல்லவர் தமையே நாட்டினர் போற்றுக!
பாரத நாடும் பழந்தமிழ் நாடும்
வாழிய வாழிய வாழிய நீடு!



கவிஞர் கண்ணதாசன்

ஆசியாவிலே முதன் முதலில் கலர் பட்டாசுகளை
பொட்டாசியம் குளோரைடு இல்லாமல் தயார்
செய்து அறிமுகப்படுத்தியவர்கள்.

☆

☆★★☆

★★

☆★★☆

☆

# SRI CORNATION FIRE WORKS

☆

☆★★☆

★★

☆★★☆

☆

*Post Box No.278,*
*Sivakasi - 626 123.*
*Tamil Nadu.*
*Grams* : STORK

# மக்களைக் கவர்ந்த ராஜாஜி



இந்திய நாட்டில் காந்தி மகானின் தலைமை, ஏற்பட்டுப் பத்து ஆண்டுகள் ஆயின. 1929-ஆம் வருஷ இறுதியில் நடந்த அமிருதரசஸ் காங்கிரசின் இலட்சியம் ஒன்று தீர்மானமாயிற்று. 1930ஆம் வருஷ ஆரம்பத்தில் மகாத்மா காந்தி உப்பு சத்தியாக்கிரஹ இயக்கத்தைத் தொடங்கினார். நூறு தொண்டர்கள் அடங்கிய கோஷ்டியுடன் கால்நடையாகத் தண்டி என்னும் இடத்தில் உப்புச் சத்தியாக்கிரகம் செய்யப் புறப்பட்டார். அந்தப் பிரயாணத்தின் விவரங்கள் இந்திய தேசத்திற்கே புத்துயிர் அளித்தன.

காந்திஜி காட்டிய வழியைப் பின்பற்றித் தமிழ்நாட்டிலும் ராஜாஜி வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தார். திருச்சியில் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் அவர்களின் இல்லத்திலிருந்து நூறு சத்தியாக்கிரகத்தொண்டர்கள் ராஜாஜியின் தலைமையில் கால் நடையாக யாத்திரை கிளம்பினார்கள்.

அந்த யாத்திரையின்போது தமிழ்நாடு என்றும் காணாத காட்சிகளைக் கண்டது.

சுமூர் பதினைந்து நாட்கள் சத்தியாக்கிரகப் படையினரின் யாத்திரை நடைபெற்றது. இந்த யாத்திரையின்போதுதான் ராஜாஜியின் தமிழ்ப் பேச்சுத் திறமை முதன்முதலாக நன்கு வெளியாயிற்று. மாபெரும் பொதுஜனக் கூட்டங்களில் தமிழிலே பேசி ஜனங்களைக் குலுங்கிச் சிரிக்கும்படி செய்யவும், வாதத்துக்கு மேல் வாதமும் உதாரணத்துக்கு மேல் உதாரணமுமாகச் சொல்லி ஜனங்களின் மனத்தைக் கவரவும் ராஜாஜிக்கு ஆற்றல் உண்டு என்பது தெரிந்தது. ராஜாஜி அதுவரையில் திருச்செங்கோடு கிராமவாசிகளிடம் பேசியதைத் தவிர அவ்வளவாகத் தமிழில் பேசியதில்லை. அறிவாளிகளும் ஆங்கிலம் படித்தவர்களும் அடங்கிய கூட்டங்களிலேதான் தம்மால் பேசிச் சமாளிக்க முடியும் என்று எண்ணியிருந்தார். வேதாரணிய யாத்திரையின் போது கிராம வாசிகளும் பாமரஜனங்களும் ரசித்துப் பரவசம் அடையும்படிப் பேச முடியும் என்பதைக் கண்டார்.

ராஜாஜியின் பிரசங்க முறை ஜனங்களின் உணர்ச்சியைத் தூண்டி அறிவை மங்கச்செய்து, மனத்தைக் கவரும் முறையல்ல. ''ஆஹா ! ஆந்தோ, தேசம் அடிமையில் ஆழ்ந்து கிடக்கிறதே ! அதை நினைக்க நினைக்க என் நெஞ்சம் கரைகிறதே, கண்களிலே இரத்தக் கண்ணீர் வருகிறதே ! மக்களே ! எழுங்கள் ! அந்நியனை விரட்டுங்கள் !'' என்றெல்லாம் அவரால் பேசமுடியாது. தம்முடைய கட்சி எதுவானாலும் அதைக் கேட்பவர்கள் அறிவினால் ஒப்புக்கொள்ளும்படியாகக் காரணங்களை அடுக்கி உதாரண ரூபத்தில் மனத்திலே பதியச் செய்வார். இவ்விதப் பேச்சினாலும் பதினாயிரக் கணக்கான பொதுமக்களின் கருத்தைக் கவரலாம் என்பது ராஜாஜியின் வேதாரணியம் யாத்திரையின்போது தெளிவாயிற்று.

தஞ்சை ஜில்லா கலெக்டர் மிஸ்டர் தாரன் துரை, ராஜாஜியின் தலைமையில் வரும் சத்தியாக்கிரகப் படைக்கு உணவளித்தல் முதலிய உதவிகளைக் கிராமவாசிகள் செய்யக்கூடாது என்று உத்தரவு போட்டார். இந்த உத்தரவு காரணமாக ராஜாஜியின் யாத்திரை பெரும் முக்கியத்துவத்தை அடைந்தது. தாரன் துரையின் உத்தரவைத் தாக்கியும் பரிகசித்தும் கண்டித்தும் ராஜாஜி, செய்த பிரசங்கங்கள் ரசிகர்களான தஞ்சை ஜில்லா வாசிகளை அவருடைய பக்தர்களாகச் செய்துவிட்டன. தாரன் துரையின் உத்தரவை ஒருவரும் பொருட்படுத்தவில்லை. ராஜாஜிக்கும் அவருடைய தலைமையில் வந்த தொண்டர்களுக்கும் தஞ்சை ஜில்லாக் கிராமங்களிலே இராஜோபசாரம் நடந்தது.



கல்கி

யாத்திரை முடிந்து வேதாரணியத்தை அடைந்தது; ராஜாஜியைச் சட்ட மறுப்புச் செய்ய முடியாமல் தடுத்துவிடுவதென்று போலீசார் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சூழ்ச்சி பலிக்க முடியாதபடி ராஜாஜி முந்திக்கொண்டார். அதிகாலையில் போலீசார் விழித்தெழுந்து வருவதற்கு முன்னால் கடற்கரைக்குச் சென்று உப்பு எடுத்தார். போலீசாரால் கைது செய்யப்பட்டுபின் ஒரு வருஷம் சிறைத்தண்டனையும் அடைந்தார்.

(நாட்டுக்கொரு புதல்வர்-நூலில் வேதாரண்யம் உப்புச்சத்தியாகிரகம் பற்றிய எழுதிய பகுதி)

# THE ARASAN MATCH INDUSTRIES

**WE TWO FIREWORKS INDUSTRIES**

**THE ARASAN ALUMINIUM INDUSTRIES PVT. LTD.**

**VIJAYARAJAN TEXTILES LIMITED**

**SARASWATHI GANESAN FINANCE COMPANY LIMITED**

Regd. Office : Arasan Saraswathi Ganesan Complex,
18, Chairman A Shunmugam Road,
Sivakasi - 626 123 (India)

Phone : (Off) 23101 (4 lines)
(Res) : 72179 & 20117
Cable : "TAMI" "&" "WETWO"
Telex : 0448-201 Tami In
Fax : 04562-72105

(தமிழ்நாடு அரசு மகிழ்ந்து கொண்டாடி வருகின்ற சுதந்திரத் திருநாள் பொன்விழாத் தொடர்பான - விழாவினுக்கு முந்திய இரண்டு வார முக்கிய நிகழ்ச்சிகள் குறித்த செய்திகள் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.)

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால், 1971ஆம் ஆண்டில், நாகப்பட்டினம் மாவட்டம் தில்லையாடி கிராமத்தில் 'தில்லையாடி வள்ளியம்மை நினைவுச் சின்னம்' அமைக்கப்பட்டது. பிற்கால ஆட்சியாளர்களால் அது சரிவரக் கவனிக்கப்படாமல் பொலிவிழந்து சிதிலமடைந்துள்ளது.

எனவே, விடுதலைநாள் பொன்விழா ஆண்டின் நினைவாக அச் சின்னத்தைப் புதுப்பித்துச் சீரமைப்பதற்காக ரூ.5.91 இலட்சத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 3.8.97 அன்று ஒதுக்கீடு செய்தார்.

## சமத்துவபுரம்

சுதந்திரத் திருநாள் பொன்விழாத் தொடர்பாக உயர்நிலைச் செயல்பாட்டுக் குழுவின் கூட்டம் 4.8.97 அன்று அரசு தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தலைமையேற்ற முதலமைச்சர் அவர்கள் - "அனைத்துத் தரப்பினரும் நல்லிணக்கத்தோடு சமத்துவமாக ஒரே குடியிருப்பில் வாழும் வகையில் தமிழகம் முழுவதும் 50 இடங்களில் 'சமத்துவபுரம்' என்ற பெயரில் குடியிருப்புகள் உருவாக்கப்படும்" என்று குறிப்பிட்டார்.

## ருக்மணி லட்சுமிபதி அஞ்சல் தலை வெளியீடு

விடுதலைப் போராட்ட வீராங்கனைகளுள் ஒருவரான திருமதி ருக்மணி லட்சுமிபதியின் அஞ்சல் தலை 6.8.97ல் நடைபெற்றது.

திரு. ஜி. கருப்பையா மூப்பனார், எம்.பி., மத்திய அரசின் அஞ்சல் வாரிய உறுப்பினர் திரு. டி. பார்த்தசாரதி, திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி, திரு. டி.சதாசிவம், திரு. டி.டி.வாசு ஆகியோர் கலந்துகொண்ட அவ்விழாவிற்குக் கலைஞர் அவர்கள் தலைமையேற்றார்.

அவர் தமது தலைமை உரையில் - சென்னையில் இருந்த 'மார்ஷல் சாலைக்கு' 'ருக்மணி லட்சுமிபதி சாலை' எனப் பெயரிடத் தாமே முன்பு ஆணையிட்டதை நினைவுகூர்ந்தார்; திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் எம்.எல்.ஏ., வேண்டுகோளின்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்த தியாகிகளுடைய சரித்திரங்களையெல்லாம் எழுதத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

## தியாகிகள் ஓய்வூதியம்

திருச்சிராப்பள்ளியில் உள்ள வெஸ்ட்ரி மேநிலைப் பள்ளியில் 8.8.97 அன்று நடைபெற்ற சுதந்திரநாள் பொன்விழா கலைநிகழ்ச்சிகள் மற்றும் வேதாரண்யம் வரையிலான கலாச்சாரப் பயணத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

அங்கே அவர் பேசுகையில் - சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்குத் தமிழக அரசு வழங்கும் ஓய்வூதியம் இந்த ஆண்டு முதல் உயர்த்தப்படும் என்று குறிப்பிட்டார்.



## 18 தியாகிகளுக்கு நினைவுப் பரிசு

'வெள்ளையனே வெளியேறு' முழக்கம் எழுந்த நாள் நினைவுப் பேரணி, 9.8.97 அன்று காலையில் சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது.

மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் முன்னிலையில் மகாத்மா காந்தி சிலை அருகே நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமை தாங்கினார்.

அப்போது அவர் 18 சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் சிறப்பித்தார்.



# செய்திச் சரம்

இப்பேரணியில் 17 பள்ளிகளில் இருந்தும், 3 கல்லூரிகளில் இருந்தும் பல்வேறு வண்ண உடைகளில் மாணவ-மாணவிகள் அணிவகுத்து வந்தார்கள்.

## தியாகிகளுக்குத் தேநீர் விருந்து

இந்திய சுதந்திரத் திருநாள் பொன்விழாவையொட்டி, அவ்விழாவில் கலந்துகொள்ளப் புதுடெல்லி செல்லும் 50 தியாகிகளுக்குத் தேநீர் விருந்தளித்துக் கவுரவிக்கும் நிகழ்ச்சி 11.8.97 அன்று ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 55 தியாகிகள் கலந்துகொண்டனர்; அனைவருக்கும் தம் கரத்தாலேயே கதராடை அணிவித்துப் பொற்கிழி வழங்கி உரையாற்றினார் கலைஞர்.

தியாகிகள் சார்பில், திரு. டி.செங்கல்வராயன் அவர்கள் நன்றி கூறினார்.



திரு. ஜி. கருப்பையா மூப்பனார், எம்.பி., திருமதி சரோஜினிவரதப்பன் முதலான பலரும் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

தில்லி செல்லும் அத் தியாகிகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர், திரு. மு. தமிழ்க்குடிமகன் ஆகியோர் ரயில்வண்டி நிலையத்திற்குச் சென்று வழியனுப்பி வைத்தார்கள்.

## சுதந்திரத் திருநாள் - ஓராண்டு கால நிகழ்ச்சிகள் தொடக்கவிழா

சுதந்திரத் திருநாள் பொன்விழாவையொட்டித் தமிழகமெங்கும் ஓராண்டு காலத்திற்கு நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள் இசை நிகழ்ச்சி, மாநில விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றின் தொடக்க விழா - சென்னையில் உள்ள ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில் 14.8.97 அன்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

முதல்வர் கலைஞர் அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார்.

மேதகு ஆளுநர் செல்வி மீ. பாத்திமா பீவி அவர்கள் விளையாட்டு வீரர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்று, நான்காவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றவர்களைச் சிறப்பித்தார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றார்.



வணக்கத்திற்குரிய சென்னை மேயர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், விளையாட்டுப் போட்டிகளில் வென்றோருக்குப் பரிசளித்தார். இவ்வாறான விளையாட்டுப் போட்டிகள், மற்ற மாவட்டங்களிலும் தொடர்ந்து நடைபெறும்.

மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர், திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் வரவேற்புரையோடு தொடங்கிய மேற்கண்ட விழாவில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத் துணைத்தலைவர் திரு. பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள், விளையாட்டுப் போட்டிகள் பற்றிய விளக்கவுரையாற்றினார்.

விழா முடிவில், புகழ்பெற்ற இசையமைப்பாளர் 'கங்கை அமரன் குழுவினரின் மாபெரும் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

## சுதந்திரத் திருநாள் பொன்விழா

சுதந்திரத் திருநாள் பொன்விழா நாளான 15.8.97 அன்று காலையில், சென்னையில் - செயின்ட் ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்.

விழாவில் பங்கேற்ற சுதந்திரப் போராட்டத் தியாகிகள் 50 பேருக்குக் கதராடை அணிவித்து சான்றிதழ்களை வழங்கி



முதலமைச்சர் அவர்கள் பாராட்டினார். பின்னர், கோட்டையின் திறந்தவெளித் திடலில் திரண்டிருந்த மக்களிடை வந்து வாழ்த்துத் தெரிவித்தார்.

தலைமைச் செயலக முகப்பில் 'பொன்விழாச் சின்னம்' பெரிய அளவில் வைக்கப்பட்டிருந்தது. நெடிதுயர்ந்த கொடிக் கம்பமும் மலர்ச் சரத்தால் சுற்றி அலங்கரிக்கப்பட்டிருந்தது. தமது சுதந்திரதினப் பொன்விழா உரையில் - மத்திய அரசு சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அறிவிக்கும் ஓய்வூதியப்





பயனுக்குச் சமமாக மாநில அரசும் வழங்கும்; நாடகக் கலைஞர் தியாகி விசுவநாததாஸ் வாழ்ந்த இல்லம் அரசுடைமையாக்கப்படும்; அவர் வாரிசுகளுக்கு நிதியுதவி செய்யப்படும்; முன்னாள் அமைச்சர் கக்கனுக்கு மதுரையில் சிலை அமைக்கப்படும்; 554 கைதிகள் விடுதலை போன்றி அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்.

சுதந்திரத் திருநாள் பொன்விழாவை முன்னிட்டு கோட்டையில் கொடியேற்றி வைத்தபின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் - சிறந்த அதிகாரிகளுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும் விருதுகள் அளித்துச் சிறப்பித்தார்.

காது கேளாதோர், மனவளர்ச்சி குன்றியோர், உடல் ஊனமுற்றோர் உள்ள 4 பள்ளிகளைச் சேர்ந்த 100 சிறுவர் சிறுமியருக்கும் - மற்ற ஊனமுற்ற பள்ளிகளைச் சேர்ந்த 900 குழந்தைகளுக்கும் கலைஞர் அவர்கள் இனிப்பு வழங்கினார்.

சென்னை-எழும்பூரில் ரூ.68.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள காவல்துறை அதிகாரிகள் நட்பகத்தை முதல்வர் அவர்கள் திறந்துவைத்தார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பில், நூற்றாண்டு விழா நினைவு மண்டபத்தில் - மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பொன்விழாக் கலை நிகழ்ச்சிகளைத் தொடங்கிவைத்தார்.

## சென்னை - மாநகராட்சி

சென்னை மாநகராட்சியில் - சுதந்திரத் திருநாள் பொன்விழா நாளன்று வணக்கத்திற்குரிய மேயர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

அன்றைய தினம் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் - சென்னையில் ரூ.29.62 கோடி செலவில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் துவக்கப்படும்; சுதந்திரதினப் பொன்விழாவை முன்னிட்டு மாநகராட்சி சார்பில் இரண்டு வாரங்களுக்குக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்றெல்லாம் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் உள்ள மற்ற மாநகராட்சிகளிலும் வணக்கத்திற்குரிய மேயர்களே தேசியக் கொடியேற்றி வைத்துக் கொண்டாடினர்.

தொண்டர் படையினரின் 1,050 மீட்டர் நீளமுள்ள தேசியக் கொடியேந்திய பேரணியை, 'மெரினாவில்' முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்; மிக நீளமான அக்கொடியினை, சென்னை மாநகராட்சி வளாகத்தில் - வணக்கத்திற்குரிய சென்னை மேயர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

## புகைப்படக் கண்காட்சி

இந்தியாவின் 50 ஆண்டுகால முன்னேற்றத்தைச் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சியொன்றை, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் சென்னையில் கலைவாணர் அரங்கத்தில் துவக்கி வைத்தார்.

வரலாற்றுச் சின்னங்கள் பற்றிய புகைப்படக் கண்காட்சி ஒன்றினை - தலைமைச் செயலகத்தில் உள்ள கிளைவ் கட்டத்தில் செய்தி-சுற்றுலாத்துறைச் செயலாளர் திரு. எஸ். ராஜரெத்தினம் துவக்கி வைத்தார்.

## ஆளுநர் மாளிகை விழா

அன்று மாலை சுதந்திரத்தினப் பொன்விழாவை முன்னிட்டு மேதகு தமிழக ஆளுநர் செல்வி. மீ. பாத்திமா பீவி அவர்கள், ஆளுநர் மாளிகையில் ஏற்பாடு செய்திருந்த வரவேற்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், முப்படைத் தளபதிகள், திரு. ஜி. கருப்பையா மூப்பனார், எம்.பி., முதலான அனைத்துக் கட்சித் தலைவர்கள், அரசு உயர்அதிகாரிகள், நீதிபதிகள், பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன், முன்னாள் மகாராட்டிர ஆளுநர் திரு. சி. சுப்பிரமணியம், சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

தியாகிகளின் ஓய்வூதியம் உயர்த்தப்பட்டதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் - தமிழ்நாடு - தியாகிகள் சங்கச் சார்பில், மூன்றடி உயர வெள்ளிக் கைத்தடி ஒன்றை - முதலமைச்சர் அவர்களுக்குத் திரு. ஆர்.ஆர். தளவாய் வழங்கினார்.

சுதந்திரத் திருநாள் பொன்விழாவையொட்டி, தமிழகத்தில் உள்ள மாவட்டங்கள்தோறும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார்கள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927

**ஆசிரியர் மடல்**

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

அடிமை இருளில் இருந்த நம் இந்திய நாட்டினைச் சுதந்திர வெளிச்சத்திற்குக் கொண்டுவர - காந்தியடிகள் தலைமையில் அறவழியிலும், நேதாஜி தலைமையில் மறவழியிலுமாக நம் முன்னோர் முயன்று பாடுபட்டு வெற்றி கண்டு, ஐம்பதாண்டுகள் ஆகிவிட்டன.

காந்தியார் வழியிலிருந்து நேதாஜி மாறுபட்டிருந்தாலும்கூட, கடைசிவரை அவர் மீதான மதிப்பும் மரியாதையும் குறையாமலே இருந்தார்; முறைப்படி நாம் சுதந்திரம் பெற்றது 1947 ஆகஸ்ட் 15ஆம் தேதி எனினும், அதற்குமுன் 1943 அக்டோபர் 21ஆம் நாளே, இந்தியா சுதந்திரம் பெற்றுவிட்டதாகக் கூறி, சிங்கப்பூரில் தற்காலிக அரசை நிறுவினார் நேதாஜி; இது வரலாறு.

இவ்வாறான அரசியல் விடுதலையினைப் பெற்றுப் பொன்விழாக் கொண்டாடும் நாம் - பரிபூரணப் பொருளாதார விடுதலையைப் பெற்றாக வேண்டும். மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்கச் செய்தாக வேண்டும். அறியாமை, வறுமை, வேலையின்மை போன்ற குறைகளற்ற எதிர்காலத்தைக் கண்டாக வேண்டும்.

அந்நியரை விரட்டியடித்து அதிகாரபூர்வமாகச் சுதந்திரம் பெறப் பாடுபட்ட அளவுக்கு - அதை ஆனந்த சுதந்திரமாகக் கொண்டாடுமளவுக்கு அதன் பின்னாலே நாம் திட்டம் தீட்டிப் பாடுபட்டோமில்லை.

இந்த வகையில், அரசோடு ஒத்துழைக்க அவரவரும் முன்வந்தாக வேண்டும். ஊர்கூடித் தேர் இழுப்பது என்பார்களே? அப்படி ஒன்றுபட்டு, பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காப்போம். 'ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று' ஆனந்தப் பண் பாடுவோம்!




தூய

பட்டு

தூய

சரிகை





ராஜகம்பீரமான ஊதா...

செந்தூரப்பூபோல் சிகப்பு...

மங்களகரமான மஞ்சள்...

வான்வெளிபோல் நீலம்...

கற்பனைக் கடங்கா

அற்புத வண்ணங்களில்

நேர்த்தியான பட்டு,

நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்

தமிழ் நாடு கைத்தறி

HTA 7556 95

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

